கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(03.06.2018 - 03 ஆனி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 185, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

# ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

## திருத்தந்தையின் இம்மாத கருத்து

சமூக வலைத்தளங்கள் பிறரது மாற்றுக் கருத்துக்களை மதிக்கும், உள்ளடக்கும் பண்பை நோக்கின் சமூக வலைத்தளங்கள் பணியாற்றும்படியாக.... செபிப்போம்.

# மாணவர்களின் ஒழுக்கமும்,கல்வியும் சிறக்க நாம் எம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

**- திருத்தந்தையின் பிரதிநிதி -**



கடந்த 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் டிலாசால் அருட்சகோதரர்கள் இலங்கை மண்ணுக்கு காலடி எடுத்து வைத்து 150 வது ஆண்டினை அடைந்துள்ளதை நினைவு கூர்ந்து இறைவனுக்கு இம்மண்ணிலே பணியாற்ற ஒத்துழைப்பு வழங்கி வரும் ஆயர்கள், குருக்கள், சக துறவிகள், பொதுநிலையினர் அனைவருக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்ததோடு எதிர்வரும் வைகாசி மாதம் வரை ஜூபிலி ஆண்டை பிரகடனப்படுத்தும் நிகழ்வுத் திருப்பலி திருத்தந்தையின் பிரதிநிதி அதி வணக்கத்துக்குரிய வன்வெட்ட ஆண்டகையின் தலைமையில் டிலாசால் இல்லத்தில் இடம் பெற்றது. அன்றைய திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தையின் பிரதிநிதி இன்று மூவொரு கடவுளின் திருவிழாவைக் கொண்டாடுகின்றோம். மூவரும் ஒரே கடவுளாக செயற்படுவதற்கு ஒருவர் ஒருவரை அன்பு செய்கின்றனர். மூவருக்குள்ளும் தொடர்பாடல் இருக்கின்றது. இந்த நிலையை திருமுழுக்குப் பெற்ற நாமனைவரும் அடைய வேண்டும். இதனைத்தான் தூய டிலாசாலும் 300 ஆண்டுகளுக்கு முதல் செய்தார். தன்னிடம் இருந்த சொத்தை ஏழைகளுக்குக் கொடுத்து அவர்களின் நல்வாழ்விற்காக தன்னால் ஆன பங்களிப்பை செய்து டிலாசால் துறவற சபையை ஆரம்பித்தார்...

15


## கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் திருத்தந்தையை சந்தித்தார்.



கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கடந்த தினம் வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்து உரையாற்றினார்.

# திருத்தந்தை ஆறாம் பவுல் மற்றும் ரொமேரோ அவர்கள் புனிதர் நிலைக்கு....





திருத்தந்தை ஆறாம் பவுல் மற்றும் ஒஸ்கா ரொமேரோ அவர்களை ஐப்பசி மாதம் 14ம் திகதி புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கு, உரோமையில் இடம்பெற்ற கர்தினால் சங்க கூட்டத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் உள்ளிட்ட கர்தினால்மார்கள் தீர்மானித்துள்ளனர் என்பதை வத்திக்கான் செய்திகள் அறிவித்துள்ளன. மேலும், திருத்தந்தை பிரான்சிஸ்கோ ஸ்பிநெல்லி, அர். வின்சென்சோ ரொமானோ, அர். மரியா கெதரினா கெஸ்பர் மற்றும் நசரியா இக்னாசியா ஆகியோர்களையும் புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்காக...

15

## புனித லோரன்ஸ் ஆலயத்தின் வணக்க மாத திருவிழா



வெள்ளவத்தை புனித லோரன்ஸ் தேவாலயத்தில் நடந்த மாதாவின் மே மாத திருவிழாவின்போது பங்கு மக்களால் சேர்க்கப்பட்ட பணத்தில் தங்கத்தினால் ஆன கிரீடம் மாதாவிற்கு எமது பங்குதந்தை அருட்பணி மனோகுமாரன் நாகரத்தினம் அவர்களால் முடி சூட்டப்பட்டது இவ் விழாவில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

**தகவல் மற்றும் படம் :மைக்கல் பெர்னாண்டோபுள்ளே**

## அருட்பணி. ஐவன் பெரேரா அடிகளார் சரசவி கவுன்சிலுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.



கத்தோலிக்க கல்வி தொடர்பான தேசிய மற்றும் மறைமாவட்ட இயக்குனரான அருட்பணி. ஐவன் பெரேரா அவர்களை கொழும்பு பல்கலைக்கழக கவுன்சிலின் உறுப்பினராக கடந்த சித்திரை மாதம் 20ம் திகதி நியமித்துள்ளனர். பல்கலைக்கழக சட்டதிட்டங்களுக்கு அமைய, பல்கலைக்கழக (மானிய ஆணைக்குழுவினால் இவ்வுறுப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.

## அதிமேதகு தோமஸ் கர்தினால் குறே ஆண்டகையின் முத்திப்பேறு பெற்ற நிலைக்காக செபிப்போம்.



மறைமாவட்ட மட்டத்தில் அதிமேதகு தோமஸ் கர்தினால் குறே முத்திப்பேறுபெற்ற நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. இனிவரும் காலங்களில் அவருடைய முத்திப்பேறு பெற்ற நிலைக்கான உரோமாபுரியின் செயல்பாடுகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

15

## ஆயர் திருநிலைப்படுத்தல்

**23.06.2018**



**J.D அந்தனி ஜயகொடி அடிகளார்.**

**கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் 23ம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி.**

## கொழும்பு உயர்மறைமாவட்டப் பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களும் நடுவர்களும்









**பேரன்பும் மீட்பும் ஆண்டவரிடமே உள்ளன. (தி.பா 130)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்பணி. பெட்சிட் என்டனி (அமதி) அவர்கள் இறைபதம் அடைந்தார்.



வணக்கத்திற்குரிய அருட்பணி. பெட்சிட் என்டனி பர்னாந்து (அமதி) அடிகளார் வைகாசி மாதம் 21ந் திகதி இறைபதம் அடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் வைகாசி மாதம் 23ம் திகதி நடைபெற்றது. பேராதெனிய பல்கலைக்கழகத்தில் மனோதத்துவ விரிவுரையாளராகிய இவர் ஜா-எல கணுவன "சஹன மெதுர" நிலையத்தை கட்டியவர் ஆவர். மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமைப்பட்டவர்களுக்காக கட்டப்பட்ட இந்நடுநிலையம் அருட்தந்தையால் உருவாக்கப்பட்டதோடு இருபத்தி ஐந்து வருட காலமாக இவரால் பாரிய சேவைகள் ஆற்றப்பட்டன. இவரின் பூதவுடல் இவ் சஹன மெதுர நிலையத்திலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளது.



அண்மையில் டிலாசால் கல்லூரியில் தமிழ் - சிங்கள புதுவருடத்தையொட்டி நடைபெற்ற விழாவிற்கு பிரதான அதிதிகளாக வருகை தந்த கொழும்பு வலய உதவி அத்தியாட்சகர்களாகிய திருமதி. கங்கானி மற்றும் ஷ ாமா பெரேரா அவர்களையும் கல்லூரி அதிபர் நியூமன் முத்துத்தம்பி, பிரதி அதிபர் ஷெரார் ஜெயவர்த்தன அழைத்துச் செல்வதையும் படத்தில் காணலாம்.

**தகவல் : நியூமன் முத்துத்தம்பி, கல்லூரி அதிபர்.**

## பதுளை மறைமாவட்ட இளைஞர் கிரிக்கெட் / வலைப்பந்தாட்டம். 07.05.2018





திட்டமிட்டவாறு பதுளை மறைமாவட்டத்திற்கான ஆண்களுக்கான கிரிக்கெட் மற்றும் பெண்களுக்காக வலைப்பந்தாட்டச் சுற்றுத்தொடர் 07.05.2018 அன்று திங்கட்கிழமை மு.ப 9.00 மணியளவில் டயஸ் கிரிக்கெட் மைதானத்தில் ஆயர் மேதகு. J. வின்சென்ட் பெர்னாண்டோ SSS ஆண்டகையின் தலைமையில் ஆரம்பமாகியது. அருட்பணி. ஜகத் அடிகளார் இளைஞர்களை வழிநடத்தும் பொறுப்பில் இருப்பதால் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்கு இளைஞர் யுவதிகளையும் இணைத்து போட்டித்தொடர் சிறப்புடன் நடைபெற அயராது உழைத்தமை குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் அனைத்து பங்குகளிலிருந்தும் போட்டியாளர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோ-தரிகள் அனைவரும் பங்குபற்றியும் மைதானத்தையே கண்கொள்ளா காட்சியாக இருந்தது என்றால் மிகையாகாது. அனைத்து பேட்டியாளர்களும் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தினார். இறுதியில் பதுளை பங்கு ஆண்கள் கிரிக்கெட் அணியினர் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர். பெண்கள் அணியில் வலைப்பந்தாட்டத்திலே தியதலாவ அணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

**தகவல் : திருமதி. அன்னம்மா சகாயம் ஆசிரியர்.**

## டோகா கட்டாரில் வசிக்கும் "ஸ்டாப்ட் இலங்கை சர்வதேச பாடசாலையில்" கல்வி பயிலும் மாணவர்கள் முதல் முதலாக நற்கருணை பெற்றுக் கொண்டனர்.



டோகா கட்டாரில் திருச்செபமாலை ஆலயத்தில், 15 நாடுகளில் இருந்து 187 மாணவர்கள் முதல் நற்கருணை பெற்றுக்கொண்டனர். 7 இலங்கையர்கள் இதில் அடங்குவார்கள். பங்குத்தந்தையான ராலி கொன்சாகா அவர்கள் இலங்கை உதவிப் பங்குத்-தந்தை பென்னிட் டி ரணசிங்க அவர்கள் ஆகியோரை அப்பாடசாலை அதிபர் திரு. குமுது பொன்சேக்கா என்பவர் திருப்பலிக்கு நிறைவேற்ற அழைப்பு விடுத்திருந்தார். மேலும் பல நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி பெரும்-பாலான குருக்கள் திருப்பலியில் பங்குபற்றினர். டோகா கட்டாரில் வசிக்கும் இலங்கையர்கள் பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். முதல்நன்மை பொற்ற பங்கேற்றிய இலங்கை மாணவர்களது புகைப்படமே இது.

**படம் : சுரானி டில்ஹானி பெரேரா,**

**தகவல் : சரத் அதுகோரல**

## புனர்நிர்மானம் செய்யப்பட்ட கொச்சிக்கடை (பல்லன்சேனை) ஆலயத்தை கர்தினால் அவர்கள் ஆசீர்வதித்தார்.



பல்லன்சேனை பங்கிற்கு உரிய கொச்சிக்கடை தூய ஆவியின் திருத்தலம் புணர்நிர்மானம் செய்யப்பட்டு, கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டது. பங்குத் தந்தை டோனி பித்து அவர்களது அர்ப்பணிப்புடன் மற்றும் வழிகாட்டலுடனும், (திருச்செபமாலை சபையின்) அருட்பணி. அனில் பீரிஸ் அவர்களின் பூரண பங்களிப்புடன் இக்கட்டுமான வேலைப்பாடுகள் குறுகிய 2 வருடகாலத்திற்குள் பூர்த்தியாக்கப்பட்டது.

## நற்செய்திப் பெருவிழா




கொழும்பு புனித யோசேவ்வாஸ் மன்றம் வருடா வருடம் நடாத்தும் டிவைன் ஞான ஒடுக்கத்திற்குப் பதிலாக இவ்வருடம் மாபெரும் நற்செய்திப் பெருவிழாவை ஒழுங்கு செய்திருந்தார்கள். இதற்கிணங்க இந்திய கர்நாடகா பெங்களுர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை பிராங்கிலின் டி சூசா என்ற அடிகளார் இலங்கைக்கு பலமுறை வருகைத் தந்தவர். புகழ்பெற்ற போதகரான தரகர் அவர்களும் இணைந்து இந்நற்செய்தி வழிபாட்டை நடத்தினார்கள்...

15

## இரத்ததானம் – 22.04.2018 –



பதுளை புனித மரியன்னை பேராலயத்தில் கடந்த 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் இரத்த தானம் வைபவம் இடம்பெற்றது. இதில் பெரும்பாலான மக்கள் கலந்து தமது பங்களிப்பை செய்தனர். பங்குத்தந்தை ஜீட் சில்வா தலைமையில் வின்சென்ட் டி போல் சபை அங்கத்தவர்கள் இந்நிகழ்வை பொறுப்பேற்று வெற்றிகரமாக செயற்படுத்தினர்.

**தகவல் : திருமதி. அன்னம்மா சகாயம் ஆசிரியர்.**

## மறைக்கல்விப் பணியக அறிவித்தல்கள்

கொழும்பு உயர்மறைமாவட்டத்தினால் ஞாயிறு மறைப்பாடசாலை மாணவர்களுக்கான திருவிவிலியப்-போட்டி மற்றும் பேச்சுப்போட்டிகள் கீழ்ப்பிரிவு மேற்ப்பிரிவு என இரு பிரிவுகளாக வைகாசித் திங்கள் நடாத்தப்பட்டன. இப்போட்டிகளில் 1ம், 2ம், 3ம் இடத்தை பெற்ற மாணவர்கள் தேசிய போட்டிக்கு தெரிவாகி உள்ளனர். வெற்றிப்பெற்ற மாணவர்களை ஞான ஒளி வாழ்த்தி நிற்கின்றது. வெற்றிப் பெற்ற மாணவர்கள் மற்றும் நடுவர்கள் விபரங்கள் பின்வருமாறு:

**திருவிவிலியப்போட்டி – கீழ்ப்பிரிவு – தரம் 6, 7, 8**

- 1ம் இடம் : கோட்டை வட்டாரம் கிருலப்பனை பங்கைச் சேர்ந்த மாணவர்கள்
- 2ம் இடம் : மத்திய கொழும்பு வட்டாரம் கொம்பனித்தெரு பங்கைச் சேர்ந்த மாணவர்கள்
- 3ம் இடம் : வடகொழும்பு வட்டாரம் மட்டக்குளி பங்கைச் சேர்ந்த மாணவர்கள்

**திருவிவிலியப்போட்டி – மேற்ப்பிரிவு – தரம் 9, 10, 11**

- 1ம் இடம் : வடகொழும்பு வட்டாரம் கிரான்பாஸ் பங்கைச் சேர்ந்த மாணவர்கள்
- 2ம் இடம் : கோட்டே வட்டாரம் கிருலப்பனை பங்கைச் சேர்ந்த மாணவர்கள்
- 3ம் இடம் : மத்தியகொழும்பு வட்டாரம் மாளிகாவத்தை பங்கைச் சேர்ந்த மாணவர்கள்

**பேச்சுப்போட்டி – மேற்ப்பிரிவு – தரம் 9, 10, 11**

- 1ம் இடம் : வட கொழும்பு வட்டாரம் புதுச்செட்டித்தெரு பங்கைச் சேர்ந்த கோவல்ஸ்க கொரினா பர்னாந்து
- 2ம் இடம் : கோட்டை வட்டாரம் இராஜகிரிய பங்கைச் சேர்ந்த R. M. ஜீலீனா
- 3ம் இடம் : வட கொழும்பு வட்டாரம் செக்கடித்தெரு பங்கைச் சேர்ந்த D. வேணி பிரவீனா

**பேச்சுப்போட்டி – கீழ்ப்பிரிவு – தரம் 6, 7, 8**

- 1ம் இடம் : தென் கொழும்பு வட்டாரம் வெள்ளவத்தை பங்கைச் சேர்ந்த வலன்ரைன் அமலராஜா ஜரிங்கன்
- 2ம் இடம் : வட கொழும்பு வட்டாரம் புதுச்செட்டித்தெரு பங்கைச் சேர்ந்த தேவ ராணி
- 3ம் இடம் : மத்திய கொழும்பு வட்டாரம் மாளிகாவத்தை பங்கைச் சேர்ந்த பிரிசேல் நிவேதிதா சாம்சன்

**நடுவர்கள்:**

**திருவிவிலியப்போட்டி – கீழ்ப்பிரிவு**

1. அருட்சகோதரி ராணி அக்னஸ்
2. செல்வி டெய்சி ஜோசப் (ISA)
3. செல்வி மதியழகி ஜோர்ஜ்

**திருவிவிலியப்போட்டி – மேற்ப்பிரிவு**

1. அருட்பணி ரவிகாந்த் (CMF)
2. அருட்சகோதரி தனுஷியா (A/C)
3. திரு. ரொமியூலஸ் பர்னாந்து

**பேச்சுப்போட்டி – கீழ்ப்பிரிவு**

1. அருட்சகோதரி தனுஷியா (A/C)
2. செல்வி டெய்சி ஜோசப் (ISA)
3. செல்வி மதியழகி ஜோர்ஜ்

**பேச்சுப்போட்டி – மேற்ப்பிரிவு**

1. அருட்பணி ரவிகாந்த் (CMF)
2. அருட்சகோதரி ராணி அக்னஸ்
3. திரு. ரொமியூலஸ் பர்னாந்து

**தகவல் : மறைக்கல்விப் பணியகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඕලි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
03 ஆனி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# "நமது ஆன்மப் பசியையும் இதயத் தாகத்தையும் தணிக்க வல்லவர் இயேசுகிறிஸ்து ஒருவரே".

"வாழ்வு தரும் உணவு நானே, என்னிடம் வருபவருக்குப் பசியே இராது என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது" (யோவா.6:35).

உணவும் தண்ணீரும் நமது உடலின் பசியையும் தாகத்தையும் தணிக்க வல்லது. ஆனால் நமது ஆன்மப் பசியையும் இதயத் தாகத்தையும் தணிக்க வல்லவர் இயேசுகிறிஸ்து ஒருவரே. நிலத்தின் விளைவினாலும் மனித உழைப்பினாலும் தான் அப்பமும் இரசமும் கிடைக்கிறது. இவை தாம் கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறி நமது ஆன்ம உணவாகவும் பானமாகவும் அமைகின்றன. அப்ப இரசத்தின் வழியாக இயற்கை முழுவதும் இறைவனுக்குள் காணிக்கையாக்கப்படுகின்றன. அத்துடன் மானிட உழைப்பும் மாண்படைகிறது. அப்பமும் இரசமும் உணவுப் பொருட்கள். உயிர்வாழ உணவு தேவை. எனவே இவ்வுணவுப் பொருட்கள் வழியாக நம் உயிரையே இறைவனுக்கு நன்றியறிதலாக கொடுக்கின்றோம். நாமளிக்கும் அப்பமும் இரசமும் நம்மிலே விலை குறைவுள்ளன. ஆனால் அவை கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறுவதால் நிகரற்ற மதிப்பைப் பெறுகின்றன.

ஆழமான முறையில் கிறிஸ்துவின் அப்ப இரசத்தில் கிறிஸ்துவின் பிரசன்னம் உணரப்படுகிறது. இந்தப் பிரசன்னம் செயல் பிரசன்னம். இது என்ன செயல்களை நற்கருணைக் கொண்டாட்டத்தில் ஆற்றுகின்றது என்று பார்க்கும் வேளையில் முதன்முதலாக வருவது "இயேசு தந்தைக்கு செலுத்தும் புகழ்ச்சி" தன்னுடைய மறையுடலாகிய இறைமக்களின் கூட்டத்தோடு இணைந்து தந்தைக்குபுகழ் செலுத்துகின்றார். இந்தப் புகழ்ச்சி தான் வழிபாடுகள் அனைத்திற்கும் தலையானதாக அமைகின்றது.

தன்னில் வெளிப்பட்ட இறை அன்பு இந்த வழிபாட்டுச் சமுதாயத்திலும் வெளிப்படுகிறது என்ற தோழமையோடு அவர் புகழ் செலுத்துகிறார். புகழ் செலுத்துதல் என்பது ஏதோ வாய்விட்டுக் கூறும் சில வார்த்தைகள் மட்டுமல்ல இயேசு தன்னையே கையளிப்பதன் மூலம் தன்னுடைய புகழ்ச்சியைக் செலுத்துகிறார். இயேசுவின் இந்தத் தற்கையளிப்பில் இணைகிறது அவரின் மறையுடலாகியத் திருச்சபை.

இயேசுவின் பிரசன்னம் நற்கருணையில் செயல்படும் விதத்தை வைத்துக்கொண்டு அப்ப இரச அடையாளங்கள் என்ன மாற்றம் அடைகின்றன என்பதைக் கூறி விடலாம். அப்ப இரசத்தின் நோக்கமே இங்கு மாறுகிறது. உணவாகவும் பானமாகவும் இருந்த அப்ப இரசம் இங்கு தன்னிகரில்லா வேறு ஒரு பணியைச் செய்கிறது. உடலுக்கும் உள்ளத்திற்கும் அருமருந்தாக அமுதமாக மாறுகின்றது. அந்த அப்பத்தையும் இரசத்தையும் உண்பவர்கள் முடிவில்லா வாழ்வுக்கு சொந்தக்காரர்களாக மாறுகின்றனர்.

தந்தை மகன் தூய ஆவியுடன் உள்ள உயிர் உறவின் பகுதியாக மாறுகின்றனர். எனவே புதிய வாழ்வையும், புதிதாகப் பிறக்கின்ற அனுபவத்தையும் தருகின்ற அடையாளமாக மாறுகின்றது. இந்த புரிந்து கொள்ள முடியாத புதுவகையான தன்மையைத் தான் இயேசுவின் உடலாக, இரத்தமாக மாறுகின்றது என்னும் நம்பிக்கை உண்மையை காலகாலத்திற்கும் கத்தோலிக்கச் திருச்சபை உணர்ந்து கொண்டாடி வருகின்றது.

**இறையாசீருடன் ஆசிரியர்**



# இதயத் துடிப்பு

**துடிப்பு 1:**

செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் ஒரே மகனாகப் பிறந்து. உலக வாழ்வை வெறுத்து துறவியானவர் பட்டிணத்தார். "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே" (உலகை விட்டு செல்லும்போது காதில்லாத ஊசிகூட உன்னுடன் வராது) என்றதுமன்றி, பெற்ற தாயையும் விட்டுப் பிரிந்து சென்றார். தாயின் இறுதிக்காலம் வந்தது. அவள் நெஞ்சில் மகன் பட்டிணத்தார் நிறைந்திருந்தார். என் மகன் வருவான், அவன் கொள்ளி வைத்தால்தான் இந்தக் கட்டை எரியும் என்றபடியே உயிரை விடுகிறார். நாடோடியாகத் திரியும் பட்டிணத்தாரை எங்கே கண்டுபிடிப்பது? உறவினர் பட்டிணத்தாரின் தாய் உடலை எரிக்க முற்படுகின்றனர். ஆனால் விறகுக் கட்டைகளை நெருப்பு தீண்டவில்லை. தாய் இறந்ததை பட்டிணத்தார் அறிகின்றார்... சிதையில் எரியூட்டத் தயாராக இருக்கும் தாயாரின் உடலை தரிசிக்கின்றார்! உடல்மேல் அடுக்கப்பட்டிருந்த விறகுக் கட்டைகளை அகற்றச் சொல்லிவிட்டு பச்சை வாழை மட்டைகளை அடுக்கச் சொல்கிறார். முன்னையிட்ட தீ முப்புறத்திலே... எனத் தொடங்கி, யானுமிட்ட தீ மூழ்க மூழ்கவே எனப்பாடி முடிக்கிறார். பச்சை வாழை மட்டை பற்றி எரிய அன்னையின் உடலும் எரிகிறது. ஒரு தாயின் இதயத்துடிப்புக்கு இவ்வளவு வல்லமை உள்ளதா என வியக்கும் நாம்... நம்மையும் தம் இதயத்தில் பதித்து வைக்கும் ஒரு தாயை இங்கு நினைவுகூறக் கடமைப்பட்டுள்ளோம். அது, தாய் மரியாவின் மாசற்ற இதயம். தாய் வயிற்றில் நாம் உருவானது முதலே நமக்காகத் துடித்துக்கொண்டிருக்கிறது தாய் மரியின் இதயம்.

**துடிப்பு 2:**

ஆனி 11, 1963. தெற்கு வியட்நாம் சைகோனில் காலை 11 மணி அளவில் வயது முதிர்ந்த புத்த துறவி திச் க்வாங் டக் நகரின் இரு பாதைகள் சந்திக்கும் இடத்திற்கு இரண்டு சீடர்களுடன் காரில் வந்து இறங்கினார். ஒரு சீடர் தரையில் ஒரு தலையணையை வைக்க, அந்த 66 வயது புத்த துறவி, தலையணையின் மேல் சப்பணமிட்டு தியான நிலையில் அமர்ந்தார். சீடர்கள் இருவர் ஒரு பிளாஸ்டிக் கேன் நிறைய பெட்ரோலை எடுத்து வந்தனர். துறவியின் மேல் பெட்ரோலை ஊற்றி, தீக்குச்சியை உரசிப்போட்டனர். பொப் என்ற வெடிச்சத்தத்துடன உடல் பற்றி எரிந்தது. அந்தத் துறவி அபயக்குரல் எழுப்பவில்லை. உடலை அசைக்கவில்லை, துடிக்கவில்லை. உடல் எரிந்துகொண்டிருந்தது. முற்றும் எரிந்த உடலை அப்படியே போர்வையால் போர்த்தி, தயாராக எடுத்து வந்த சவப்பெட்டிக்குள் வைத்து, புத்த கோவிலுக்கு எடுத்துச் சென்றனர். ஐந்து நாற்களுக்குப் பின் இறுதிச் சடங்கிற்காகச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. போர்வை அகற்றப்பட்டபோது வியப்புறும் வண்ணம் அவரது இதயம் மட்டும் எரிந்து சாம்பலாகாமல் அப்படியே இருந்தது. மறுபடியும் எரியூட்டி அந்த இதயத்தை எரித்தனர். தெற்கு வியட்நாமில் புத்த மதத்திற்கும், துறவிகளுக்கும் எதிராக நடைபெற்ற அடக்குமுறைகளை எதிர்த்தே இத்துறவி தீக்குளித்தார். நான் என் கண்களை மூடுமுன் என் பார்வையை புத்தர்மீது செலுத்துகிறேன். இந்நாட்டு மக்களுக்கு சம அளவு மத உரிமை வழங்க வேண்டுகிறேன் என்று துறிவியின் கடைசிக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

**துடிப்பு 3:**

ஆனி மாதம் இயேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். தம்மையே பலியாக்கி, தம் திரு உடலையே உலக மாந்தர்க்கு உணவாக்கி மாந்தர்மேல் கொண்ட அன்பினால் பற்றி எரிந்து கொண்டிருப்பதுதான் இயேசுவின் திரு இதயம். நம் வீட்டில் திரு இருதயப்படம் ஸ்தாபித்திருக்கிறோமா? வெள்ளிக்கிழமை தோறும் இல்லத்தில் திரு இதய செபம் சொல்லுகிறோமா? ஆண்டிற்கொருமுறை குருவானவரை நம் இல்லத்திற்கு அழைத்து இதயப் படத்தை புதுப்பிக்கின்றோமா? எனச் சிந்திப்போம்.

**"திருச்சபையே உயிருள்ள நீரூற்று. அது கிறிஸ்துவின் இதயத்தினின்று நம்மீது பாய்கிறது"**

**– திருத்தந்தை ஹிப்போலிடஸ்.**

## உண்மை உரைக்கும் கமிலஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழா



இயேசுவின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழா ஒரு தியாகப் பெருவிழா.

**நான்கு வகையான தியாகங்கள் உண்டு:**

1. உள்ளத்திலிருந்து இழத்தல்
2. உள்ளதையெல்லாம் இழத்தல்
3. உள்ளதையெல்லாம் இழந்து உடலையும் இழத்தல்
4. உடலையும் இழந்து உயிரையும் இழத்தல்

இஸ்ராயேல், மக்கள் மாடுகளை, வெள்ளாட்டுக் கிடாய்களை, கன்றுக் குட்டிகளை கடவுளுக்குப் பலியிட்டார்கள். அவர்களிடம் உள்ளதைக் கடவுளோடும், மனிதர்களோடும் பகிர்ந்துகொண்டார்கள். ஆனால் இயேசுவோ அவரிடமிருந்த அனைத்தையும், உடல், உயிர் அனைத்தையும் மக்களுக்குக் கையளிக்க முன்வந்து தியாகச் சிகரமானார். இந்தத் திருவிழா அர்த்தமுள்ள திருவிழாவாக நமக்கு அமைய வேண்டுமானால் நாம் இயேசுவைப்போல தியாக வாழ்வு வாழ முன்வர வேண்டும், நாம் உட்கொள்ளும் நற்கருணை நமது வாழ்வைத் தியாகத்தால் பற்றி எரியச் செய்யவேண்டும்.

எங்கே தியாகம் இருக்கிறதோ அங்குதான் மீட்பு இருக்கும், விடுதலை இருக்கும், சுதந்திரம் இருக்கும்.

**விதை மண்ணில் விழுந்து மடிந்தால்தான் செடி முளைக்கும்.**
**மூங்கில் காயப்பட்டால்தான் இசை பிறக்கும்.**
**ஊதுவர்த்தி எரிந்தால்தான் மணம் பிறக்கும்.**

வீட்டிலுள்ளவர்கள் ஒருவர் மற்றவர்க்காகத் தியாகம் செய்ய முன்வரும் போதுதான் அந்த வீட்டுக்குள்ளே வாழ்வு பிறக்கும், நீதி பிறக்கும், அமைதி பிறக்கும், மகிழ்ச்சி பிறக்கும், இறையரசு பிறக்கும். (உரோ. 14:17).

இந்தத் திருவிழா தொட்டும் தொடாத, பட்டும் படாத திருவிழாவாக இல்லாமலிருக்க நாம் ஒவ்வொருவரும் தியாக சிந்தனையோடு வாழ முற்படுவோம்.

## "வாழ்வு தரும் உணவு நானே, என்னிடம் வருபவருக்குப் பசியே இராது, என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது" (யோவா. 6:35)

**அன்புத் தெய்வமே, ஆருயிர் அர்ப்பணித்து அடிமையானவரே,**
**அமைதியின் இருப்பிடமாய் அடியவர் உள்ளம் எழுந்தருள்வாய்,**
**அன்பின் அடையாளமாய் ஆன்மீக உணவானவரே,**
**அடியோர் நாம் வாழ ஆருயிர் அளித்து எம்**
**அகம் எழுந்தருள்வாய்!**

**இறைத்தந்தையின் சித்தம் சிரமேற்கொண்டு**
**இவ்வுலகம் வந்தவரே**
**இனிய அன்புத் தேவனாய் எம் இதயங்களில்**
**எழுந்தருள்வீரே உம்**
**இனிய விருந்தில் இறைமக்கள் நாம் பங்குபெற**
**இலவசமாய் இருப்பிடம் தந்து இதய அமைதி எமக்கருள்வாய்!**

**உன்னோடு உறவாட உன் உடல் உணவாய் ஈந்தீர்**
**உறவின் பாலமாய் உறுதியுடன்வாழ உம்முயிர் ஈந்தீர்**
**உலகெங்கும் உம் சாட்சியாய் நாம் வாழ உள்ளிருந்து செயல்பட்டீரே**
**உயிரினில் உயிராய் கலந்து உம்மில் நாம்**
**உயிர்வாழ உரமூட்டுவீர்!**

**தேவனின் திருமகனாய் திருவுருவெடுத்த**
**தெய்வப் புதல்வனே, உன்னை**
**தேடும் அனைவருக்கும் திருவிருந்தாய் ஆனவரே,**
**தேசமெங்கும் உன் பிரசன்னம் திகழ திருவருள் புரிவாய்**
**தேவன் ஈந்த திருவுருவே தெய்வீகத் திருவிருந்தே!**

**வானகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வளிக்கும் திருவுணவே**
**வாழ்வளிப்பாய் வள்ளலே வையகம் வாழ வரமருள்வாய்**
**வானக அப்பமாய் வையக உணவாக வந்தருள்வீர்**
**வழியாகி, ஒளியாகி, வாழ்வாகி, உயிராக**
**உணவாக வந்தருள்வீர்!**

**அழிந்து போகும் உணவிற்காக உழைக்க**
**வேண்டாமென உரைத்தவரே**
**அழியா உணவிற்காக உழையுங்கள் என்று ஆழமாய் சொன்னவரே**
**அவ்வுணவை மானிட மகன் உங்களுக்கு கொடுப்பாரென**
**வாக்குப் பண்ணினீரே – எம்**
**அனைவரின் ஆன்ம உணவாய் வந்து எம்மை ஆசீர்வதிப்பீரே!**

**எனது சதை உண்மையான உணவு எமது இரத்தம்**
**உண்மையான பானம் என உரைத்தீரே,**
**என்றும் நாம் உன் உடல் உண்டு உயிரூட்டம் பெற்றிட**
**எழுந்தருள்வாய்**
**எம்பிரானே எம் இதயக் கோவிலிலே,**
**எல்லாமாக நீயிருந்து நிதமும் உம்மில் நாம் உயிர் வாழ உம்**
**உடலை எம்முணவாய் மாற்றிடுவாய்!**

**தியாகச் செம்மலே திருவிருந்தாய் திரு உருவெடுத்தீரே,**
**தினம் தினம் நாவில் வருபவரே திருவிருந்தாய் ஆனீரே**
**திக்கற்ற மக்களுக்கு தேவனாய் திரு உணவாய்**
**தினமும் ஆனவரே**
**திவ்விய யேசுவே உம் தியாகத்திற்கு ஈடு இணையில்லையே**

**தேவநற்கருணையிலே! திரு உணவாய் ஆன தெய்வீக வேந்தனே**
**தேவன் உம்மில் தினமும் நாம் வாழ எம் ஆன்மிக**
**அருமருந்தாய் ஆனவரே**
**தேடும் அன்புத்தெய்வமே! தெய்வீக உயிர் தந்து**
**எம்மை காப்பாயே**
**தேசமெல்லாம் உம் பிரசன்னம் திகழ உன் தெய்வத்திருவடி**
**வணங்கினோம்**
**தாசர்கள் நாம் தரணியில் வாழ வாழ்வளிப்பாய் வள்ளளே**

**நானே வானின்று இறங்கி வந்த உணவு இதை யாராவது**
**உண்டால் என்றுமே வாழ்வான் என**
**நாம் வாழ வாழ்வளிக்க வந்த நல்லவரே தேவனே,**
**நாம் பெற்ற பாக்கியம் நாதன் உன்னை எம் நல் உணவாய் பெற**
**நாள்தோறும் நாம் எம் ஆன்மீகப் பயணத்தில் பயணிக்க**
**நல்லுணவாய் மாறிடுவாய்– எம் நல்ல தேவனே,**

**மானிட மகனின் சதையும் இரத்தமும் மானிட உணவாக**
**மகிழ்வுடன் அளித்தீரே**
**மாந்தர் நாம் மண்ணுலக வாழ்விற்கல்ல, விண்ணுலக**
**வாழ்விற்கேற்ப வாழ – உம்**
**மைந்தர்கள் எமக்காய் நீர் தந்த உன் உடலும் இரத்தமும்,**
**வையகம் வாழ உம் மக்களின் ஆன்ம உணவாகப் பெற**
**– நாம் பெற்ற பாக்கியம் தான் என்னவோ!**

அருட்சகோதரி. டெலாறோஸ். அ.கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் திரு இருதயத்தின் பன்முகங்கள்











### தொடக்கமாக...

ஒவ்வோர் ஆண்டும் ஆனி மாதம் என்றாலே நமக்கெல்லாம் நினைவுக்கு வருவது இயேசுவின் திரு இருதயத் திருநாள். அத்திரு இதயத்தின் பன்முகங்களை நாம் நன்கு தியானித்து பலன் அடைவது சாலச் சிறந்தது ஆகும்.

நாசரேத்தூர் இயேசுவையும், அவரின் திரு இருதயத்தின் பன்முகங்களையும் கண்டுணர்ந்து புரிந்து கொள்வதற்கானத் தேடல் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் புதிதான ஒன்றல்ல. தொடக்ககாலத் திருஅவையிலே இத்தகைய தேடல் நடந்திருக்கின்றது. இதற்குரிய சான்றுகள் நற்செய்தியில் பல உள்ளன. நற்செய்தியாளர்கள் அவர்களது சூழலுக்கேற்ற வகையில் இயேசுவின் திரு இருதயத்தைப் பற்றிய செய்திகளை மக்களுக்கு அர்த்தமுள்ள விதத்தில் வழங்குவதற்கான முயற்சிகளை எடுத்துள்ளார்கள். உதாரணமாக, இயேசுவை இதயத்தில் தாழ்ச்சியும், சாந்தமும் கொண்டவராக (மத் 11:29), மக்கள் மீது பரிவிரக்கம் கொண்டவராக (மத் 14:14, 15:32), குழந்தைகள் மீது அக்கறை கொண்ட ஒரு தாயாக (மத் 24:37) மத்தேயு தனது நற்செய்தியில் விளக்குகிறார்.

### மனித மற்றும் தெய்வ இதயம்

மேலும் மத்தேயு இயேசுவுக்கென பல சிறப்புப் பெயர்களைச் சூட்டுகிறார். இயேசுவே கிறிஸ்து (மத் 1:1, 16-18, 2:4, 11:2, 16:16, 26:63), தாவீதின் மகன் (மத் 1:1, 9:27, 12:23, 15:22, 20:30-31, 21:9, 15), ஆண்டவர் (kyrios) (மத் 8:25, 14:30, 15:22, 15:25, 17:25, 2-:30-31), கடவுளின் மகன் (மத் 3:17, 17:5, 8:29, 21:37-38, 26:63, 27:54) மற்றும் அதிகாரமுள்ள மெசியா (மத் 5:21-48, 7:28-29, 11:27, 28:18). நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மெசியா இயேசுவே என்றும், முதல் ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள எல்லா இறைவாக்குகளும் அவரில் நிறைவேறி இருக்கின்றன என்றும் விளக்கிக் காட்டுகிறார்.

இயேசுவை முதல் ஏற்பாட்டின் நிறைவாக மட்டுமல்லாமல், கடவுளுக்கே நிகரானவராகக் காண்பிப்பதுதான் மத்தேயுவில் சிறப்பிடம் பெற்றிருக்கின்றது. கடவுளுக்கே உரிய "ஆராதிப்போம்" என்ற வார்த்தையை இயேசுவுக்கும் பயன்படுத்தி இருப்பதிலிருந்து இது தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. (மத் 2:2, 8:2, 11, 9:18, 14:33, 15:25, 20:20, 28:17). இத்தகைய கிறிஸ்தியல் பெயர்களிலிருந்தும் இயேசுவின் இதயத்தைப் பற்றிய செய்திகள் நமக்கு நிறையவே கிடைக்கின்றன. இவ்வாறு இயேசுவின் இதயம் வெறும் மனித இதயம் மட்டுமல்ல, அது இறைவனின் இதயமாகவும் இருக்கின்றது.

### கனிந்த இதயம்!

நற்செய்தியை வாசிக்கும் போது இயேசுவின் இதயத்தில் இருந்த துணிச்சலை நம்மால் உணர முடிகிறது. அவர் செய்த நற்செய்திப் பணிக்கு எண்ணற்ற எதிர்ப்புக்கள் வந்த போதிலும் அவையனைத்தையும் இயேசுவின் இதயம் துணிச்சலோடு சந்தித்தது. குறிப்பாக யோவானின் நற்செய்தியில் அவரைப் பிடிக்க வந்த கூட்டத்திடம் அவர் கேட்ட கேள்வியும் ("யாரைத் தேடி வந்தீர்கள்?"), அவர்கள் சொன்ன பதிலுக்கு இயேசு சொன்ன மறுபதிலும் ("நான்தான்") இயேசுவின் மனத்துணிச்சலை தெளிவாக நமக்கு விளக்குகின்றன. (யோவா 18:4-8).

### செபித்த இதயம்

இயேசுவின் பணிவாழ்வோடு பின்னிப் பிணைந்திருந்தது அவரின் செப வாழ்வு. அவரது இதயம் என்றும் இறைவனை நம்பி வாழ்ந்த இதயம். இறைவனோடு செபத்தில் உறவு கொண்ட இதயம். இறைவனின் திருவுளத்தை செபத்தில் கண்டறிந்த இதயம். இவ்வளவு உன்னதமான செப வாழ்வை தம் சீடர்களுக்கும் எடுத்துத் போதித்த இதயமது (மத் 6:9-13). இச்செபத்தில்தான் இறைவனை அப்பாவாகவும், மானிடர் அனைவரையும் தமது சகோதர - சகோதரிகளாகவும் கண்டு கொண்டது இயேசுவின் இதயம். அதுவே இறையரசின் அடித்தளமாகவும் அமைந்தது.

### மன்னித்து மறந்த இதயம்!

தமது சீடரில் ஒருவராக பேதுரு இயேசுவிடம், "எத்தனை முறை ஒருவரை தான் மன்னிக்கலாம்" என்று கேட்டார். அதற்கு இயேசு "எழுபது முறை ஏழு முறை" என்றார். இதற்குப் "பலமுறை மன்னித்தல் வேண்டும்" என்று பொருள். இயேசு பிறர் குற்றங்களை மன்னிக்க வேண்டும் என்று போதித்ததோடு, தமக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களுக்காகவும் செபித்தார். உதாரணமாக, தம் சீடர்களுக்கு அவர் செபிக்கக் கற்றுத் தந்தபோது, "எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பதுபோல, எங்கள் பாவங்களையும் பொறுத்தருளும்" (மத் 6:12), என்று இறைவனிடம் செபிக்கச் சொன்னார். எதிரிகளை மன்னிப்பதோடு, அன்பு செய்யவும் அழைத்தார் (லூக் 6:27). தாம் அனைவராலும் கைவிடப்பட்டு, அநியாயமாக சிலுவையில் அறையப்பட்டுத் தொங்கியபோது, தமது எதிரிகளை மன்னித்து, அவர்களுக்காகத் தம் தந்தையிடம் செபித்தார். "தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னியும்".

### வாழ்த்தி வியந்த இதயம்

தமது பணி வாழ்வில் மக்களின் நம்பிக்கையைப் பார்த்து பலமுறை பலரை இயேசு வாழ்த்துகிறார் மற்றும் பாராட்டுகிறார். ஏன் அவர்களின் நம்பிக்கையைப் பார்த்து அவர் வியந்து பாராட்டுகிறார். (மாற் 7:24-30, மத் 8:5-13, லூக் 7:9).

### கோபித்துச் சபித்த இதயம்

பரிசேயரின் பிடிவாத உள்ளத்தைக் கண்டு இயேசு வருத்தமும், சினமும் கொண்டார் (மாற் 3:5). தம்மையும், தாம் போதித்த நற்செய்தியையும் நம்பாமல், ஏற்றுக்கொள்ளாமல் சந்தேகித்த மறைநூல் அறிஞரையும், சதுசேயரையும் இயேசு கோபித்ததோடு அவர்களைச் சபிக்கவும் செய்தார் (மத் 23:4-33).

### தன்னை மறுத்து, சிலுவையைச் சுமந்த இதயம்

இயேசு தம் வாழ்வு முழுவதையுமே, பிறரை மையமாக வைத்து வாழ்ந்தார். பிறர் மைய வாழ்வே இறை மைய வாழ்வு. சிறப்பாக "என் பிறன் யார்?" என்பதற்கு நல்ல சமாரியர் கதையில் தன்னிடமுள்ள அனைத்தையும் கள்வர்களிடம் இழந்து, அடிக்கப்பட்டு, இரத்தக்கறை படிந்த காயங்களோடு, யாருடைய உதவியாவது கிடைக்குமா என்று ஏங்கித் தவிக்கும் மானிடரை முன் வைக்கிறார் இயேசு. வாழ்வுக்குரிய வழி தெரியாமல் தேடி அலைகின்ற மக்கள் கூட்டத்தைப் பார்த்து அவர்கள்மேல் பரிவு கொண்டார் (மத் 9:36). அவர்களுக்குப் பணிசெய்தார் (14:14-21). "மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மத் 20:28). "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதை வாழ்வில் காட்டியவர் இயேசு. பிறரின் துன்ப துயரங்களில் ஒன்றாகக் கலந்து தானும் அழுதார் என விவிலியம் கூறுகிறது (யோவா 11:35). இவ்வாறு பிறருக்காகத் தம்மையே மறுத்து (மாற் 8:34), தாமே சிலுவையைச் சுமந்த இதயம் இயேசுவின் இதயம்! (யோவா 19:17).

### உயிர்த்து மகிழ்ந்த இதயம்!

உயிர்த்த இயேசு ஒவ்வொரு முறையும் தோன்றும்போது அவர் தமது வல்லமையால் தம் சீடர்களையும், அவர்களின் வழியாக தம்மை நம்பி ஏற்றுக்கொண்ட மக்களையும் தொடர்ந்து உறுதிப்படுத்தினார். அவர்களில் பலருக்கு நலமளித்தார் அதனால் மக்களை மகிழ்வித்தார் (தி.ப 5:12-16). இவ்வாறு மீண்டும் நலம் பெற்று மக்கள் உறுதிபெற்ற போதெல்லாம் அவர்களில் உயிர்த்து மகிழ்ந்த இதயம் இயேசுவின் இதயம்தான்!.

### முடிவாக...

மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய நான்கு நற்செய்தியாளர்களும் தங்களுக்கே உரிய பாணியில் இயேசுவின் திரு இருதயத்தைப் பற்றி தங்களின் நற்செய்தியில் வெளிப்படுத்தியுள்ளார்கள். இருப்பினும் இயேசுவைப் பற்றிய புரிதலில் கீழ்க்கண்ட கருத்துக்களில் அனைவரும் ஒரே மாதிரியாக இருக்கிறார்கள். மானிட மகன் (மத் 8:20, 12:8, 32-40, 13:41, 16:27, 19:28, 20:18, 28, 24:30, 44, 25:31, மாற் 2:28, 8:38, 10:45, 14:62, லூக் 9:58, 12:8, 18:8, 31, 19:10, யோவா 3:14, கடவுளின் மகன், மத் 3:17, 11:27, 14:33, 16:16, 27:54, மாற் 1:11, 9:17, லூக் 1:32, 3:22, 9:35, யோவா 1:34, 3:16, 11:4, 17:1 மற்றும் மீட்பர் மத் 1:21, லூக் 19:10, மாற் 16:16 யோவா 12:47)

இத்தகைய நற்செய்தியாளர்களின் இயேசுவைப் பற்றிய ஒரே மாதிரியான விளக்கங்கள் இயேசுவின் இதயத்துப் பன்முகங்களை நாம் நன்கு புரிந்து கொள்ளத் துணை செய்கின்றன.

**நன்றி : அன்னை வேளாங்கண்ணி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

156

# சாராய் சாரள் என பெயர் மாற்றப்பட்டாள்



நாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது நிறைவேறும் வரை பொறுமையாக இருப்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. எகிப்திலிருந்து வந்து பெத்தேல் என்ற இடத்துக்குக் கிழக்கே இருந்த மலைகளின் உச்சியில் கூடாரம் போட்டுத் தங்கியிருந்தார்கள். இருப்பினும் சாராளுடைய சொந்த ஊரான ஊர் போல எதுவுமே இருக்க முடியாது. அந்தச் செல்வச் செழிப்பான நகரத்தில் கடைவீதிகளும் சந்தைகளும் நிறைய இருந்தன. சாராள் தனது ஊரில் இருந்த சொந்தக்காரர்களையும் வசதியான வீட்டையும் விட்டுவிட்டு வந்திருந்தாள். சொந்த வீட்டில் உறுதியான கூரை போடப்பட்டிருந்தது. தண்ணீர் வசதி கூட இருந்தது. சிறு வயதில் தான் வசதியாக வாழ்ந்ததை ஏக்கத்தோடு நினைத்துக்கொண்டு இருக்கவில்லை. சாராளோ ஆபிரகாமோ கடந்தகால வாழ்க்கையை நினைத்து ஏங்கியிருந்தால் தமது சொந்த ஊருக்கே திரும்பிச் செல்ல முடிவு செய்திருப்பர். அப்படிச் சென்றிருந்தால் இறைவனது ஆசீர்வாதத்தை இழந்திருப்பர். அவர்களது விசுவாசம் இன்றும் பேசப்படுகிறது.

சாராள் கடந்த காலத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்காமல் எதிர் காலத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தாள். கூடாரங்களைப் பிரிப்பது பின்பு மறுபடியும் போடுவது. மந்தைகளைக் கூட்டிக்கொண்டு போவது என்று ஆபிரகாமுக்கு உறுதுணையாக இருந்தாள். பின்பு வந்த மாற்றங்களையும் சவால்களையும் சகித்தாள்.

ஆபிரகாமுக்குச் சரியான சமயம் பார்த்துத் தனது மனதிலே இருந்த எண்ணத்தைக் கூறினாள். தனது சோகத்தை அடக்கிக்கொண்டு தன் வேலைக்காரியாகிய ஆகார் மூலம் ஆபிரகாம் அப்பாவாக ஆக வேண்டும் என்று கூறினாள். அப்படிச் சொல்லும் போது அவளுக்கு எவ்வளவு வேதனையாக இருந்திருக்கும். வாரிசு வேண்டும் என்பதற்காக ஒரு ஆண் மறு மனைவியை வைத்துக் கொள்வது அக்காலத்தில் சாதாரணமாக இருந்தது. இறைவனது திட்டம் இதன் மூலம் நிறைவேறலாம் என்று அவள் எண்ணியிருக்கலாம். எப்படி இருப்பினும் கடினமான ஒரு தியாகத்தைச் செய்ய சாராள் தயாராக இருந்தாள். ஆபிரகாம் சாராளின் பேச்சைக் கேட்டார். (ஆதி 16:1-3) இது இறைவனின் திட்டமல்ல. இது மனிதக் கண்ணோட்டமே. நாமும் இப்படி இறைவனது நேரம் வரும் வரை காத்திருக்காமல் மனிதக் கண்ணோட்டத்தில் செயற்படக்கூடும். மேலும் அவள் தனது ஆசைக்கு மட்டும் முதலிடம் கொடுக்காது சுயநலமாக நடக்காது வேறொரு பெண்ணுக்கு விட்டுக் கொடுப்பது இலகுவானதல்ல. இருந்தாலும் அவள் அதைச் செய்தாள்.

மிக விரைவாக ஆகார் கர்ப்பமானாள். அதனால் தான் முக்கியமானவள் என எண்ணித் தனது எசமானியைக் கேவலமாகப் பேசினாள். அப்போது சாராளுக்கு எவ்வளவு கவலையும், கோபமும் வந்திருக்கும். கணவனுடைய அனுமதியோடு ஆகாரை அவமானப்படுத்தினாள். ஆகாருக்கு இஸ்மவேல் என ஒரு மகன் பிறந்தான். சாராளுக்கு 89 வயது இருக்கும் போது ஆபிரகாமுக்கு 99 வயது இருக்கும்போது இறைவனிடமிருந்து அற்புதமான செய்தி வந்தது. சந்ததியைப் பெருகப் பண்ணுவதாக. இறைவன் வாக்குறுதியைப் புதுப்பித்தார். இதுவரை ஆபிராம் என்றிருந்த அவரது பெயரை ஆபிரகாம் என்று மாற்றினார். அதாவது திரளான மக்களுக்குத் தகப்பன் என்பதே பொருள். அதே போன்று சாராய் என்ற பெயரைச் சாராள் என்று இறைவன் மாற்றினார். சாராய் என்பது சண்டைக்காரி என்ற பொருளாகும். ஆனால் சாராள் என்பது இளவரசி என்று பொருளாகும். (ஆதி 17:5 15-16) அதாவது சாராளை இறைவன் ஆசீர் வதித்தார்.

இருவருக்கும் ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு ஈசாக் என்று இறைவன் பெயர் கொடுத்தார். அதற்குச் சிரிப்பு என்று அர்த்தமாகும். ஆபிரகாமுக்கு 100 வயதில் சாராளுக்கு 90 வயதில் மகனைப் பெற்றெடுத்தனர்.

சாராள் ஆபிரகாமுக்கு உண்மையாக இருந்தாள். தன் கணவனின் காதுகளுக்கு இனிமையான வார்த்தைகளை மட்டும் பேசவில்லை. பிரச்சினை வந்த போது அப்பிரச்சினை அவர்களுடைய குடும்பத்தையும் எதிர்காலத்தையும் பாதிக்கும் என்று தெரிந்த போது கணவனிடம் வெளிப்படையாகப் பேசினாள். கணவனிடம் சொல்ல வேண்டியதை மரியாதையுடன் சொன்னாள். (ஆதி 21:10-13)

இறைவன் சாராளை இளவரசி என்று அழைத்தாலும் மற்றவர்கள் தன்னை அப்படி நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. 127 வயதில் அவள் இறந்தாள். கணவன் ஆபிரகாம் சாராளுக்காக அழுது புலம்பவும் துக்கம் அனுசரிக்கவும் தொடங்கினார்.

எமது வாழ்வில் எல்லா மனைவியரும் சாராளில் இருந்து பல நல்ல குணங்களைக் கற்றுக்கொள்ள முடியும். இறை திட்டத்துக்குத் தமது கணவனுக்கு ஒத்துப் போகப் பழகவேண்டும். இதன் மூலம் கணவன் மனைவி இருவரும் அன்போடு வாழ்வதைப் பார்த்து பிள்ளைகள் பழக வேண்டும். பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக வாழப் பழகுவோம்.

**தொடரும்**

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**

# இயற்கையை ஏன் மறந்தோம்?



மனிதர் - நாம்
மனம் போன போக்கில்
மந்த புத்தியுடன்
முன் மதி இன்றி
மரங்களைத் தறித்தோம்
வளங்களை
அழித்தோம்.

நாகரீகம் வளரவே,
நன்கு திட்டமிடாது
நகர மயமாக்கலில்
நாசமாக்கினோம்
நம் அழகிய பூமியை.
நேசிக்க மறந்தோம்
இயற்கையை.

இயற்கையை
சிதைத்தோம்.
வளங்களை
விழுங்கினோம் - அதன்
விளைவுகளையும்
கூடவே
அனுபவித்தோம்.

இயற்கையின் சீற்றம்
கருக்கொண்டது
வெள்ளம் வந்தது.
வீடுகளில் நிறைந்தது.
வெளியேறினோம்
வெறுங்கையுடன்.

வறட்சி வந்தது எம்மை
வாட்டி வதைத்தது.
வயிறும் காய்ந்தது.

ஆழிப்பேரலை வந்தது.
ஆட்டம் கண்டது
வாழ்க்கை.
ஆடிப்போனோம் நாம்.

சுனாமி வந்தது
எம்மைச் சூறையாடியது.
சுருண்டு போனோம்
நாம்.

வானம் வறண்டது.
பூமி காய்ந்தது.
விவசாயம் கருகியது.
அமைதி குலைந்தது.
ஆரோக்கியம்
தொலைந்தது.
பட்டினி
எட்டிப்பார்த்தது.

இயற்கையைப் பதம்
பார்த்தோம்.
பதிலுக்கு இயற்கையும்
எம்மைப் பதம்
பார்த்தது.
இயற்கையை ஏப்பம்
விட்டோம்.
இயற்கையும் எம்மை
ஏப்பம் விட்டது.
இயற்கையை
சுரண்டினோம்
சீரழித்தோம்.
இயற்கையும் எம்மைச்
சீரழித்தது.

எறிந்த பந்தே எம்மிடம்
திரும்பியது
எமக்கெதிராய்த்
திரும்பியது.

முற்பகல்
செய்தால் பிற்பகல்
விளையும் என்பது
இதையன்றோ....?


இனி, நாம் என்ன
செய்வோம்...?
இனியாவது
இயற்கையை அதன்
இயல்பிலே இயங்க
விடுவோம்.
சுற்றாடல்
மாசுபடலைத்
தவிர்ப்போம்.

வளி - நீர் - நிலம்
பயிர்களை,
வளமுடன் காப்போம்.
அழிவு வர முன்
காப்போம்.
வருங்கால சந்ததிக்கு
புது வழி காட்டுவோம்.

இயற்கையை
அன்பு செய்து
அழகுபடுத்துவோம்.
ஆனந்த வாழ்வை
அள்ளிப்பருகுவோம்.

**ஆக்கம்:**
**பென்ஜமின்**
**சோமநாதர்.**
**தெஹிவளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**ஆண்டவரின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா (03.06.2018)**

**பேதுரு**

**வாசக விளக்கம்:** இது நம் விசுவாசத்தின் மறைபொருள் எனக்கூறப்படும் இயேசுவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவில் பங்குகொள்ள வந்திருக்கும் இறை உள்ளங்களே! தன்னுடைய திருஇரத்தத்தால் எம்மைக் கழுவிய இயேசு தமது திவ்விய திருவுடலால் நம்மை போசிக்கின்றார். கடவுள் தன்மையை பலியாக்கி இவ்வுலகிற்கு வந்த இயேசு தன் மனிதத் தன்மையையும் பலியாக்குகின்றார் எதையும் இழக்கத் தயாராக இல்லாத மனிதர் வாழும் இன்றைய உலகில் கடவுள் அனைத்தையும் ஏன் தன் உயிரையும் இழக்கின்றார். எங்கு பலி இருக்கின்றதோ அங்கு வாழ்வு இருக்கின்றது. நாம் நம்மை இழக்கத் தயாராக இல்லையென்றால், நம்மை நாம் பலியாக்கவில்லை என்றால் நம்மால் பிறருக்கு வாழ்வு கொடுக்க முடியாது. தன்னை பிறருக்காக கொடுக்க நினைக்கும் மனிதனே முதிர்ச்சியடைந்த மனிதன். இன்றைய விழாவின் பொருளை உணர்ந்தவர்களாக பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : வி.ப 24:3-8**
ஆண்டவர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையின் இரத்தம் இதோ

**பதிலுரைப் பாடல் :**
மீட்பின் கிண்ணத்தை கையிலெடுத்து ஆண்டவரின் பெயரை தொழுதிடுவேன்.

**இரண்டாம் வாசகம் : எபி 9:11-15**
கிறிஸ்துவின் இரத்தம் நம் மனச்சான்றை தூய்மைப்படுத்துகின்றது.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வுதரும் உணவு நானே இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மாற் 14:12-16,22-26**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவின் திரு இரத்தத்தால் அபிஷேகம் செய்யப்பட்டு திருவுடலால் போசிக்கப்பட்டு நம்மை வழிநடத்தும் திருச்சபைக்காகவும் இயேசுவின் வார்த்தைகளால் எம்மை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள் துறவியர் ஆகிய அனைவருக்கும் இவர்களோடு இணைந்து செயலாற்றும் இறைமக்கள் அனைவரையும் போசித்து வழிநடத்தியருள வேண்டுமென்று...

நாட்டை ஆளும் தலைவர்களும் பலவித பொறுப்பில் உள்ளவர்களும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து மக்களின் நல் வாழ்வுக்காகவும் நாட்டின் உயர்விற்காகவும் பாடுபட்டு உழைக்கவும் நீதியும் உண்மையும் நிறைந்த நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி மக்களுக்குப் பணியாற்றவும் வேண்டிய அருள்வரத்தை தந்தருள வேண்டுமென்று...

அப்பத்தின் சாயலுள் மறைந்தே வசிக்கும் ஒப்பற்ற இயேசுவின் திருவிருந்தில் பங்குகொள்ளும் நாம் அனைவரும் இயேசுவைப் போல் நம்மைப் பலியாக்கி பிறருக்காக வாழவும் நல்ல சமுதாயம் உருவாக நம்மால் இயன்றதை செய்யவும் அன்பிலும், ஒற்றுமையிலும் நிலைத்து வாழவும் சமதர்ம சமுதாயம் மலரவும், உழைத்திடத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

**பொதுக்காலத்தின் 10வது ஞாயிறு (10.06.2018)**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 10வது வாரத்தின் முதல் நாளான இன்று இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்த ஒன்றுகூடி வந்திருக்கும் இறைமக்களே! நல்லவை செய்யும்போது எப்போதுமே நமக்கு துன்பங்கள், சோதனைகள் நிச்சயம் வரத்தான் செய்யும். இதைத்தான் இன்றைய நற்செய்தியில் இயேசுவின் வாழ்க்கை கூறுகின்றது. துன்பங்களை அவமானங்களைத் தாங்கி பணி செய்யும்போது நாமும் இயேசுவைப் போல இறைவனுக்கு உகந்தவர்களாக மாறுகின்றோம். பாவம் எவ்வாறெல்லாம் மானிட வாழ்வை சீர்குலைக்கிறது என்பதற்கு உதாரணம் ஆதாம், ஏவாள் வரலாறுதான். ஆதாம், ஏவாள் செய்த அதே தவறுகளை வேறு வடிவத்தில் செய்தவர்கள்தான் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பரிசேயர்களும் தலைமைக் குருக்களும் ஆவர். “கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும், சகோதரியும் தாயும் ஆவார்” என்ற இயேசுவின் வார்த்தைகள், இறைவார்த்தை மட்டில் எமக்குள்ள பொறுப்பை விளக்குகின்றது. எனவே இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடப்போம். அப்போது நாமும் இயேசுவின் தாயாக உறவினராக மாறலாம். இதற்காக பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : தொ.நூ 3:9-15**
உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்.

**பதிலுரைப் பாடல் :**
பேரன்பும் மீட்பும் ஆண்டவரிடமே உள்ளன.

**இரண்டாம் வாசகம் : 2கொரி 4:13-5:1**
நான் கடவுள் மீது நம்பிக்கையோடு இருந்தேன். ஆகவே பேசினேன்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா இவ்வுலகின் தலைவன் வெளியே துரத்தப்படுவான். நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும்போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன் என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மாற் 3:20-35**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

எத்தனை இடர்களோ சோதனைகளோ வந்தாலும் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு இயேசுவின் வார்த்தைகளையும் வாழ்வையும் மக்களுக்கு வழங்கி இயேசுவின் பாதையில் மக்களை வழிநடத்தும் திருஅவையின் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரையும் ஆசீர்வதித்தருள வேண்டுமென்று...

இன்றைய இயந்திர உலகில் வாழும் நாமும் சோதனைகளை இயேசுவைப் போல் உறுதியுடன் எதிர்கொண்டு அவற்றில் வெற்றி கண்டு வாழவும், எமது வாழ்விலும், நாட்டிலும் நிலவுன்ற குறைகளையும் துன்பங்களையும் அகற்றிட வல்லமையுடனும் செயல்பட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

பாவம் மானிட வாழ்வை எவ்வாறெல்லாம் சீர்குலைக்கின்றது என்பதை உணர்ந்தவர்களாக பாவத்தை வெறுத்து நாம் வாழவும், இயேசுவின் வார்த்தைகளை ஏற்றும் நாமும் அவரது சகோதரர் சகோதரிகள் தாயுமாக மாறவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...



# இறைவனின் கேள்விகள்

- **ஆண்டவரே உமக்காக இரத்த சாட்சியாக மரிக்க விரும்புகின்றேன்.** முதலாவது சுயத்திற்கு மரித்து எனக்கு சாட்சியாக இரு.
- **ஆண்டவரே என் சொத்துக்களில் பெரும்பகுதியை உம்முடைய ஊழியங்களுக்கு தர விரும்புகின்றேன்.** அவைகளில் ஒரு சிறு பகுதியையாவது கஷ்டப்படும் சிலருக்கு கொடுக்கின்றாயா?
- **ஆண்டவரே உம்மை எண்ணும்போது என் உள்ளம் அன்பினால் பொங்குகிறது.** அப்படியானால் ஏன் வேறு சிலரை எண்ணும்போது வெறுப்பினால் அந்த உள்ளம் எரிகிறது?
- **ஆண்டவரே நித்தியத்தில் உம்மோடிருக்க விரும்புகின்றேன்.** முதலாவது இந்த உலகத்தில் உன்னோடு நான் இருக்கின்றேனா? என்று பார்த்து செயல்படு.
- **ஆண்டவரே அழிந்து போகிற ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண விரும்புகிறேன்.** முதலாவது உன் ஆத்துமா அழிவிலிருந்து தப்பிவிட்டதா? என்பதை உறுதிப்படுத்து.
- **ஆண்டவரே உமக்காக எதையாவது செய்ய விரும்புகின்றேன்.** எனக்காக எதையும் செய்ய விரும்பாதே. நான் செய்ய சொல்வதை செய்வதற்கு விரும்பு.
- **ஆண்டவரே அநேகர் உம்முடைய சத்தியத்தை ஏற்றுக் கொள்ளவில்லையே ஏன்?** நீ அறிந்த சத்தியத்தின் படி நடவாமலிருப்பதும் முக்கியமான ஒரு காரணம்.
- **ஆண்டவரே விக்கிரகங்களையெல்லாம் அழித்து போடும்.** முதலாவது உன்னுடைய இருதயத்தில் உள்ள பண ஆசை, பொருளாசை, புகழாசை ஆகிய விக்கிரகங்களை அழித்துவிட்டாயா?
- **ஆண்டவரே இறைமக்கள் கூட்டத்தின் நடுவில் சுதந்திரமாய் ஆராதனை செய்கின்றேன்.** ஆனால் பிறர் நடுவில் குணநிலையில் சுதந்தரமின்றி கட்டப்பட்டு வாழ்கின்றாயே?
- **ஆண்வரே உம்முடைய இறைவார்த்தையை தினமும் படிக்கிறேன்.** படித்தபடி வாழ விரும்பாத உன்னுடைய வேதவாசிப்பு வீண் வேலையாகப் போகிறதே.

**நாம் என்ன செய்கிறோம் என்பதை உலகம் பார்கிறது. நாம் எப்படி இருக்கிறோம் என்பதை இறைவன் பார்கிறார்.**



# திரு இருதய ஆண்டவரின் வாக்குறுதிகள்

**திரு இருதய ஆண்டவர் புனித மார்கரீத்து மரியா வழியாக தம் பக்தர்களுக்கு 12 சிறப்பான வாக்குறுதிகளை அருளியுள்ளார்.**

**அவைகள்.**

1. அவர்கள் வாழ்க்கை நிலைக்குத் தேவையான அருளை வழங்குவோம்.
2. அவர்கள் குடும்பங்களில் அமைதி நிலவச் செய்வோம்.
3. எல்லாத் துன்பங்களிலும் அவர்களுக்கு ஆறுதலாக இருப்போம்.
4. வாழ்விலும், சிறப்பாக இறுதி வேளையிலும் அவர்களுக்குத் தவறாத அடைக்கலமாயிருப்போம்.
5. அவர்கள் முயற்சிகள் வெற்றிபெறத் திரளான அருளைப் பொழிவோம்.
6. நமது இதயம் பாவிகளுக்கு இரக்கத்தின் ஊற்றும் கரைகாணா அன்புக் கடலுமாக இருக்கும்.
7. புண்ணிய வழியில் ஊக்கமற்றவர் பக்தி வேகத்தைப் பெறுவர்.
8. பக்தியுள்ளோர் புனித நிறைவை நோக்கி விரைந்து செல்வர்.
9. எந்த வீட்டில் நம் திரு இதயப் படத்தை நிறுவித் தொழுவார்களோ, அந்த வீட்டை ஆசீர்வதிப்போம்.
10. கல் நெஞ்சரான பாவிகளை மனம் திருப்பும் வரத்தைக் குருக்களுக்கு அளிப்போம்.
11. திரு இதய பக்தியைப் பரப்புவோரின் பெயர் நம் இதயத்தில் அழியாதபடி பொறிக்கப்படும்.
12. தொடர்ந்து ஒன்பது தலை வெள்ளிக் கிழமைகளில் நற்கருணையை உட்கொள்பவர்கள், தங்கள் பாவங்களுக்காக மனத்துயர் கொண்டு நன்மரணம் அடைவர். அவர்கள் நம் பகைவராகவோ, திருவருட் சாதனங்களைப் பெறாமலோ இறக்க மாட்டார்கள்.

**இயேசுவின் திரு இருதயமே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். ஆமென்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பலரை நல் வழியில் திருப்பியவர்கள் வானத்தின் ஒளியைப் போலும் விண்மீன்களைப் போலவும் என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் பட்டொளி வீசுவார்கள்" (தானி 12:3) மலருக்கோ ஒரு மணம்! தென்றலுக்கோ ஒரு மென்மை! ஒரு மாட்சி! கல்வியிலோ பெரு மலர்ச்சி! சுவையிலோ பெரு மாண்பு! என்று கல்வி வழியிலே கடவுளைக் கண்டவர், வாடிய இளம் பயிர்களுக்கு வான்மழையாக நிறைந்தவர் அவர்தான் டிலாசால் துறவற சபையை நிறுவிய**

**தூய ஜோண் பப்ரிஸ்ட் டிலாசால்.**

# இலங்கை மண்ணிலே டிலாசால் அருட்சகோதரர்களின் 150வது வருட வரலாறு

பலவகைப்பட்ட மாணவர்கள் ஒன்று கூடி திறந்த, தெளிந்த மனத்துடன் ஒருவரை ஒருவர் மதித்து, ஒருவர் ஒருவருடைய உரையாடல்களுக்கு வாய்ப்பளித்து அவரவர் தன்மைக்கு ஏற்ப அவர்களுக்கு அறிவு புகட்ட முற்படும் நிறுவனமே கல்விச்சாலை. அது ஒரு உணர்வு கூடம். அங்கு அவர்களுக்கு சகோதரத்துவம், சமத்துவம், சமய தத்துவம் என்பவற்றைக் கற்றுக் கொடுத்திடல் வேண்டும். புது உலகிற்கேற்ப தம்மை மாற்றியமைக்கவும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் தம் மதத்திலே வேரூன்றி நின்றிட மறைக்கல்வியும் கற்பித்திடல் வேண்டும். இதன் நோக்கமாகவே அன்று கல்வி சாலைகள் நிறுவப்பட்டன.

17ம் நூற்றாண்டிலே மூவகைப்பட்ட பாடசாலைகள் பிரான்ஸ் தேசத்தில் நடைமுறையில் இருந்தன. அவை ஆரம்பப் பாடசாலை (Little School), எழுத்துப் பாடசாலை (Writing School), அன்புப் பாடசாலை (Charity School), என்பனவாகும். ஆரம்பப் பாடசாலைகளிலும், எழுத்துப் பாடசாலைகளிலும் பணிபுரியும் ஆசிரியருக்கு ஊதியம் அவர்களின் மாணவர்களிடம் இருந்து பெறும் பாடசாலைக் கட்டணமே (School Fees). அன்புப் பாடசாலைகள், கிறிஸ்தவக் குருமார்களின் கண்காணிப்பில் இருந்தன. இவ்வன்புப் பாடசாலைகளை நடத்த வந்த தியாக உள்ளம் படைத்தவர்களைக் கொண்டு தூய டிலாசாவால் நிறுவப்பட்ட சபைதான் ''கிறிஸ்தவப் பாடசாலைகளின் சகோதர சபை'' அல்லது ''டிலாசால் சபை'' ஆகும்.

17ஆம் நூற்றாண்டில் ஆசிரியப் பணிபுரிவது சமுதாயத்தில் விலக்கப்பட்ட ஒரு தாழ்ந்த தொழிலாகத்தான் கருதப்பட்டது. அப்பணி புரிய வந்த ஆசிரியர்கள் கூட தகுதியற்றவர்களாக இருந்தனர். அவ்வாறு ஏற்றிருந்தாலும் அவர்கள் அப்பணிக்கு முதலிடம் கொடுக்காமல் இருந்தனர். கிறிஸ்தவ குருமார்களின் கண்காணிப்பில் இருந்ததால் அவர்கள் பயந்து, சுதந்திரமாகவும், மனத்துணிவுடனும் எதையும் சொல்லவும், செய்யவும் முடியாமல் தத்தளித்தனர்.

ஆசிரியர் கொண்டுள்ள இழிவைப் போக்க வேண்டும், அதனை மாற்ற வேண்டும். மாற்றினால் தான் சமுதாயம் புத்துணர்வு பெற்று இளம் தளிர் விட்டு வளரும் என்று உணர்ந்த தலைவன் தூய டிலாசால் எல்லாக் காலங்களுக்கும் எல்லா நாடுகளுக்கும் மேலாக நன்மதிப்புப் பெற்று ஒளி வீசிடும் சுடராகப் புகழ்பெற்றவரானார்.

மரபு வழுவா, தனிநபர் கல்விப் போதனா முறையை (Individual Method) நூற்றாண்டுகளாக கடைப்பிடித்து வந்த பிரான்ஸ் தேசம் தன் மரபை முறித்து, ''பொதுக் கல்வி போதனை முறை'' (Simltaneous Method) யைப் பெற்று மாணவர்களின் கல்வி அறிவுக்கேற்ப பிரித்துத் தனித்த ஒரு ஆசிரியரையும் கொடுத்துப் புதிய காலக் கல்வி முறைக்கு வித்திட்ட பெருமை தூய டிலாசாலையே சாரும்.

பாடசாலைகளிலே ஆசிரியருடன் இணைந்து செல்லவும், மாணவர்களுடன் பொறுப்புணர்ச்சியை வளர்க்கவும் இவர் ''மாணவர் தலைவர்'' (Monitor) "Prefect System" "Report Card System" போன்றவற்றை உருவாக்கி மாணவரை விழிப்புடன் இருக்கச் செய்வித்தார். மாணவர் தம் தாய் மொழியிலேயே கல்வி கற்றிட வேண்டும் எனக் கூறிச் செயலாற்றியவரும் தூய டிலாசாலே ஆகும்.


இன்றைய முதியோர் கல்வித் திட்டத்தைப் போல அன்று (17ஆம் நூற்றாண்டில் கல்வி அறிவின்றி இருந்த பாட்டாளிமக்களுக்கு ''ஞாயிறு போதனை'' (Sunday Class) தோற்றுவித்துப் பெரும் வெற்றி கண்டு நம் முதியோர் கல்வித் திட்டத்தினையும், ஞாயிறு மறைக்கல்வியையும் தோற்றுவித்தவர் தூய டிலாசாலே ஆவார்.

கல்வியறிவூட்ட வந்திருக்கும் ஆசிரியர்கள் கல்வியறிவு நிறையப் பெற்றிடல் வேண்டும். மாணவர் சமுதாயத்திற்கு ஒழுக்கக் கல்வியைப் புகுத்த முதலில் ஆசிரியர்கள் பல நற்குணங்களைப் பெற்றிருத்தல் வேண்டும். பல வகைப்பட்ட மாணவர்களுடன் பழகுவதற்கும், அவர்கள் தவறினைத் திருத்துவதற்கும் ஆசிரியர்கள் தெரிந்திருக்க வேண்டும். இதனை மனதுள் வைத்து இப்பணிபுரிய வருவோரிடம், இதனைக் கற்பித்திட ஒரு நிறுவனம் நிறுவிட எண்ணி 17ஆம் நூற்றாண்டில் ''ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை'' யைத் தொடங்கியவரும் இவரே. இச் சகோதரர்களின் பாடசாலையின் வகுப்பறையில் பாடுபட்ட இயேசுவின் திருச்சிலுவை தொங்க விடப்பட்டிருக்கும். மாணவர்கள் அதற்கு மரியாதை செய்வது வழக்கம். அது மட்டுமல்லாது இப்பாடசாலைகளில் கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கே முக்கியம் கொடுக்கப்பட்டிருந்தமையினால் இச்சபைச் சகோதரர்களுக்குக் கிறிஸ்தவ பாடசாலைகளின் சகோதரர்கள் சபை (The Brothers of the Christian School) என்ற பெயரும் வழங்கப்படலாயிற்று.

இவ்வாறு ஏழைச் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்த ஒரு சபையையும் உருவாக்கித் தன்னால் இயன்ற பணியை ஆற்றி வாழ்ந்து 1719ஆம் ஆண்டு சித்திரை மாதம் 7ஆம் திகதி இறைவனடி எய்தினார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















ஆக்கம் : அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

1680ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட டிலாசால் சபையின் வளர்ச்சி கண்டு திருத்தந்தை 13ஆம் ஆசிர்வாதப்பர் 1725ஆம் ஆண்டில் இச்சபையை அங்கீகரித்தார். 1888ஆம் ஆண்டு தூய டிலாசாலுக்கு திருச்சபையானது முத்திப் பேறுபெற்ற பட்டம் கொடுத்தது. பின்னர் 1900ஆம் ஆண்டில் திருத்தந்தை 13ஆம் சிங்கராயரால் இவருக்கு தூயவர் பட்டம் கொடுக்கப்பட்டது. இவர் தூயவராக அறிவிக்கப்பட்டு 50 ஆண்டுகளின் பின் திருத்தந்தை 12ஆம் பத்திநாதரால் 1950ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15ஆம் திகதி அகில உலக ஆசிரியர்களின் பாதுகாவலராகப் தூய டிலாசால் அறிவிக்கப்பட்டார்.

புது உலகிலே வழிதெரியாத இம்மண்ணவர்க்கு நற்கல்விதனைப் புகட்ட வேண்டும். ஆசிரியர் நல்வாழ்வுதனை வளப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தைத் தன் வாழ்வின் கலங்கரை விளக்காய்க் கொண்டு கல்வியுலகிலே நற்பணியாற்றியவர் அவரது அயரா உழைப்பினைப் பாராட்டி நம் கத்தோலிக்கத் திருச்சபை அவரை அகில உலக கத்தோலிக்க ஆசிரியர்களின் பாதுகாவலராக நியமித்து இன்று 68 ஆண்டுகள் கடந்து விட்டன. அவர் வழி தொடரும் அருட்சகோதரர்கள் இலங்கை மண்ணிலே காலடி வைத்து கடந்த மாதம் (வைகாசி) 150 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. அதுமட்டுமல்லாது தூய ஜோண் பப்ரிஸ்ட் டிலாசால் இவ்வுலகை விட்டு நீங்கி 300 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. எனவே தமது வருகையின் 150வது ஆண்டுவிழாவையும், தூய ஜோண் பப்டிஸ்ட் டிலாசாலின் இறப்பின் 300வது ஆண்டு விழாவையும் இவ்வாண்டு நினைவு கூர்கின்றனர் அதன் அடையாளமாக இறைவனுக்கு நன்றி கூறி நன்றித் திருப்பலியை வைகாசி மாதம் 27ம் திகதி காலை 9.00 மணிக்கு அவர்களின் தாய் இல்லமான கொழும்பு - 15இல் அமைந்துள்ள டிலாசால் இல்லத்தில் இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி அதிவந்தனைக்குரிய பேராயர் பியரே வென் டொட் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இவ்வேளையில் கடந்த 150 ஆண்டுகளாக இலங்கை மண்ணிலே இறைவனின் ஆசீர்வாதத்தினால் தம்மால் செய்ய முடிந்த பணியினை நினைத்துப் பெருமிதம் அடையும் இவ்வேளையில் லசாலியப் பணி இம் மண்ணிலே தொடர தாம் நடந்து வந்த பாதையினைத் திரும்பிப் பார்த்து இலங்கைத் திருச்சபையோடு இணைந்து தமது உடன் பணியாளர்களான லசாலியக் குழுவோடும், மாணவர்களோடும் தமது மகிழ்வையும், நன்றியுணர்வையும் தெரிவிக்கின்ற இவ் வேளையில் அவர்கள் நடந்து வந்த பாதையினைச் சற்றுத் திரும்பிப் பார்ப்போம்.

1866ம் ஆண்டு இலங்கை திருச்சபையின் பேராயராக இருந்த அதிவந்தனைக்குரிய ஆயர் கிலேரியன் சில்லாணி (OSB) அவர்களின் அன்பான அழைப்பின் பேரில் 1867ம் ஆண்டு தை மாதம் தூய ஆசீர்வாதப்பர் சபைக் குருக்களால் நடாத்தப்பட்ட தூய ஆசீர்வாதப்பர் கல்லூரியின் இலங்கை மண்ணிற்கு முதன் முதலாக வந்த பிரான்சு தேசத்தைச் சேர்ந்த மூன்று அருட்சகோதரர்கள் உத்தியோக பூர்வமாகப் பெற்றுக்கொண்டனர். ஆனால் எதிர்பாராதவிதமாக இச் சகோதரர்கள் மூவரும் ஆங்கில மொழியிலே பாண்டித்தியம் பெற்றிராத காரணத்தினால், ஆங்கில மொழியிலே பாடசாலை நிர்வாகத்தை நடாத்துவதில் பல நெருக்கடிகளை எதிர் நோக்கியதன் காரணத்தினால் தமது பணியில் இருந்து பின்வாங்கி இம்மண்ணை விட்டு அதே ஆண்டு ஆவணிமாதம் வெளியேறினர். இருப்பினும் ஆயரினதும் ஏனைய பல எதிர்பார்ப்போடும் இருந்தவர்களினதும் விடா முயற்சியோடு ஆங்கில மொழியினைக் கையாளக்கூடிய சகோதரர்களின் உதவியோடு மீண்டும் 1868ம் ஆண்டு அக்கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பினையும் லசாலியப் பணியினையும் வைகாசி மாதத்திலே தொடக்கினர். அன்று தொடங்கிய இப்பணி இன்றுவரை இலங்கை மண்ணிலே தொடர்ந்து ஆற்றப்படுவதின் நூற்றிஐம்பதாவது ஆண்டு நிறைவு இவ்வருடத்தில் (2018) கொண்டாடப்படுவது பொருத்தமுடையதாகும்.

தம்முடைய பணியில் ஆர்வத்தோடும், விருப்பத்தோடும் செயற்பட்டதின் காரணமாக இலங்கையின் கல்வி வரலாற்றில் முக்கிய இடத்தினைப் பெற்று பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படக் கூடியவர்களாயினர். 19ம் நூற்றாண்டின் இறுதியில் அருட்சகோதரர்கள் கொழும்பில் கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், நீர்கொழும்பு போன்ற இடங்களில் தமது பணியை விஸ்தரித்தனர். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேற்படி சகோதரர்கள் கொழும்பு மாவட்டத்தில் முகத்துவாரத்தில் உள்ள டிலாசால் கல்லூரியையும், கிராண்ட்பாஸில் உள்ள தூய சூசையப்பர் கல்லூரியையும். நீர்கொழும்பிலுள்ள தூய மரியாள் கல்லூரியையும், பண்டாரவளையில் உள்ள தூய சூசையப்பர் கல்லூரியையும் தம் பொறுப்பில் வைத்திருந்தனர். அதுமட்டுமல்லாது நகர்ப்புறத்தில் உள்ள ஏழைகளின் தேவைகளைக் கருத்திற் கொண்டு தமது சபை ஸ்தாபகரின் எண்ணத்தைப் பின்பற்றி கொழும்பு புறக்கோட்டையில் 1920ம் ஆண்டில் தூய மரியாள் கல்லூரியை ஆரம்பித்தனர். ஆனால் கொழும்பு நகர்புற விஸ்தரிப்புப் பணியின் போது அதனைத் தொடர முடியாமல் 1940ம் ஆண்டில் அதனைக் கைவிட்டனர். அதே போன்று காலப்போக்கில் பல்வேறு பிரச்சனைகளையும் அசௌகரியங்களையும் எதிர் நோக்கியதன் காரணமாக நீர்கொழும்பிலும், பண்டாரவளையில் இருந்தும் தமது பணியைக் கைவிட்டனர்.

இலங்கையின் சுதந்திர தினத்திற்கு முன்பாக சுமார் ஏழு ஆங்கில மொழிமூலப் பாடசாலைகளை கொழும்பு நகருக்கு அப்பால் ஆரம்பித்தனர். அன்றைய நாளில் லசாலியன் கல்வித்திட்டமானது ஒரு புது முறையாக இருந்ததினால் அதன் புகழ் நாடெங்கும் சிறகடித்துப் பறந்தது. தொடர்ந்து வந்த ஆயர்களின் அழைப்பின் பேரில் சகோதரர்கள் தமது பாடசாலைப் பணியை இலங்கையின் வடக்கு மேற்கு மாகாணங்களில் விஸ்தரித்து குருநாகல், சிலாபம், கந்தானை, மொறட்டுவ, வத்தளை, இறாகம, மன்னார், நுவரெலியா, புத்தளம் போன்ற பகுதிகளில் பணியாற்றத் தொடங்கினர். ஆனால் காலப்போக்கில் சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தின் முக்கியத்துவம் குறைந்து சுதேச மொழிகளான தமிழ், சிங்களத்தின் முக்கியத்துவம் வரத் தொடங்கியதன் காரணமாக சபையின் செயற்பாட்டிலும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருகை தரும் அருட்சகோதரர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததோடு இங்கு பணியாற்றும் ஐரோப்பிய சகோதரர்களும் நாட்டைவிட்டு வெளியேறத் தொடங்கினர். இதனால் நிர்வாகமும் பொறுப்பும், தொடரும் அபிவிருத்தியும் சுதேச சகோதரர்களின் கைகளிலே எதிர்பாராத விதமாக இறை பராமரிப்போடு கிடைத்தது.

1919ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள அருட்சகோதரர்கள் ஒன்றினைத்து தமக்கே உரித்தான விதத்தில் நிர்வாக அமைபைத் தாமே பொறுப்பெடுத்து ''கொழும்பு மாவட்டம்''..

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வர்ணம் தீட்டுக.



## தெரிந்து கொள்வோம்

**குடும்பங்களில் திரு இருதயப் படத்தை அர்ப்பணம் செய்து அப்பக்தியை முதன் முறையாக வளர்த்த புனிதர் யார்?**

**புனித மாக்கிரேட் மரிய அலாக்கே**

**"செபிக்கும் குடும்பம் ஒன்றித்திருக்கும்" என்ற புகழ் பெற்ற வாக்கியத்தை முதலில் தந்தவர் யார்?**

**அருட்தந்தை பேட்ரிக் பேட்டன்**

**திருக்குடும்ப விழாவை அகில உலக திருச்சபையும் கொண்டாடுமாறு பெருவிழாவாக்கிய திருத்தந்தை யார்? எப்போது?**

**15ம் ஆசீர்வாதப்பர் 1921ஆம் ஆண்டு**

**குடும்ப செபத்தில் எந்தெந்த மாதத்தில் என்னென்ன சிறப்புச் செய்யலாம்?**

☞ **பங்குனி:–** புனித சூசையப்பர் செபம்

☞ **வைகாசி:–** செபமாலை

☞ **ஆனி:–** திரு இருதய பிரார்த்தனை,
1 மனஸ்தாபச் செபம்

☞ **ஆடி:–** திரு இருதய பக்திப் பாடல்கள், செபங்கள்

☞ **ஐப்பசி:–** செபமாலை

☞ **கார்த்திகை:–** இறந்த ஆன்மாக்களுக்கு செபம்



மாணவர்களே! உங்களது ஆக்கங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08.

# 4. தனிச் செபப் பழக்கம்

## 07. உணவின்போது மன்றாடும்

### உணவை உண்பதற்குமுன்

வானகத் தந்தையே அப்பா!

நான் உயிர் வாழ,
இந்த உணவை நீர் எனக்குத் தந்துள்ளீர்.
இந்த உணவையும், என்னையும் ஆசீர்வதியும்.
இயேசு ஆண்டவர் வழியாக இதைக் கேட்கிறேன். ஆமென்.

### உணவை உண்ட பின்

வானகத் தந்தையே அப்பா!

நீர் எனக்குத் தந்த இந்த உணவுக்காகவும்,
நன்மைகள் எல்லாவற்றுக்காகவும்,
இயேசு ஆண்டவர் வழியாக நான் உமக்கு நன்றி சொல்கிறேன். ஆமென்.

**குறிப்பு:**

காற்றும், நீரும், உணவும், வீடும், வேலையும், இவ்வுலகில் நீர் உயிர் வாழ உமக்கு மிகவும் அவசியமானவை. இத்தேவைகள் அனைத்தையும் உணவு என்ற ஒரு சொல்லில் அடக்கிவிடலாம். நீர் உயிர் வாழ இயேசு தன்னை உமக்கு உணவாகத் தருகிறார். நீர் காலை, மதியம், இரவு என்று மூன்று வேளைகளில் உணவை உண்கிறீர். நீர் உண்ணும் இவ்வுணவு இயேசுவோடு சேரும்போதே இது புனிதமடைகின்றது. எனவேதான் உணவை உண்ணுமுன் ஆசீர்வதித்தும், உண்டபின் நன்றிசொல்லியும் மன்றாடும் முறையைத் திருச்சபைஉமக்குத் தருகிறது. எனவே நீர் உண்பதற்கு முன்னும், உண்டபின்னும் வானகத் தந்தையிடம் மன்றாட மறவாதீர்.

## 08. கண் விழித்ததும் மன்றாடும்

வானகத் தந்தையே அப்பா!

எனக்கு ஒரு புதிய நாளைத் தந்துள்ளீர்.
இந்நாளுக்காக நான் உமக்கு நன்றி சொல்கிறேன்.
இந்த நாளையும், என்னையும் ஆசீர்வதியும்.
இன்று நான் சந்திக்கும் ஆட்கள் வழியாகவும், எனக்கு உண்டாகும் அனுபவங்கள் வழியாகவும் இடம்பெறும் நிகழ்வுகள் வழியாகவும், நீர் பேசுவதை நான் கேட்கச்செய்யும்.

அன்பின் இயேசுவே!

நீர் ஒவ்வொரு நாளும் வானகத் தந்தையின் விருப்பத்தை தேடிக் கண்டுபிடித்து அதற்குப் பணிந்து வாழ்ந்தீர். இது உமக்கு இன்பமாய் இருந்தது. இன்றைய நாள் முழுவதும் நானும் உம்மைப்போல் அவரின் விருப்பத்தைக் கண்டுபிடித்து அதற்குப் பணிந்து வாழ எனக்கு உதவி செய்யும்.

துணைவரான தூய ஆவியே!

வானகத் தந்தையின் விருப்பத்தை ஒவ்வொரு கணத்திலும் கண்டறிய எனக்கு உதவி செய்யும். உண்மையிலும் அமைதியிலும் நிலைத்திருந்து அன்புப் பணிகள் செய்ய இன்று என்னைத் தூண்டிவிடும்.

ஆண்டவரின் தாயே! அம்மா!

இன்றைய நாள் முழுவதும் மூவொரு இறைவனோடு வாழ நீர் எனக்கு உதவி செய்யும்.

இவற்றை இயேசு வழியாகக் கேட்கிறேன். ஆமென்.

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**

# ஒற்றுமையே உயர்வு

ஒரு மரத்தில் நிறைய புறாக்கள் வசித்து வந்தன. பகல் நேரத்தில் அவை ஒற்றுமையாகப் பறந்து பல இடங்களுக்குச் சென்று இரை தேடிக்கொண்டு மாலை நேரமானதும் அந்த மரத்திற்கு வந்து விடுவது வழக்கம். மாலையில் அந்தப் புறாக்கள் மரத்தின் கீழ் தரையில் உட்காரும் வழக்கத்தைக் கொண்டிருந்தன.


அந்தப் பகுதியில் வசித்து வந்த ஒரு வேடன் இதை கவனித்தான். அவற்றை வலை வீசிப் பிடித்தால் நிறைய பணம் கிடைக்கும் என்று முடிவு செய்தான். அடுத்தநாள் புறாக்கள் வழக்கம் போல காலையில் இரை தேடப் புறப்பட்டன. அந்த வேடன் மரத்தின் கீழ் வலையைப் பரப்பி வைத்தான். மாலையில் வழக்கம் போல திரும்பிய புறாக்கள் வலையை கவனிக்காது அதன் மீது உட்கார்ந்தன. சற்று நேரத்தில் அவற்றின் கால்கள் வலையில் சிக்கிக் கொண்டதை உணர்ந்தன. உடனே அவை எப்படி தப்பிப்பது என ஆலோசனை நடத்தின.

“முதல்ல நாம எல்லாரும் இந்த இடத்திலே இருந்து போயாகணும். அதுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கு. நாம எல்லாரும் ஒரே சமயத்துல பறக்கணும். அப்ப நாம இந்த வலையை சுலபமா தூக்கிகிட்டு பறந்து வேறு இடத்துக்குப் போயிடலாம்.”

இந்த யோசனையை எல்லா புறாக்களும் ஏற்றுக்கொண்டன. உடனே அவை வலையை தூக்கிக் கொண்டு பறக்க ஆரம்பித்தன. அந்த சமயத்தில் அங்கே வந்த வேடன் தன்னுடைய விலை உயர்ந்த வலையை புறாக்கள் தூக்கிச் செல்வதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தான்.

புறாக்களின் ஒற்றுமை அவனுக்குப் புரிந்தது. புறாக்களிடையே உள்ள ஒற்றுமையைப் போக்கிவிட்டால் அவற்றை சுலபமாகப் பிடித்துவிடலாம் என்று முடிவு செய்தான்.


சில நாட்கள் கழிந்து புறாக்கள் தங்களின் வழக்கமான இடத்திற்கு வந்தன. இதை அந்த வேடன் அறிந்து கொண்டான். அடுத்த நாள் மாலை



அந்த மரத்தின் கீழ் ஒரு புது வலையை விரித்து அந்த வலையின் மீது சிறிது தானியங்களை தூவி வைத்தான்.

மாலை வழக்கம் போல புறாக்கள் தங்களின் இடத்திற்குத் திரும்பி மரத்தின் கீழே அமர்ந்து ஓய்வு எடுத்தன. அவை இப்போதும் வலையை கவனிக்கவில்லை. ஆனால், வலையின் மீது இருந்த தானியங்களைப் பார்த்து அவற்றை சாப்பிட ஆரம்பித்தது. தானியத்திற்காக சண்டையிட்டு ஒற்றுமையை இழந்ததால் அவை வலையை கவனிக்கத் தவறிவிட்டன. தொலைவில் இருந்து இதைக் கவனித்த வேடன் வலையுடன் இணைக்கப்பட்டிருந்த கயிற்றை இழுத்து புறாக்கள் அனைத்தையும் சுலபமாகப் பிடித்துக் கொண்டு போய் விட்டான்.

## இப்படத்தில் 6 வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடியுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவாக்கினர் எரேமியா

சென்ற இதழின் தொடர்ச்சி...

## வரலாற்றுப் பின்னணி:

### அ) யூதா அரசர் யோசியாவின் மரணம்:

கி.மு622ல் யூதாவில் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற யோசியா அரசர் சமய மறுமலர்ச்சியை தன் அரசில் கொண்டு வந்தார். ஆயினும் அவரது சமய மறுமலர்ச்சி கி.பி 609ல் நிகழ்ந்த அவரது திடீர் மரணம் காரணமாக சடுதியான முடிவை சந்தித்தது.

### ஆ) அசீரியப் பேரரசின் வீழ்ச்சி:

அரசர்கள் இரண்டாம் ஆசூர்நசிபால் (கி.மு 884-859), இரண்டாம் சால்மனேசர் (கி.மு 859-824) ஆகியோர் காலத்தில் அசீரியப் பேரரசு வல்லராக உயர்ந்தது. சிரியா, பாலஸ்தீனாவை வெற்றிக்கொண்ட சிலருடனும், சமாரியா நாடுகடத்தலை தொடங்கிவைத்த ஐந்தாம் சால்மனேசர் (கி.மு 727-722), சமாரிய நாடுகடத்தலை முடிவுக்குக் கொண்டு வந்த இரண்டாம் சார்கோன் (கி.மு 722-705), யூதா அரசனும் அரசர் யோசியாவின் தந்தையுமான எசேக்கியாவை எதிர்த்துப் போரிட்ட செனகரிபு (கி.மு 704-581), எகிப்துக்கு எதிராக படை நடத்திய எசரதன் (கி.மு 681-669) ஆகியோருடன் மூன்றாம் திக்லத்பிலேசர் அணிசேர்ந்துக் கொண்டார்.

எசரதனின் மகன் ஆசூர்பனிபால் (கி.மு 669-631) மேற்கு எகிப்தின் தெபே நகரில் ஆட்சிப்புரிந்து வந்தான். ஆயினும் அவனது அரசும் அசீரியாவின் அரசும் விரைவில் முடிவுக்கு வந்தன. கி.மு 612ல் ஆசீரியாவின் தலைநகராக விளங்கிய நினிவே பாபிலோனியர்களால் இடிக்கப்பட்டது. கி.மு 609ல் அசீரியப்படை ஹாரானில் தோற்கடிக்கப்பட்டது.

### இ) பாபிலோனியப் பேரரசின் எழுச்சி:

கல்தேயரான மெரோதாக்கு பலாதரன், நெபோபொலாசரின் தந்தையும், நெபுகத்நேசரின் பாட்டனாரும் ஆவார். மெரோதாக்கு பலாதரன் அரசன் எசேக்கியாவிடம் தன் தூதுவர்களை அனுப்பி வைத்தான் (எசா. 39, 2 அர. 20:12-19). கி.மு 626 ஐப்பசி மாதத்தில் நெபோபொலாசர் அசீரியரை பாபிலோனுக்கு வெளியே தோற்கடித்தான். கி.மு 616ல் நெபோபொலாசர் தனது அரசை விரிவுப்படுத்தினான், கி.மு 612ல் மிகுதியானருடன் சேர்ந்துக் கொண்டு நெபோபொலாசர் அசீரியாவின் தலைநகரான நினிவே நகரை அழித்தார்.

### ஈ) கி.மு 609 திலும், அதற்குப் பின்னும் நிகழ்ந்த அதிகார மாற்றங்கள்:

#### 1. யூதா அரசு:

அசீரிய வீழ்ச்சிக்குப் பின் பாபிலோன் பேரரசாக உயர்ந்தது. அச்சமயத்தில் யோசியா அரசரின் ஆட்சி காலத்தில் யூதா அரசு தன்னை அசீரிய ஆதிக்கத்திலிருந்து விடுவித்துக் கொண்டு தனித்துவமான நாடாக விளங்கியது. கி.மு 609ல் மெக்கித்தோவில் நடைபெற்ற எகிப்தியருடனானப் போரில் அது தோல்விக்கண்டது.

#### 2. எகிப்து:

எகிப்து தனது அரசை விரிவுப்படுத்திக்கொள்ள பாலஸ்தீனாவில் காலூன்ற முயற்சித்தது. ஹாரானில் பாபிலோனியர்களை எதிர்த்து நடைபெற்றப் போரில் எகிப்து அசீரியாவுடன் இணைந்துக் கொண்டது. யூதா அரசு, எகிப்திய பார்வோன் இரண்டாம் நெக்கோ என்பவன் அசீரியாவுடன் இணைவதைத் தடுக்க



முயற்சித்தது. ஆயினும் மெகித்தோவில் நடந்த போரில் யூதா அரசு தோல்வியை சந்தித்ததுடன் அரசர் யோசியாவையும் இழந்தது (2குறி. 35:20-24). எகிப்தியருடைய உதவி இருந்தும் கூட அசீரியா




பாபிலோனியரிடம் தோற்றுப்போனது. அத்துடன் உலக அரங்கிலிருந்தே அசீரியா மறைந்து விட்டது. எகிப்து கர்கமேசுக்குப் புறமுதுகிட்டு ஓடியது. அதுவே எகிப்தும் பாபிலோனையும் பிரிக்கும் எல்லைக் கோடாக அமைந்தது.

#### 3. யூதாவில் எகிப்தியரின் ஆட்சி:

எகிப்து பார்வோன் நெக்கோ, யோவகாசு ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்குப்பின் மூத்த மகனான எலியாக்கிமை அவனுடைய தந்தைக்கு பதிலாக அரசனாக்கி அவனது பெயரை யோயாக்கிம் என மாற்றினான். அவன் பார்வோனின் கட்டளைப்படி அவனுக்குக் கப்பம் கட்டி வந்தான். எகிப்திய பார்வோனான நெக்கொ யூதா அரசின் கஜானாவை சூறையாடியதுடன் யோவகாசை சிறைப்பிடித்து கைதியாக எகிப்திற்கு அழைத்துச் சென்றான்.

### உ) கி.மு605ல் நிகழ்ந்த ஆட்சி மாற்றங்கள்:

பாபிலோனிய அரசன் நெபுகத்நேசர் எகிப்தியரை கர்கமேசில் தோற்கடித்தார். யூதா அரசன் யோயாக்கிம் எகிப்தியருக்கு அளித்த ஆதரவை விலக்கிக் கொண்டு பாபிலோனியருடன் சேர்ந்துக் கொண்டு அவர்களுக்குக் கப்பம் கட்டி வந்தான் (2 அர. 24:1). நெபுகத்நேசரின் தந்தை நெபோலாசர் இறந்து விட்டதால் பாபிலோனுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. நெபுகத்நேசர் தனக்குக் கப்பம் கட்டக்கூடிய குறுநில மன்னர்களை நியமித்துக்கொண்டும், எதிர்த்தவர்களை கைது செய்தும் வந்தான். தானியேலும் இவ்வாறு கைது செய்யப்பட்டு நாடுகடத்த -ப்பட்டவரே (தானி. 1:1-6).

☛ 15

# இளையோரின் செப வாழ்வு

வறட்சி ஏற்படும் பொழுதுதான் தண்ணீரின் அருமை தெரியும். தோல்வி ஏற்படும் பொழுதுதான் வெற்றியின் ரகசியம் புரியும். இளமையின் அருமை முதுமை வரும்போதுதான் தெரியும். இளமையை ரசிக்கத் தெரிந்தவனுக்கு இளமையாய் வாழத் தெரியவில்லையே என்று அங்கலாய்ப்பதா? வாழ வழி தெரிந்தும் பாதை கடினமானது என்பதால் சோம்பலாய் போனதா இளமை. துடிப்போடு இருக்கவேண்டிய இளமைப் பருவம் துவண்டு போய்க்கிடக்கிறதா?

எசாயா 40:30 "இளைஞர் சோர்வுற்றுக் களைப்படைவர். வாலிபர் நிலைதடுமாறி வீழ்வர்" கணினி உலகம் இளமையை விலைபேசுகின்றதா? 10 வயது மாணவன் 20 வயது இளைஞனைப்போல் வாழ முற்படுவதும், 25 வயது இளைஞன் 50 வயதானவன் போல் இருப்பதும் இன்றைய உலகம்.

இந்த உலகத்தில் பக்தி, அக்கறை, சமூகம் என்றோ, செப வாழ்வு பற்றியோ கருத்துரையை ஏற்பதே இன்றைய இளைய சமூகத்தின் கடினமாய்ப் போன காலத்தல் ஒரு பக்கம் உலகப் பொருளாதாரச் சுமையால் படித்தும், படித்த படிப்பிற்கு வேலை இல்லை. வேலை கிடைத்தும் அதற்கான ஊதியம் இல்லை. இளம் இரத்தத்தை உறிஞ்சும் சமூகத்தில் மனவருத்தம், மனச்சோர்வு இவற்றால் தன்னையே போதையாக்கிக் கொண்டு கனவு உலகத்திலே வாழ்வோம் என்று உலக சுகத்தை மட்டும் அதுவும் அந்தந்த வயதில் பெறவேண்டிய சுகத்தையே இளம் வயதிலேயே அனுபவிக்க விரும்பும் கூட்டம் பெருகிக் கொண்டு இருக்க, மறுபக்கம் உலக வாழ்க்கை அலுத்துப்போய் விட்டது அல்லது விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டு தற்கொலை செய்வதா? வாழ்வதா? என்று தண்ணீர் இல்லாத கிணறில் தண்ணீர் கிடைக்குமா? என்று தேடும் இளைய சமூகமே, உனக்கு ஒரு கேள்வி, நீ எப்பொழுது வாழப் போகின்றாய்?

20 நூற்றாண்டுக்கு முன் இளைய சமூகம் அறிவை கல்வி நிலையங்களில் மட்டும் தேடவில்லை. அனுபவப் பாடங்களை, இல்லங்களில், சமூகத்தில் தேடியது. எனவே தேடலில் முடிவு இறையனுபவம் தேவை என்பதை உணர்ந்தது. ஆனால் இன்று கல்வி நிலையத்திலும், கணனிக்குள் மட்டுமே தேடுகின்றது. இதன் விளைவு இறப்பின் வயது சராசரி 70 ஆக இருந்தது 50 ஆக குறைந்து விட்டது. அன்று 100 வயதாகியும் நோயில்லாமல் வாழ்க்கையை வாழ்ந்த காலம் போய், பிறக்கின்ற போதே சர்க்கரை நோயோடு பிறக்கும் குழந்தைகளைப் பார்க்க முடிகிறது.

இது யாருடைய குற்றம்? அறிவை படித்தும், கேட்டும் அறிந்து கொள்ளலாம். இறை அறிவை இறை அனுபவத்தால் மட்டுமே பெற முடியும்.

இன்றைய உலகில் யோகா செய்யுங்கள் என்று தியானத்தின் ஒரு முறையை உரக்கச் சொல்லில் கொண்டு இருக்கின்றது. அந்த தியான வாழ்விற்கு இளைய சமூகத்தை அழைத்துச் செல்வதே இன்றைய காலத்தில் பெற்றோர்களின் முதல் பணி. ஒரு காலத்தில் இளைய சமூகத்தினர் ஆலயத்தின் உள்ளே இருந்தனர். இன்று ஆலயத்தின் வாசலில் நிற்கின்றார்கள். வருங்காலத்தில் ஆலயமே அவர்களுக்கு தெரியாமல் போகலாம்.

மறுபக்கம் இளைய சமூகம் இறைவனை அனுபவிக்க செப இல்லங்களை நோக்கி ஓடிக்கொண்டு இருக்கின்றனர். அது பொய்மையா? அல்லது மெய்மையா? இறைவார்த்தை இளைய சமூகத்திற்குக் கொடுக்கும் உன்னத படிப்பினைதான் என்ன?

சபை உரையாளர் 11:9-10 "இளையோரே! இளமைப் பருவம் மகிழ்ச்சியோடிருப்பதற்கே. இளமையின் நாள்களில் உள்ளக் களிப்புடனிருங்கள். கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுங்கள்" என்றுரைத்த சபை உரையாளர்.

ஆனால் நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் உரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவார் என்பதை மறவாதீர்கள்" என்று எச்சரிக்கையும் செய்கிறார். இளமைப்பருவம் எதைப்பற்றியும் கவலைப்படக்கூடிய பருவம் அல்ல. நீ கவலைப்படுவதால் ஒரு முழம் கூட்டவோ, குறைக்கவோ முடியாது. நீ எதைப்பற்றியும் கவலையற்ற வாழ்க்கை வாழவும் இவ்வுலகம் உன்னை அனுமதிக்காது.

உன் குழந்தைப் பருவம் உன் பெற்றோருக்குப் பிடிக்கும். ஆனால் இன்றைய இளமைப்பருவம் பெற்றோர்க்குப் பயத்தை உருவாக்குகின்றது. இளைய சமூகமே! உன் மனதில் வைத்துக்கொள். "குழந்தைப் பருவமும், இளமையும் மறையக் கூடியவையே. ஆகையால் உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே.

உன் இளமைப் பருவத்தில் "வாழ்க்கை எனக்கு இன்பம் தர வில்லையே" என்று நீ சொல்லக் கூடிய நாள்களும், ஆண்டுகளும் வரும்முன் அவரை உள்ளத்திலே நினை". இளைய சமூகத்தின் நம்பிக்கை அன்று மற்றவரோடு பேசுவதிலும், அன்பு செய்வதிலும், அடுத்தவர்மீது வைக்கின்ற நம்பிக்கையிலும் இறை உறவை அவன் கண்டுகொள்ள வாய்ப்புகள் இருந்தன.

இன்று ஒரே வீட்டில் ஐவர், ஐவரும் தனிமரம், தனிமை தனிமையோடு (கைபேசி) பேசிக்கொண்டு பொய்மையான வாழ்க்கையை வாழும் கூட்டத்திற்கு (திருப்பாடல் 71:31) "என்தலைவரே, நீரே என் நம்பிக்கை. ஆண்டவரே, இளமை முதல் நீரே என் நம்பிக்கை" என்று சொல்ல இளைய சமூகம் முன்வருமா?

அப்படி வந்தால் (எசாயா 40:31) "ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களே புதிய ஆற்றல் பெறுவர். கழுகுகள் போல் இறக்கை விரித்து உயரே செல்வர். அவர்கள் ஓடுவர், களைப்படையார், நடந்து செல்வர், சோர்வடையார் என்று எசாயா இறைவாக்கினர் கூறுவது உண்மையாகுமா?

இறைநம்பிக்கையைப் பெற விரும்பும் இளைய சமூகம் இறை நம்பிக்கையைப் பெறத் தடையாய் இருப்புது எது என்பதை உணர வேண்டும். மாய உலகில் மாயமாய் மறைந்து போகும் தீமைகளைச் சுகமாய் கருதாமல் பாவச் சேற்றுக்குள் படுகுழியின் பாதாளத்தில் கால் வைக்காமல் இருக்க, "கடவுளின் வார்த்தை உங்களுள் நிலைத்திருக்கிறது. தீயோனை நீங்கள் வென்றுள்ளீர்கள்" (1யோவான் 2:14). "உமக்கெதிராய் நான் பாவம் செய்யாதவாறு உமது வாக்கை என் இதயத்தில் இருத்தியுள்ளேன்" (திருப்பாடல் 119:11).

இவ்வாறு இறைவார்த்தை நம்மில் குடியேற வேண்டும். அப்படி இறைவார்த்தை நம்மிடையே குடிகொண்டால் (எபேசியர் 6:14, 16) உண்மையை இடைக்கச்சையாகக் கட்டிக்கொண்டு நீதியை மார்புக் கவசமாக அணிந்து நில்லுங்கள்"

"எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்துவிட முடியும்".

"மீட்பை தலைச் சீராகவும், கடவுளின் வார்த்தையைத் தூய ஆவி அருளும் போர்வையாகவும் எடுத்துக் கொள்ளுங்கள் (எபேசியர் 6:17). "இப்படி இருந்தால் நீங்கள் பாம்பைக் கண்டு ஓடுவதைப் போலப் பாவத்தை விட்டு ஓடி விடலாம்" (சீராக்ஞானம் 21:2)

"நீ இளம் வயதில் இச்சைகளை விட்டு ஓடிவிட" முடியும் (2திமொ.2:22). கட்டுப்பாடற்ற-வர்களின் தவறான வழிகளால் கவர்ந்-திழுக்கப்பட்டு உங்கள் உறுதி நிலையினின்று விழுந்துவிடாதபடி கவனமாயிருக்க" முடியும் (2 பேதுரு 3:17)....



☛ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கத்தோலிக்க திருச்சபைக்கு
## புதிதாக நியமிக்கப்பட்ட 14 புதிய கர்தினால்கள்



ஆனி மாதம் 29ம் திகதி கர்தினால்களுக்கான திருப்பலி நடைபெறும் போது இப் புதிய 14 கர்தினால்களையும் திருநிலைப்படுத்தல் நிகழ்வு இடம்பெறும் என திருத்தந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை (20-5-2018) அறிவித்தார்.

புதிய கர்தினால்கள் முறையே, ஈராக்கின் பெக்டேட் ஆயர் சால்தியான் கத்தோலிக்க சபையின் பெபிலோன் பேத்திரியாக்வர அதிமேதகு முதலாம் லூயிஸ் ரகாயேல் சொகோ ஆயர், விசுவாசத்தின் திருச்சபை, அறிவிப்பின் திருச்சபைகளை தலைமை தாங்கும் அதிபதி அதிமேதகு லூயிஸ் லெடாரியா ஆயர், அரச செயலாளர் (பணியாளர்) அதிமேதகு கியொவன்னி என்ஜலோ பெகியு ஆயர், திருத்தந்தை இருப்பிடத்தின் இரக்கச் செயல்கள் தொடர்பான செயற்பாடுகளுக்குப் பொறுப்பான அதிமேதகு கொன்டிரேட் க்ராஜேவிஸ்கி ஆயர், உரோமை துணைத்தலைவர் அதிமேதகு என்ஜலோ டீ டொனாடிஸ் அவர்கள் உரோமையில் கர்தினால் பதவியை பெறுவர்.

உலகம் பூராகவும் உள்ள கர்தினால்களாக சிவப்பு தொப்பியைப் பெறுபவர்கள் பாக்கிஸ்தானின் கராச்சியில் அதிமெதகு ஜோசப் கௌமிஸ் ஆண்டகை, போர்த்துக்கலில் பாத்திமா லீரியாஹி அதிமேதகு என்டோனியோ டு சென்டொஸ் மார்ட்டோ ஆண்டகை, பேரு ஹவான்காயோவின் அதி மேதகு. பேட்ரோ பெரேட்டோ ஆண்டகை, மடகஸ்கார் டெமாடாவின் அதிமேதகு டிசயர் சரபசானா, இத்தாலியின் எக்குவிலாஹு அதிமேதகு குசெப்பி பெட்டோச்சி ஆண்டகை, ஜப்பானின் ஒசாகாஹு அதிமேதகு தோமஸ் அக்வீனோ மென்கோ மாடா ஆண்டகை ஆகியோர்களாவார்கள்.

திருத்தந்தை அவர்கள் மெக்சிகோவின் ஓய்வுபெற்ற ஆயர் அதிமேதகு சர்ஜியோ ஒபெசோ ரிசேரா, பொலிவியாவின் ஓய்வுபெற்ற அருட்தந்தை டொரிபியோ டிகொனா போர்க்கோ, மற்றும் கிளரிசியன் சபையின் அதிமேதகு க்கிலே க்கிரேசிய சபையின் எக்விலீனா பொஸ்போ மெரினோ அருட்தந்தை அவர்களுக்கும் கர்தினால் பதவியை வழங்குவதாக திருத்தந்தை விசேடமாக தெரிவித்துக் கொண்டார். அவர்கள் இருவரும் 80 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்பதோடு, கர்தினால் ஆக தெரிவு செய்யும் விதிமுறைக்குள் அடங்கமாட்டார்கள்.

புனித பேதுரு மற்றும் பவுல் ஆகியோரின் திருவிழாவைக் கொண்டாடும் வருகின்ற ஆனி மாதம் 29ம் திகதி அவர்கள் திருத்தந்தையுடன் புனித பேதுரு பெசிலிக்காவில் (பேராலயத்தில்) திருப்பலியில் கலந்து கொண்டு, கடந்த வருடம் ஆயர்களாக தெரிவித்த-வர்களுக்கு பெல்லியம் சின்னம் வழங்கப்படும்.




# கிறிஸ்தவ
## புனிதத்துவத்தின் வரலாறு பெந்தக்கோஸ்தில் ஆரம்பம்



தூய ஆவியார் பெருவிழாவாகிய 20-05-2018 நண்பகலில் வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்த ஏறக்குறைய முப்பதாயிரம் விசுவாசிகளுக்கு, அல்லேலூயா வாழ்த்தொலி உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தூய ஆவியார், புனிதத்துவத்தின் ஊற்று என்பது பற்றி பேசினார்.

பெந்தக்கோஸ்து நாளில், இயேசுவின் திருத்தூதரக்ளும், சீடர்களும் அன்னை மரியாவோடு செபத்தில் ஒன்றித்திருக்கையில், கிறிஸ்தவ புனிதத்துவத்தின் வரலாறு ஆரம்பமானது, ஏனெனில், தூய ஆவியார், புனிதத்துவத்தின் ஊற்று மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள் (Gaudete et exsultate) என்ற தலைப்பில், புனித வாழ்வுக்கு அழைப்பு விடுக்கும் திருத்தூது அறிவுரையிலிருந்து மேற்கோள்காட்டிப் பேசிய திருத்தந்தை, கடவுளின் புனித மற்றும் விசுவாசமுள்ள மக்களில், தூய ஆவியார், புனிதத்துவத்தை அபரிவிதமாகப் பொழிகிறார் என்று கூறினார்.

நாம் எல்லாரும் புனிதத்துவத்திற்கு அழைக்கப்-பட்டிருக்கிறோம் எனவும், தூய ஆவியாரின் செயல்களுக்குத் தங்களைத் திறந்து வைத்திருப்பவர்கள், பெந்தக்கோஸ்து நாளில் தொடங்கப்பட்ட புனிதத்துவப் பணியை தொடர்ந்து ஆற்றுகின்றார்கள் எனவும் கூறினார், திருத்தந்தை. நாம் புனிதத்துவத்திற்கு ஆவல்கொள்ள வேண்டுமென்றும், அல்லேலூயா வாழ்த்தொலி உரையில் கூறியத் திருத்தந்தை, உலக மறைபரப்பு ஞாயிறுக்கென வெளியிடப்பட்ட செய்தி பற்றியும், இவ்வாண்டில் 175ம் ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் பாலர் சபையின் பணிகளுக்குப் பாராட்டும் தெரிவித்தார்.

# நல்ல ஆயர் தனது நேரத்தை தன்னைச் சாராத நிகழ்வுகளில் வீணாக்க மாட்டார்கள்

மேய்ப்பர்கள், அன்புகூரவும், ஆடுகளைப் பாரமரிக்கவும், சிலுவையை ஏற்கத் தங்களையே தயாரிக்கவும், பிறரின் வாழ்வில் தலையிடும் சோதனைகளை வெல்லவும் வேண்டுமென்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 18-05-2018 காலையில் மறையுரையாற்றினார்.

சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில், இயேசுவுக்கும், பேதுருவுக்கும் இடையே நடந்த உரையாடல் பற்றிச் சொல்லும் நற்செய்தி வாசகத்தை (யோவா.21,15-19) மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ், ஆண்டவரோடு உரையாடலில் ஈடுபடுவதற்கு முதல் படி அன்பு ஒன்றே. இறைமகனின் உண்மையான சீடர்களாக வாழ்வதற்கு முதலில் முக்கியமானது அன்பு என்றும், அதற்கு அடுத்ததாக, தங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை அக்கறையுடன் பராமரிப்பது என்றும், இதுவே ஓர் ஆயர், ஓர் அருள்பணியாளர் ஆகியோர், மேய்ப்பராக இருப்பதன் தனித்துவம் என்றும், மறையுரையாற்றினார்.

ஒரு மேய்ப்பரின் திசைமானி என்ன என்பதை விளக்கிய திருத்தந்தை, ஆண்டவரை ஏற்பவர்கள், மறைசாட்சியத்திற்கும், சிலுவையைச் சுமப்பதற்கும், விரும்பாத இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதற்கும் தயாராக இருக்க வேண்டும், இதுவே மேய்ப்பரின் பயணத்தை வழிநடத்தும் திசைமானி.



இயேசுவுக்கும், பேதுருவுக்கும் இடையே நடந்த உரையாடலின் இறுதிப் பகுதி, பிறரின் வாழ்வில் தலையிடும் சோதனைகளை வெல்வதற்கு அழைப்பு விடுக்கின்றது என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஓர் ஆயர் தனது மந்தையை அன்புகூர்ந்து, அதன்மீது அக்கறையாய் இருப்பார், நல்ல ஆயர் தனது நேரத்தை, தன்னைச் சாராத குழுக்களில் வீணாக்கமாட்டார் என்று கூறினார்.

# திருமணத்தில் கடவுளின் சாயல் உள்ளது – திருத்தந்தை



தம்பதியரின் வாழ்விலும், குடும்பத்திலும் இன்னல்கள் இருப்பது உண்மையெனினும், நாம் எப்போதும் திருமணத்தின் அழகை நோக்க வேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வைகாசி மாதம் 25ந் திகதி வெள்ளிக்கிழமையன்று மறையுரையாற்றினார்.

இயேசுவை சோதிப்பதற்காக, பரிசேயர் அவரிடம், கணவன் தன் மனைவியை விலக்கி விடுவது முறையா என்று கேட்டதற்கு, இயேசு கூறிய பதிலைக் கொண்டுள்ள, மாற்கு எழுதிய நற்செய்தி வாசகம் பற்றிய சிந்தனைகளை மறையுரையில் பகிர்ந்துகொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில், வெள்ளி காலையில் நிறைவேற்றிய திருப்பலியில் வாசிக்கப்பட்ட இந்நற்செய்தி வாசகத்தை விளக்கிய திருத்தந்தை, திருமணத்தின் அழகை மையப்படுத்தி உரையாற்றினார். அத்துடன், இத்திருப்பலியில் கலந்துகொண்டவர்களில், தங்களின் திருமண பொன்விழா மற்றும் வெள்ளி விழாவைக் கொண்டாடிய ஏழு தம்பதியரின் பகிர்வுகளுக்கும் செவிமடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

விசுவாச வாழ்வை, ஒருவரால் முடியும் அல்லது முடியாது என்பதோடு குறைத்துக்கொள்ள இயலாது, ஏனெனில் கிறிஸ்தவ வாழ்வு, கடவுள் வகுத்தபடி அமைவது என்றும், விசுவாசம், துல்லியமாக, திட்டவட்டமானதாக இருக்க வேண்டும் என்றும் திருத்தந்தை கூறினார்.

பரிசேயர்கள் கேட்ட கேள்விக்கு, இயேசு பதில் கூறுகையில், திருமண முறிவு பிரச்சனை பற்றிக் கூறாமல், தம்பதியரின் அழகு பற்றி அவர் கூறினார் என்றும், இந்தப் பரிசேயர்கள் போன்று, முறையா, முறையில்லையா என்ற, திருமணத்தைப் பிரிக்கின்ற கேள்வியில் ஆழ்ந்துவிடாமல், நேர்மறைச் சிந்தனைகளோடு திருமணத்தை நோக்க வேண்டும் என்றும் திருத்தந்தை கூறினார்.

திருமண வாழ்வில் குழந்தைகளுடன் பிரச்சனைகள் இருக்கின்றன, அதே தம்பதியருடன் விவாதங்களும், சண்டைகளும் நடக்கின்றன, ஆயினும், கணவனும் மனைவியும் ஒரே உடலாய் இருக்கின்றனர், அவர்களால் பிரச்சனைகளை மேற்கொள்ள முடியும், திருமணம், தம்பதியர்க்கு மட்டுமல்ல, திருஅவைக்கும் அருளடையாளம் என்பதையும் சுட்டிக்காட்டினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருமணம் மற்றும் குடும்ப வாழ்வில் பொறுமை என்ற பண்பு மிகவும் முக்கியமானது என்று மறையுரையில் கூறியத் திருத்தந்தை, திருமணத்தில் கடவுளின் சாயலும், உருவும் உள்ளது என்பதை நாம் எல்லாரும் புரிந்துகொண்டு தியானிக்க, ஆண்டவரிடம் அருளை மன்றாடுவோம் என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொகுப்பு : ஓய்வு பெற்ற பேராயர்
அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்



கத்தோலிக்க குடும்ப மறைக்கல்வி
Catholic Family Catechism

**101. அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்கள் யார்?**

ஆயர்களே, அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்கள். உரோமாபுரியின் ஆயரான திருத்தந்தை தான் பேதுருவின் வழித்தோன்றல். எனவே அவர்தான் நாம் காணக்கூடிய பொது கத்தோலிக்க திருச்சபையின் தலைவர். ஏனைய ஆயர்கள் அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்கள். ஆயர்களின் சம்மேளனத்தில் நியமிக்கப்பட்டு, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட தொகுதியை முழுமையாக செயற்படுத்துகிறார்கள்.

**102. கிறிஸ்துநாதர் விஷேச அதிகாரத்தை யாராவது ஒரு அப்போஸ்தலருக்கு கலந்துரையாடல் மூலம் அளித்துள்ளாரா?**

ஆம் கிறிஸ்து புனித பேதுருவுக்கு தமது திருச்சபையின் தலைவராக விஷேச அதிகாரத்தை அளித்துள்ளார். அவரை அப்போஸ்தலர்களின் தலைவராக நியமித்து முழுத் திருச்சபையின் மேலும் அதிகாரத்தை அளித்துள்ளார். அவருடைய வழித்தோன்றல்தான் இன்று உரோமின் ஆயரான திருத்தந்தை.

திருத்தந்தை உலகளாவிய ரீதியில் திருச்சபையின் ஆயனாகவும், சமயகுருவாகவும், அதிகாரம் செலுத்துகிறார். ஆயர்கள் ஆயராகவும், சமயகுருவாகவும் தமது சொந்த மேற்றிரானத்தை திறமையாகக் கையாளுகின்றார்கள். ஏனெனில் புனித பேதுரு உரோபுரியின் தலைவரானபடியால் அவரைத் தொடர்ந்து வரும் உரோமபுரி ஆயர்கள், உலகளாவிய ரீதியில் திருச்சபையின் திருத்தந்தையாக ஆகின்றார்.

புனித பேதுருவின் அப்போஸ்தலர் உரோமில் வேதசாட்சியாக மரித்தார். இன்று அவருடைய சமாதியின் மேல் புனித பேதுருவின் பசிலிக்கா கட்டப்பட்டுள்ளது.

அவர்கள் உணவருந்தியபின் இயேசு சீமோன் பேதுருவிடம், "யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்று கேட்டார். அவர் இயேசுவிடம், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!" என்றார். இயேசு அவரிடம், "என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்" என்றார். இரண்டாம் முறையாக இயேசு அவரிடம், "யோவானின் மகன் சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்று கேட்டார். அவர் இயேசுவிடம், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!" என்றார். இயேசு அவரிடம், "என் ஆடுகளை மேய்" என்றார். மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், "யோவானின் மகன் சீமோனே, உனக்கு என்னிடம் அன்பு உண்டா?" என்று கேட்டார். "உனக்கு என்னிடம் அன்பு உண்டா?" என்று இயேசு மூன்றாம் முறை கேட்டதால் பேதுரு துயருற்று, அவரிடம், "ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?" என்றார். இயேசு அவரிடம், "என் ஆடுகளைப் பேணிவளர்". (யோவா 21:15-17)

**103. ஆயருக்கு அவரின் பணித்தள வேலைகளுக்கு உதவிசெய்வது யார்?**

ஆயரின் பணித்தள பணிக்கு குருக்கள் உதவுகின்றனர். குருக்கள் தங்கள் பங்குகளிலும் ஏனைய பொறுப்புக்களிலும், ஆன்மாக்களை கவனிப்பதிலும் ஆயருக்கு உதவுகின்றனர். பங்குத் தளங்களில் பணிபுரியும் குருக்கள், கிறிஸ்தவ கட்டளை ஒழுங்குச் சட்டப்படியும், வழிபாட்டு ஒழுங்குகளில் விபரிக்கப்பட்டபடி அருட்சாதனங்களை மக்களுக்கு வழங்குவர். அவர்களின் பிரதான கடமை, நற்செய்தியைப் போதிப்பது, நற்செய்திப்படி புண்ணிய வாழ்வு வாழ மக்களுக்கு உதவுவது அவர்களின் கடமை. பங்குகளிலும், ஸ்தாபனங்களிலும் குறிப்பேடு தயாரிப்பதும் அவர்களது கடமை.

**104. திருச்சபைக்கு தங்கள் பணியை மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கு கிறிஸ்துவினால் கோட்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளதா?**

ஆம் கிறிஸ்து திருச்சபைக்கு விசேட அறிகுறிகளான இறை அதிகாரம், வழுவாதன்மை, குறைபாடின்மை என்பவற்றை தனது பணியை நிறைவேற்றுவதற்கு உதவியாக அளித்துள்ளார்.

**105. தெய்வத் தன்மை வாய்ந்த அதிகாரம் என்றால் என்ன?**

தெய்வீக அதிகாரம் என்பது திருத்தந்தை ஆயர்களுக்குள்ள அதிகாரம். கிறிஸ்து இயேசுவினால் பேதுருவுக்கும் அவருடைய வழித்தோன்றல்களான அப்போஸ்தலர்களுக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரம். இந்த அதிகாரம் பரிபாலிக்கப்படுகிறது. கோட்பாடுகளை கற்பிப்பதற்கும், விசுவாசிகளைப் புனிதப்படுத்தவும், சமயவழிகளில் அவர்களை ஆள்வதற்கும், பரிபாலிக்கப்படுகிறது.

**106. 'வழுவாத்தன்மை' என்றால் என்ன?**

வழுவாத்தன்மை என்பது திருச்சபைக்கு தூய ஆவியானவரின் விசேட உதவியினால் விசுவாச கோட்பாடுகளையோ, ஒழுக்க சம்பந்தமான போதனைகளையோ, விசுவசிப்பதிலும், படிப்பிப்பதிலும் தவறு இழைக்க முடியா நிலையைக் குறிப்பதுதான் வழுவாத்தன்மை.

திருத்தந்தை, ஆயர்கள் ஒன்றாக சேர்ந்து பொது திருச்சபை, விசுவாசம், ஒழுக்கம் சார்ந்த படிப்பினைகளை கற்பிக்கும் தவறமுடியாது. அவர்கள் தவறினால் விசுவாசிகளை, ஈடேற்றத்திற்கு முக்கியமான காரியங்களில் ஏமாறவைக்கிறார்கள். இது தேவ நீதிக்கு எதிரான குற்றமாகும்.

**107. திருச்சபை எப்போது வழுவாவரத்துடன் போதிக்கிறது?**

திருச்சபை, திருத்தந்தை தனியாகவே அல்லது ஒன்றாக ஆயர்களுடன் பொது கவுன்சிலுடன் சேர்ந்தோ உலகில் பரந்து விசுவாசம் அல்லது ஒழுக்கம் சம்பந்தமான கோட்பாடுகளை விசுவாசிகள் நம்புவதற்காக அகில உலக விசுவாசிகளுக்கும் போதிக்கும்போது வழுவாவரத்துடன் போதிக்கின்றது. திருத்தந்தையின் வழுவாவரம் 1870ல் முதலாவது வத்திக்கான் சங்கத்தால் விசுவாச அறிக்கைகளில் ஒன்றாக வெளியிடப்பட்டது. இப்போதனை வெளியிடப்பட்டு, படிப்பினை "எக்ஸ் கத்திற்றா" என்று பெயரிடப்பட்டது.

எனவே நான் உனக்குக் கூறுகிறேன், உன் பெயர் பேதுரு, இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா. (மத் 16:18)

"ஆனால் நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன். நீ மனந்திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து" என்றார். (லூக் 22:32)

அவர்கள் உணவருந்தியபின் இயேசு சீமோன் பேதுருவிடம், "யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்று கேட்டார். அவர் இயேசுவிடம், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!" என்றார். இயேசு அவரிடம், "என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்" என்றார். இரண்டாம் முறையாக இயேசு அவரிடம், "யோவானின் மகன் சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்று கேட்டார். அவர் இயேசுவிடம், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!" என்றார். இயேசு அவரிடம், "என் ஆடுகளை மேய்" என்றார். மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், "யோவானின் மகன் சீமோனே, உனக்கு என்னிடம் அன்பு உண்டா?" என்று கேட்டார். "உனக்கு என்னிடம் அன்பு உண்டா?" என்று இயேசு மூன்றாம் முறை கேட்டதால் பேதுரு துயருற்று, அவரிடம், "ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?" என்றார். இயேசு அவரிடம், "என் ஆடுகளைப் பேணிவளர்". (யோவா 21:15-17)

**பாடங்கள் தொடரும்...**


# மனித மாண்புணர்த்திய துறவி!

ஒரு கிராமத்தின் வழியாகத் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்த துறவியை ஒரு தெருப் பக்கம் செல்ல வேண்டாம் என்று மக்கள் கூறினார்கள். காரணம் கேட்டபோது, "அங்கே ஒரு குடிகாரன் குடித்துவிட்டு நிலைமறந்து செயல்படுகிறான்" என்று பதில் சொன்னார்கள்.

துறவி அந்தக் குடிகாரன் இருக்கும் தெருவின் பக்கமாகவே நடந்து சென்றார். இவரைத் தெருவில் கண்டதும் அவன் வேகமாக ஓடிவந்து ஒரு கயிற்றுக் கட்டிலைத் தூக்கி அவர்மீது வீசினான். துறவி அடிபடாமல் ஒதுங்கிக் கொண்டார். கட்டில் கீழே விழுந்து விட்டது. அதன் பிறகு அவன் அவரை வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசினான். துறவி ஒன்றுமே செய்யவில்லை. அவன் தன் மானத்தை மறைக்குமாறு உடையணியவில்லை, அலங்கோலமான, உடையில் பரிதாபமாக நின்று கொண்டிருந்தான்.

அவன் பேசிய பேச்சுக்கள் கேட்குமாறு இல்லை. மக்களே கதைப் பொத்திக்கொண்டு நின்றார்கள். துறவி அந்தக் குடிகாரன் அருகில் எதுவும் பேசாமல் நிற்பதைக் கண்டதும் அவன் கொஞ்சம் பயப்படலானான். மிக அமைதியாக இருக்கும் இவர் என்ன செய்வாரோ என்று யோசித்தவன், பேச்சைவிடுத்து அப்படியே உட்கார்ந்துவிட்டான். துறவி அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்றுவிட்டார்.

மறுநாள் காலை வேளையில் துறவி மீண்டும் அந்தக் குடிகாரன் வீட்டுப்பக்கம் வந்தார். அவரை தற்போது உற்று நோக்கிய குடிகாரன் நேற்றுச் சந்தித்த



மனிதர் என்று புரிந்துகொண்டான்.

துறவி தன்னோடு ஒரு கயிற்றுக் கட்டிலையும், இரண்டு துணிகளையும், கையில் கொஞ்சம் இனிப்பும் கொண்டு வந்திருந்தார். முதலில் அவனிடம் கட்டிலைக் கொடுத்தார். பின்பு, "நேற்று நீ குடிபோதையில் என்னை அடிப்பதற்காக ஒரு கட்டிலை வீசினாய். அது உடைந்து போய்விட்டது. நான் இங்கு வந்ததால் உன் கட்டில் பாழாகிவிட்டது. அதற்குப் பதிலாக இதை வைத்துக்கொள்" என்று கொடுத்தார்.

பின்பு அவன் வாயைத் திறக்கச் சொல்லி அவன் வாயில் இனிப்புக்களைப் போட்டார். "நேற்று உன் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் சகிக்க முடியாதவை. ஒருவகையில் உன் நாவிலிருந்து நல்லதைப் பெறுவதற்குப் பதிலாக அசிங்கமான வார்த்தைகள் வர நான் காரணமாகிவிட்டேன். எனவே இனிமேல் இந்த இனிப்பைப் போலவே உன் வார்த்தை இனிக்கட்டும்" என்று கூறினார்.

பிறகு அவர் கொண்டு வந்திருந்த இரண்டு ஜோடி உடைகளை அவனிடம் கொடுத்தார். "மனிதனாகப் பிறந்த நீ நின்ற கோலம் அவலமானது. மனிதன் எந்த நிலையிலும் இப்படித் தன்னை இழந்து நிற்கக் கூடாது. எனவே, இனிமேல் இந்த உடைகளை அணிந்துகொண்டு உன் மனித மாண்பைக் காத்துக்கொள்" என்று கூறினார்.

குடிப்போதையிலிருந்து மீண்டிருந்த குடிகாரன் தன் தவறுகளை உணர்ந்தான். துறவி அவனுக்குச் சொன்ன விதம் பிடித்திருந்தது. அவனுக்குள் மாற்றத்தையும் உருவாக்கியது. மனிதனாகவே வாழ முடிவு செய்தான்.

> "முதலில் நீ முயற்சி செய். பின்னர் கடவுளின் உதவியைத் தேடு. உழைப்பவனுக்குக் கடவுள்தாமே வந்து உதவுவார்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவர்ந்திழுக்கும் காந்தக் குரல்

ஆனி 13

# தூய அந்தோனியார்











**"எந்த அளவையால் அளப்பீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்" லூக். 6:38**

போர்த்துக்கல் நாட்டின் தலைநகரம் லிஸ்பன் வரலாற்று சிறப்பு கொண்டது. இந்தியாவிற்கு வர கடல் வழி கண்டுபிடித்த வாஸ்கோடகாமாவும், பார்புகழ் புனித சவேரியாரும், லிஸ்பனிலிருந்து தான் இந்தியாவுக்கு புறப்பட்டனர். அங்கிருந்துதான் கார்மேகங்களுக்கிடையில் தோன்றிய விடிவெள்ளி போன்று 1195 ஆவணி 15ஆம் நாள் அன்னை விண்ணேற்பு நன்னாளில் மார்த்தீன், மேரி என்ற செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தார் அந்தோனியார். அவரது ஞானஸ்நான பெயர் பெர்டினான்ட். 15 வயதில் தேவ அழைத்தலை உணர்ந்த பெர்டினான்ட் தம் சபைத் தலைவர்களின் விஷேச அனுமதிபெற்று கோயாபுராவிலுள்ள புனித அகுஸ்தினார் சபையில் சேர்ந்தார். வீட்டாரும் நண்பர்களும் இவரை இங்குவந்து சந்தித்ததால் தொல்லையை உணர்ந்த பெர்டினான்ட் தம் சபைத் தலைவர்களின் விஷேச அனுமதிபெற்று கோயம்புராவிலுள்ள சபையின் வேறு இல்லத்திற்கு மாற்றம் பெற்றார். சிறந்த அறிவாற்றல் கொண்ட இவர் இங்கே வேதாகமப் படிப்பிலும் திருச்சபை தந்தையர்கள் பற்றிய அறிவிலும் 8 வருடங்கள் செலவிட்டார்.

எளிமைக்கு இருப்பிடமான பிரான்சிஸ்கன் சபை உறுப்பினர்கள் சிலர் கோயம்புரா மடத்திற்கு வந்தனர். அவர்களை உபசரிக்கும் பணியிலிருந்த பெர்டினான்ட் அவர்களது எளிமை, குறைவில்லா மகிழ்ச்சி இவற்றைக் கண்டு அவர்கள் சபையில் சேரவிரும்பினார். பின்பு ஒரு சமயம் 5 பிரான்சிஸ்கன் சபையினர் மொரோக்காவுக்கு வேதபோதகப் பணிக்குச் சென்று வேதசாட்சிகளாக மரித்ததைக் கேள்விப்பட்டு தானும் அவர்கள்போல போதித்து வேதசாட்சியாக விரும்பி பிரான்சிஸ்கன் சபையில் சேர அனுமதி நாடினார். கிடைத்தது. இச்சபையில் தனது பெயரை 'அந்தோனியார்' என்று மாற்றினார். விரும்பியபடி மொராக்கோ பயணமானார். காய்ச்சல் வந்ததால் மொராக்கோ கடற்கரையில் கால் ஊன்ற முடியவில்லை. பின் ஸ்பெயினுக்குக் கப்பலில் புறப்பட்டார். கடும் புயலினால் கப்பல் திசைமாறி சிசிலிக்கு சென்றது. அங்கிருந்து அசிசிக்குச் சென்றார்.

ஏற்கனவே குருவாக ஆகியிருந்ததாலும் தனது தகுதியை வெளியே கூறாதிருந்ததாலும் இவரை சபையோர் பெரிதாகக் கருதவில்லை. தியான மடத்தில் இவருக்கு பணி கொடுத்தனர். திருப்பலி நிறைவேற்றுவதும், பிற நேரங்களில் சமையல், வீட்டுத் துப்புறவுப் பணியில் பங்கு எடுப்பதுமாக வாழ்வு ஓடியது.

போர்லி என்ற இடத்தில் குருப்பட்ட நிகழ்ச்சி நடந்தது. வழக்கமாக அங்கிருந்த பிரான்சிஸ்கள், சாமிநாதர் சபையோரின் உறுப்பினர்களுக்கு பிரசங்கம் நடைபெறுவது வழக்கம். வந்திருந்தவர்களில் பிரான்சிஸ்கன் சபையிலிருந்தோ, சாமிநாதர் சபையிலிருந்தோ எவரும் தகுந்த தயாரிப்பில்லாததால் போதக மேடையில் ஏறத் தயங்கினர். மடத்துத் தலைவர் ஆணையிட அந்தோனியார் பணிவுடன் மேடை ஏறி சொல்நயத்தால் கேட்டவர்களை காந்தம்போல் கவர்ந்தார். இதிலிருந்து அவரது போதக பணி ஆரம்பமானது.

தம் பிரசங்கத்தால், தப்பறைக் கொள்கைவாதிகளுக்கு பூகம்பமானார். கனமான பாவிகளை மனமாற்றினார். ஒரு சமயம் பெரிய மழை வருவதாக அறிகுறி தெரிந்தது. மக்கள் கூட்டம் பயந்தது. "அஞ்சவேண்டாம், அப்படியே அமைதியாக இருந்து கேளுங்கள்" என்றுகூறி திரு உரை ஆற்ற, சுற்றிலும் மழை பொழிய பிரசங்கம் நடந்த இடத்தில் மட்டும் ஒரு சொட்டு நீர்கூட விழாமல் புதுமையாக மழைபெய்தது. வேறோரு சமயம் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது "இப்போது சாத்தான் ஒரு தீமை செய்யக் காத்திருக்கிறான். எனினும் நீங்கள் அஞ்சவேண்டாம்" என்று கூட்டத்தைப் பார்த்துக்கூற சிறிது நேரத்தில் மேடை சரிந்து விழுந்தது. ஆனால் அந்தோனியாருக்கோ கூட்டத்தினருக்கோ எந்தவித ஆபத்துமில்லை.

ஆல்பிஜென்ஸியர் என்ற தப்பறை கொள்கையினர் தங்களுக்கு சரியான புத்தி புகட்டவந்த போதகர்களை அடித்து கொடுமைப்படுத்திய காலத்தில், அந்தோனியார் அவர்களை நாடிச் செல்லவே, அவரது போதனையை எவரும் செவிமடுக்க முன்வரவில்லை. ஒரு பக்கம் கடல், மறுபக்கம் ஆறு. நடுவிலுள்ள மைதானத்தில் போதிக்க ஆரம்பித்தார். "மீன்களே இறைவாக்குக்கு செவிமடுங்கள்" என்றார். புதுமை நிகழ்ந்தது, இரண்டு, இடங்களிலுள்ள மீன்கள் சிறியன முன்வரிசைகளிலும் பெரியன பின் வரிசைகளிலும் நின்று செவிமடுத்தன. இதைக்கண்டு வெட்கி, மாந்தர் முன்வந்து போதனைக்குச் செவிசாய்த்தனர்.

அவர் எந்த அளவு துணிவுடனும், ஒளிவு மறைவின்றியும் போதித்தாரென்றால் திருச்சபை அதிகாரிகளின் முறையற்ற நடவடிக்கைகளையும்கூட சாட ஆரம்பித்தார். "இந்த விமர்சன வார்த்தைகள் அங்கே தொப்பி அணிந்து அமர்ந்திருக்கும் ஆயரே, உமக்குத்தான்" என்று பிரஜஸ் ஆயர் சைமன் சல்லியை ஒரு சமயம் சாடினார். பதுவை நகர் போதகப் பணியை ஆரம்பித்தார். 50 சதவீதம் வட்டி வாங்கி ஏழைகளுக்கு அநீதி விளைவித்தோரை சாடினார். அரசாங்கமே இவரது போதனையால் உற்சாகம் பெற்று, கடன்பட்ட காரணத்தால் எவருக்கும் சிறைத்தண்டனை வழங்கக்கூடாதென்று ஒரு சட்டத்தை அமுலாக்கியது. அந்தோனியாரே சட்டத்தை எழுதிக்கொடுத்தார். நகல் பாதுகாக்கப்பட்டது.

தனது அந்திமகாலம் அடுத்ததை உணர்ந்து நகரில் இருந்து அப்பாலுள்ள ஓர் ஒதுக்குப்புறத்தில் சிறு குடிசையில் தப, செப வாழ்வில் ஈடுபட்டு தன்னை மறுவாழ்வுக்குத் தீவிரமாகத் தயாரிக்கலானார். 1231 ஆனி 13 அன்று நோயுற்றார். ஒப்புரவு அருட்சாதனமும், இறுதி வழி உணவும் பெற்றார். இதற்குமுன் தேவமாதாவின் பேரில் அவருக்குப் பிடித்தமான ஒரு பாடலைப் பாடினார், உடலில் ஒளி பரவியது.

வாழ்நாளில் பல சர்ச்சைகளை தீர்த்துவைத்தார். இவரின் இறப்புக்குப் பின் சடலத்தை எங்குவைப்பது என்ற சர்ச்சைகள் எழும்பியது. கிளாரா மடத்தினர் தங்கள் மடத்தில் அடக்கம் செய்ய வேண்டுமென்றனர். இறுதியில் பிரான்சிஸ்கன் கல்லறைத் தோட்டத்தில் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அன்றே ஊமைகளை பேசச்செய்தும், செவிடர்களைக் கேட்கச்செய்தும், முடவர்களை நடக்கச்செய்தும் புதுமைகள் ஆற்றினார்.

பிற்காலத்தில் உடலைத் தோண்டி எடுத்து பதுவையில் இடமாற்றம் செய்ய முயல்கையில், உடல் எல்லாம் அழிந்திருக்க நாக்கு மட்டும் அழியாதிருந்தது. அதை இன்றும் காண முடியும்.

நாளாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட நாளாகியது. குழந்தை பேறில்லாத ஒரு பெண் கோவிலுக்குச் சென்று அந்தோனியார் சுரூபம் முன் உருக்கமாக 9 செவ்வாய்கிழமைகள் செபித்தாள். கேட்டபடி குழந்தை வரம் அருளப்பட்டது. ஆனால் குழந்தை அங்கவீனமாகப் பிறந்தது. அதனை அவர் பாதம் கிடத்த 'அங்கவீனம் போய்விடட்டும், இவனை குருவாக அர்ப்பணிக்கிறேன்' என்று மீண்டும் செபித்தாள். குழந்தையைத் தூக்கி பார்த்தபோது அங்கவீனம் போய்விட்டது. பிற்காலத்தில் 9 என்பது 13 செவ்வாய்க்கிழமைகளாக மாறியது.

டௌலன் என்ற நகரில் வாழ்ந்த லூயிசாள் தனது பட்டறைக் கதவுத் திறக்கமுடியாது கஷ்டப்பட்டாள். பூட்டைத் திறப்பதில் பேர்பெற்ற ஆசாரியைக் கூப்பிட்டு 'அந்தோனியாரிடம் வேண்டியிருக்கிறேன், திறவும்' என்றாள், பலனில்லை. 'ஏழைகளுக்கு உணவு வழங்குகிறேன்' என்று அந்தோனியாரிடம் சிறிது செபித்துவிட்டு இப்போது திறவும் என்று ஆசாரியைப் பணித்தாள். என்னே புதுமை! கதவு திறந்தது. எனவேதான் அந்தோனியார் சுரூபம் முன் விண்ணப்பப் பெட்டியும், ஏழைகளுக்கு செலவிடக் காத்திருக்கும் காணிக்கைப் பெட்டியும் உள்ளன.

| | |
|---|---|
| **அந்தோனியார் பிறப்பு** | **- 1195** |
| **அந்தோனியார் துறவு நிலை** | **- 1210** |
| **அந்தோனியார் குருப்பட்டம்** | **- 1219** |
| **அந்தோனியார் முதல் மறை உரை** | **- 1221** |
| **அந்தோனியாரிடம் தேவபாலன் தவழ்ந்தல்** | **- 1225** |
| **அந்தோனியார் கடன் நிவாரண சட்டம்** | **- 1231** |
| **அந்தோனியார் மரணம்** | **- 1231 ஆனி 13** |
| **அந்தோனியார் புனிதர் பட்டம் பெறுதல்** | **- 1232 வைகாசி 30** |
| **அந்தோனியார் வேதபாரகர் பட்டம்** | **- 1946 தை 16** |

**தேவனின் அரசைப் பரப்பிடவே**
**திறமைகள் அனைத்தையும் செலவழித்தே**
**திரு அடியார் அந்தோனியாரே**
**திருப்பா தனில் உமை வாழ்த்துகின்றோம்**

**எளிய வாழ்வை விரும்பியதால்**
**ஏந்தலே பிரான்சிஸ் சபை சேர்ந்தீர்**
**இயேசுவின் திரு உளம் தினம் பணிந்து**
**இகம் புகழ் போதகர் ஆனீரே**

**ஏழைக்கு இரக்கம் காட்டுபவர்**
**ஏகனின் உதவியை அடைந்திடுவீர்**
**என்பதை மண்ணவர் அறிந்திடவே**
**ஏந்தலே புதுமைகள் பல செய்தீர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருமேனியா
ஐரோப்பாவில் வேலைவாய்ப்பு
தையல் இயந்திர இயக்குநர்
SWING MACHINE OPERATOR
600 சம்பளம் US$ 350 - 550
அரசு அங்கீகரித்த கட்டணம் Rs.319,140/-
1 US$ = 158/- (பெறுமதி மாற்றமடையலாம்)
இலவசம்
• ஒருவழி விமானச்சீட்டு
• உணவு, வைத்தியம், போக்குவரத்து
• தங்குமிடம்
அழையுங்கள் :
071 6774827 / 0113 199000 / 077 9380106
நிபந்தனை
• இரண்டுவருட ஒப்பந்தம். (நீடிக்க கூடியது)
• நாளொன்றுக்கு 8மணி. கிழமைக்கு 6 நாட்கள்
பதிவு இல: 3107
AL/3107/Advt./03/18
(N 1097)
ஜே சீ இன்டர்நெஷனல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலையம்
இல. 68/1, தேவத்த வீதி, ராகம. (ராகம புகையிரதநிலையத்திற்கு முன்பாக)

மணமகன் தேவை
1990ல் பிறந்த, கொழும்பு தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில்புரியும் பட்டதாரி மகளுக்கு மணமகன் தேவை (உள்நாடு / வெளிநாடு)
தொடர்புகளுக்கு
032 2220021,
032 7912670
(5 மணிக்குப் பின்)
(N 1014)

எமது இணையத்தள முகவரி
http://www.colomboarchdiocesancatholicpress.com

## 01 அதிமேதகு தோமஸ்...

எனவே அதற்காக நாம் ஒன்றிணைந்து செபிப்போம். முத்திப்பேறு பெற்ற பட்டத்தினையும் புனிதப்படுத்துவதற்கான செயல்பாட்டிற்கும் இவரின் சிபாரிசின் பேரில் அல்லது மன்றாட்டின் பேரில் பரிந்துரைகள் மூலம் புதுமைகள் இடம்பெற வேண்டும். அப்புதுமை கூடுதலாக குணமாக்கல்களால் இருக்க வேண்டும். இவற்றிற்கு பின்வருவன எதிர்பார்க்கப்படுகின்றன.

1. ஒருவர் குறிப்பிட்ட ஏதாவது ஒரு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற மருத்துவ சான்றிதழ்.
2. அவருக்கு ஏற்பட்ட குணமாக்கல் திடீரென எதிர்பாராத விதத்தில் நடைபெற்றதாக இருக்க வேண்டும்.
3. அந்த குறிப்பிட்ட நோயாளி தற்போது பூரண குணமடைந்துள்ளார் என்ற மருத்துவ சான்றிதழ்.
4. இக்குணமாக்கல் மருத்துவத்தினால் அல்லாமல் ஆச்சரியப்படக்கூடிய வகையில் குணம்பெற்றிருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டவைகள் தவிர்ந்த நீங்கள் முன்வைக்கும் எந்த சான்றும் புதுமையாக குணமாக்கலாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இவ்வாறு புதுமை எவருக்காவது ஏற்பட்டிருக்குமாயின் அதுபற்றிய விபரங்களை பின்வரும் முகவரிக்கு அறிவிக்கவும்.

**The Episcopal Delegate**
**Canonziation Committee**
**Archbishop's House**
**Borella, Colombo - 8.**

## 01 மாணவர்களின்...

அவர்களின் வழித்தோன்றலான இச் சகோதரர்கள் இன்று இம்மண்ணிலே காலடி பதித்து, 150 ஆண்டுகளைக் கடந்துள்ளனர்.

எனவே அவர்களை வாழ்த்துகின்ற இவ்வேளையில் 2103ம் ஆண்டு ரோமாபுரியில் உள்ள இவ்வருட்சகோதரர்களின் பாடசாலைக்கு சென்ற திருத்தந்தை கூறியதை இவ்வேளையில் நினைவு கூறுகின்றேன். மாணவர்களுக்கு நாம் மனித இனத்தை, உலக படைப்பை, அதன் அழகை எடுத்துக் காட்டி அவர்கள் ஒழுக்கமும், கல்வியும் சிறக்க முழுமையாக எம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்றார்.

## 01 திருத்தந்தை 6ம் பவுல்...

தீர்மானம் செய்யப்பட்டன. ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட 2018ம் உலக ஆயர் பேரவை இளம் சந்ததியினரின் விசுவாசம் மற்றும் கலை திறன்களை கருப்பொருளாகக் கொண்டு, ஐப்பசி மாதம் 3ம் திகதி முதல் 28ம் திகதி வரை நடைபெறும் காலப்பகுதியில் .... புனிதர் நிலைக்கு உயர்த்தும் திருப்பலி இடம்பெறும்.

வத்திக்கானில் கடந்த பங்குனி மாதம் 7ம் திகதி வெளியிடப்பட்ட அறிவிப்புக்கிணங்கி திருத்தந்தை 6ம் பவுல் மற்றும் அர்ச்சிஷ்ட ஒஸ்கா ரொமேரோ அவர்கள் இருவரின் பரிந்துரையால் இடம்பெற்ற இரண்டாம் அரும்செயல்கள் திருப்பீடத்தின் வைத்தியக் குழுவினர்களினால் ஏற்றுக்கொண்டதை முன்னிட்டு புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான பாதை விரிவாக்கப்பட்டன.

## 02 நற்செய்திப் பெருவிழா

தெமட்டக்கொடை, புதுக்கடை பங்கு ஆலயங்களிலும் மாலை வழிபாடுகளையும், மத்துகமை புனித மரியாள் ஆலயத்தில் திருவிழிப்பு ஒன்றையும் நடாத்தினார்கள். கடந்த சித்திரை மாதம் 15- 22ம் திகதி வரை கொழும்பு செக்கடித்தெரு புனித வேளாங்கண்ணி ஆலயத்தில் தினமும் காலை வழிபாடு 9-12 வரையும், மாலை வழிபாடு மாலை 6-9 மணி வரையும் நடைபெற்றது இறுதி தினமாகிய 21ம் திகதி சனிக்கிழமை இரவு முழு இரவு வழிபாடு நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்வழிபாட்டில் கலந்து கொண்டதோடு பல அற்புதங்கள் நடைபெற்றதாக கூறினார்கள்.

## 09 இலங்கை மண்ணிலே...

என்று செயற்படத் தொடங்கினர். இன்று 55 அருட்சகோதரர்கள் இலங்கையிலும் பிலிப்பைன்ஸ்சிலும் பணியாற்றி தமது உருவாக்கல் பணியையும் மேற்கொண்டு வருகின்றனர்.

1959ஆம் ஆண்டளவில் பூரணமான ஓர் அமைப்பாக டியகல இளைஞர் நகரம், தனது பணியை இளைஞர்களுக்கெனச் செயற்படுத்தத் தொடங்கியது. இதே காலப்பகுதியில் தான் சகோதரர்கள் இங்கிருந்து இந்தியா, பாகிஸ்தான் போன்ற இடங்களுக்குத் தனது பணியை விஸ்தரித்தனர். பாகிஸ்தானின் பணித்தளம் மட்டுமே இவர்களுக்கு புதியது. காரணம் இந்தியாவில் அவர்கள் ஏற்கனவே சபையை ஆரம்பித்துச் சில பிரச்சினைகள் காரணமாக இடை நிறுத்தியிருந்தனர். ஆனால் இன்று பாகிஸ்தானில் இருந்தும் தமது பணியை இடைநிறுத்திக் கொண்டனர்.

தூய டிலாசாலின் சிந்தனை இலங்கையில் பலமாக வேரூன்றப்பட்டதால் 1972ஆம் ஆண்டு அவர்கள் டிலாசால் கல்வி நிறுவனத்தை, கொட்டாஞ்சேனையில் ஆரம்பித்தனர். இங்கு பாடசாலையைக் கைவிட்டவர்களுக்கு ஆங்கிலம், தொழிற் பயிற்சிகள் என்பன கற்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து L.C.E.S லசாலியன் சமூகக் கல்விச் சேவை முகத்துவாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் மேலும் இரு பாடசாலைகள் சேரிப்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுச் சேரிகளில் வாழ்பவர்களுக்குக் கல்வி புகட்டப்பட்டது. இது ஒரு மெச்சத் தகுந்த பணியாக எல்லோராலும் கணிக்கப்பட்டு வருகின்றது.

1991 ஆம் ஆண்டின் இறுதியில் டிலாசால் சகோதரர்கள் தமது பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரும் முகமாக யாழ். மண்ணிலே காலடி எடுத்து வைத்துப் பணியாற்றத் தொடங்கினர். ஆனால் அவர்களது பணி 1999 ஆண்டின் இடப்பெயர்வோடு முற்றுப்பெற்று விட்டது.

இவ்வேளையில் அவர்கள் முகத்துவாரத்தில் (LEA) லசாலியன் ஆங்கிலக் கல்வி நிறுவனத்தை நிறுவி அதன் மூலம் மாணவர்களுக்கு மட்டுமலல்லாமல் ஆசிரியர்களுக்கும் ஆங்கில பயிற்சியை வழங்கி வருகின்றனர். அதனை தொடர்ந்து மன்னாரிலும் பல புதிய பாடசாலைகளைப் பொறுப்பெடுத்து நிர்வகித்து வருவதோடு மன்னாரில் லசாலியன் ஆங்கில பாடசாலையையும், கொழும்பில் கொட்டாஞ்சேனையிலும், வத்தளையிலும் ஆங்கில மொழி பாடசாலைகளை ஆரம்பித்து நிர்வகித்து வருகின்றனர்.

இவ்வாறு கடந்த 150 ஆண்டுகளாக இலங்கை மண்ணிலே தமது சபை ஸ்தாபகரின் எண்ணங்களையும், ஆசைகளையும் நிறைவேற்றிய பெருமிதத்தோடு இவர்கள் பணி சிறக்க இவர்களோடு இணைந்து செயற்பட்ட, ஊக்கமளித்த, சந்தர்ப்பங்களை வழங்கிய ஆயர்கள், குருக்கள், துறவிகள், லசாலிய பங்காளிகள், லசாலிய குழுமத்தைச் சார்ந்தவர்கள், பழைய மாணவர்கள், தற்போதைய மாணவர்கள் ஒவ்வொருவரையும் நன்றியோடு நினைவு கூருகின்றனர். இனிவரும் காலங்களிலும் இவர்கள் பணி இம்மண்ணிலே சிறக்க இச்சபைக்கு அழைத்தல்கள் பெருக பலர் மனமுவந்து தம்மை இப்பணிக்கு அர்ப்பணித்திட இறையருள் வேண்டி வாழ்த்துவோம்.

இவ்வழிபாட்டில் பிரிவினைச் சபையைச் சேர்ந்த சகோதரர்களும் திருச்சபையில் இணைந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இவ்வழிபாட்டில் பங்குத் தந்தை அருட்தந்தை ஆனந்தன் பர்னாந்துபுள்ளே அடிகளாரும், அருட்தந்தை கிளேரியன், அருட்தந்தை ஒனாசிஸ், அருட்சகோதரர் டிலோய்ட்சன் ஆகியோரும் இணைந்து சிறப்பித்தனர்.

தகவல் : பங்குத்தந்தை

## 11 இளையோரின்...

“நீ இளம் வயதில் இச்சைகளை விட்டு ஓடிவிட” முடியும் (2திமொ. 2:22). கட்டுப்பாடற்றவர்களின் தவறான வழிகளால் கவர்ந்திழுக்கப்பட்டு உங்கள் உறுதி நிலையினின்று விழுந்துவிடாதபடி கவனமாயிருக்க” முடியும் (2 பேதுரு 3:17).

எப்பொழுதும் நீங்கள் இறை வேண்டலில் செப வாழ்வில் ஆழமாய் ஊன்றி நிற்கின்றபோது “எல்லா வேண்டல்களையும் மன்றாட்டுகளையும் இறைவனிடம் எழுப்புங்கள், எப்போதும் தூய ஆவியின் துணை கொண்டு வேண்டுதல் செய்யுங்கள். இதில் உறுதியாய் நிலைத்திருந்து விழிப்பாயிருங்கள். இறைமக்கள் அனைவருக்காகவும் மன்றாடுங்கள்” (எபேசியர் 6:18).

அப்பொழுது இயேசு உன்னைப் பார்த்து “இளைஞனே, எழுந்திடு” என்பார் (லூக்கா 7:14, 15). இளைய சமுதாயமே! உன் இளமை எத்துணை அழகானது. உன் வாழ்வு எத்துணை இனிமையானது என சுவைத்துப் பார்க்க நீ விரும்பினால் பாவமன்னிப்போடு கூடிய இறை வேண்டலைச் செய்ய முன்வாருங்கள்.

“என் இளமைப் பருவத்தின் பாவங்களையும், என் குற்றங்களையும் நினையாதேயும். உமது பேரன்பிற்கேற்ப என்னை நினைத்தருளும். ஏனெனில், ஆண்டவரே நீரே நல்லவர்” (திருப்பாடல் 25:7) என்று செபிக்கும்போது, “இறுதி நாள்களில் நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன். உங்கள் புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர். உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும், உங்கள் முதியோர் கனவுகளையும் காண்பர் (தி.ப 2:17) என்பது உண்மையாகும்.

இளைய தலைமுறையை உனக்குள் இருக்கும் உண்மை தெய்வத்தை நீ கண்டுகொள்ள உன்னை இந்த உலகம் வெறுத்த போதும் நான் உன்னை ஒருபோதும் மறவேன் என்றவரை நான் உன்னை நண்பன் என்றேன். என் தந்தை எனக்கு கூறியவை அனைத்தையும் உனக்கு அறிவிப்பேன் என்றவர் இயேசு. அவரிப் பேச, பார்க்க, நடக்க, வாழ, செப வாழ்வு இன்றைய இளையோருக்குத் தேவை. இளையோரின் செப வாழ்வு முறை என்பது ஆலயம் சென்று திருப்பலியில் பார்வையாளராய் இருப்பதைவிட பங்கேற்பது. இறை வார்த்தையை வாசிப்பது, கூடி செபிப்பது. இயேசு ஓர் இளைஞர். 33 வயதில் நம் மீட்புக்காக உயிரை தியாகம் செய்தவர். அவர் அனைத்துப் பணிகள் மத்தியிலும் தன் தந்தையிடம் செபித்தார்.

**இளைஞனே நீ???**

## 11 இறைவாக்கினர்...

**ஊ. கி.மு 601ல் எகிப்திடம் தோல்வியைத் தழுவிய பாபிலோன்:**

யூதா அரசன் யோயாக்கிம் பாபிலோனியருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து, எகிப்தியர் பக்கம் சாய்ந்துவிட்டான். கி.மு 598 மார்கழி மாதம் பாபிலோன் எருசலேமின் மீதுப் படையெடுத்து வந்து அதைத் தாக்கியது. அதில் யோயாக்கிம் மரணத்தைத் தழுவினான். அவனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த யோச்சின் காலத்தில் கி.மு 597 பங்குனி மாதம் எருசலேம் சரணடைந்தது. யோய்க்கின் ஆட்சிக் காலம் மூன்று மாதங்கள் மட்டுமே. அதற்குள் நெபுகத்நேசர் ஆட்சிக்கு வந்து யோயாக்கினை அகற்றி அவனையும், அவனுடன் பத்தாயிரம் தலைவர்களையும் நாடுகடத்தினான்.

நகரை சூறையாடினான் செதேக்கியாவை தனக்கு அடிப்பணிந்து கப்பம் கட்டும் அரசனாக நியமித்தான் (2அர.24:12-16). செதேக்கியா ஒரு வலிமையற்ற அரசன். தனக்கு முன் ஆட்சிசெய்தவர்களின் தவறுகளை இவனும் மறுபடியும் செய்தான். கி.மு 588ல் இறைவாக்கினர் எரேமியாவின் அறிவுரைகளுக்கு எதிராக, தீர், அம்மோன் நகர்களுடன் சேர்ந்துக் கொண்டு பாபிலோனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யலாம் என்ற எகிப்தின் திட்டத்தை அவன் ஒப்புக்கொண்டான். நெபுகத்நேசர் எருசலேமை கி.மு 586ல் அழித்தான்.

### இந்நூலின் பயன்:

இறைவாக்கினர் எரேமியா யூதா மக்களின் மீது வரவிருக்கும் தண்டனையை முன்னறிவிக்கவே இறைவாக்குரைத்தார். அவர் அனைத்து மக்களையும் குறிப்பாக யூதா மக்களை மனமாற்றம் பெற்று யாவே கடவுளின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியுமாறு எச்சரித்தார். யூதா மனமாற்றம் பெறுவதற்கு விடுக்கப்பட்ட எல்லா எச்சரிக்கைகளையும் எதிர்த்ததால், அவர்கள் மீது வரவிருக்கும் தண்டனை விரைவில் வரும் என்பதையும் அவர் முன்னறிவித்தார். யூதா மக்கள் யாவே கடவுளுக்குக் கீழ்ப்படியாது வாழ்ந்ததால், எரேமியா எருசலேமிற்கும், அதனைச் சுற்றியிருந்த நாடுகளுக்கும் வரவிருக்கும் தண்டனைகள், விளைவுகளைக் குறித்து எச்சரித்ததுடன், எருசலேமின் வீழ்ச்சியையும், அதற்கான நம்பிக்கை செய்தியையும் வரலாற்று ஆவணங்களாகவும் அவர் பதிவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘நல்ல மன அழுத்தம்’ தேவை

ஆங்கிலத்தில் மட்டுமல்ல உலக மொழிகள் எல்லாவற்றிலுமே இன்று யாருக்கும் பிடிக்காத வார்த்தை “ஸ்டிரெஸ்” எனப்படும் மன அழுத்தம். அதிலும் பொருள்மயமாகிவிட்ட இந்தக் காலகட்டத்தில் கருவில் இருக்கும் குழந்தைகூட எனக்கு மிகவும் டென்ஷனாக இருக்கிறது எனக் கூறும் நிலையில்தான் இருக்கிறது.

“ஃபாரெஸ்ட் கம்ப்” என்ற படத்தில் கதாநாயகன் காரணமே இல்லாமல் சும்மா ஓடுவான். பலரும் அவன் ஏதோ நோக்கத்துக்காக ஓடுகிறான் எனத் தவறாக நினைத்துக்கொண்டு அவனுடனேயே ஓடுவார்கள். அதுபோல் பலரும் எதற்காக ஓடுகிறோம் என்பதே தெரியாமல் வாழ்க்கை என்னும் ஓட்டப்பந்தயத்தில் ஓடிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, எல்லாமே ஒரு பெரும் பந்தயமாகிவிட்டது. எனவே, வென்றாக வேண்டும் என்ற அழுத்தம் அதிகரிக்கிறது.

## பார்வையை மாற்றுவோம்

மன அழுத்தம் ஏன் வருகிறது? இதுதான் இலக்கு என நினைத்திருப்பதை அடைய நம்மால் இயலாதபோது அல்லது இயலாது என நாம் நினைக்கும்போது வருகிறது. ஒரு ஓவரில் இருபது ரன்கள் அடிக்க வேண்டும் என்ற நிலையோ மறுநாள் தேர்வுக்குள் ஐம்பது பக்கங்கள் படிக்க வேண்டும் என்ற நிலையோ நமக்கு அழுத்தத்தைத் தருகின்றன.

மனரீதியாக மட்டுமின்றி உடல் ரீதியான பல கோளாறுகளுக்கும் மன அழுத்தமே காரணமாக அமைகிறது. ஆகவேதான் மேலை நாடுகளில் மன அழுத்தத்தை நீக்கும் பயிற்சிகள், சிகிச்சைகள் போன்றவை கோடிக்கணக்கான டாலர்கள் சந்தை மதிப்புடையவையாக இருக்கின்றன.

மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான முதல் வழி நாம் பார்க்கும் முறையை மாற்றிக்கொள்வதே. அதீதமான எதிர்பார்ப்புகளையும் யதார்த்தத்துக்குக் கொஞ்சமும் பொருந்தாத குறிக்கோள்களையும் மாற்றிக்கொள்ள வேண்டும்.

## ஸ்டிரெஸ்ஸே வேண்டாமா?

மாறாக, எல்லோரும் நினைப்பது போல் மன அழுத்தம் என்பது “பீப்” ஒலிகொண்டு மறைக்க வேண்டிய கெட்ட வார்த்தை அல்ல. மன அழுத்தம் என்பது தேவையான ஒன்றே. பிரச்சினைகள் வரும்போதுதான் புதுப்புது வாய்ப்புக்கள் வருகின்றன. தேர்வுகளே இல்லாவிட்டால் பலரும் பாடப் புத்தகங்களையே தொட மாட்டார்கள்.

நாம் பல துறைகளில் வெற்றி பெற்ற முதல் தலைமுறையினர் அளவுக்கு அடுத்த தலைமுறையினர் சிறந்து விளங்காமல் போவதைப் பல இடங்களில் பார்க்கிறோம். அதற்குக் காரணம் வென்றே ஆக வேண்டிய கட்டாயமும் அழுத்தமும் இல்லாமல் போவதே.

மன அழுத்தம் ஒரு அளவுவரை நமக்குத் தேவையான ஒன்றே. ஆங்கிலத்திலே இதை யூஸ்டிரெஸ் (நல்ல அழுத்தம்) என்கிறார்கள். அந்த அழுத்தம் கொடுக்கும் வேகம், நமது கவனத்தை மேம்படுத்தித் திறமையை வளர்க்க உதவுகிறது. ‘‘அமைதியான கடல், நல்ல மாலுமியை உருவாக்காது’’ என்பார்கள்.

அதுவே ஒரு அளவுக்கு மேல் போனால் டிஸ்டிரெஸ் எனப்படும் கெட்ட மன அழுத்தமாகிறது. அது நமது உற்சாகத்தைக் குறைத்து, செயல்திறனை வெகுவாகப் பாதிக்கிறது.

அலுவலகங்களில் ‘‘டார்கெட்’’ எனப்படும் இலக்குகளை வைத்து ஆராய்ந்ததில், இலக்குகளே வைக்காமல் ஜாலியாக வேலை பார்ப்பதைவிட மிதமான இலக்குகளை வைத்துக்கொண்டு கொஞ்சம் அழுத்தத்துடன் வேலை பார்க்கும்போது உற்பத்தித் திறன் கூடுகிறது எனக் கண்டறிந்துள்ளனர். அதேநேரம் மிகையான அதீத இலக்கும் உற்பத்தித் திறனைப் பாதிக்கிறது எனவும் அதே ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கானமுயலைக் கொன்ற அம்பை விட, யானை பிழைத்த வேல் ஏந்துவதுதானே இனிது எனக் குறள் கூறுகிறது. பிரச்சினைகளே இல்லாத வாழ்க்கையை வேண்டுவதைவிடப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறனை வேண்டுவதே புத்திசாலித்தனம். யதார்த்தமும்கூட.

பிரச்சினைகளும் மன அழுத்தமும் ஓர் அளவுக்கு நமக்குத் தேவையானவையே. அவை அதீதமாகப் போகாத சமநிலையே நலம் தரும் நான்கெழுத்து.



# மருத்துவம்

# கருப்பட்டியின் பயன்கள்



பனை மரத்திலிருந்து கிடைக்கும் பனை நீரில் இருந்து கருப்பட்டி என்கிற வெல்லம் தயாரிக்கப்படுகிறது. இதனைப் பனை வெல்லம் என்றும் அழைப்பர். பனைநீரை எடுத்து அவற்றை நன்றாகக் காய்ச்சினால் கருப்பட்டி கிடைக்கும். கருப்பட்டியுடன் நன்கு விளைந்த தேய்காயைச் சேர்த்து உண்ணும் பொழுது உடல் வலிமை பெறும்.

கருப்பட்டி சேர்த்து செய்யப்படும் உளுத்தங்கஞ்சி பெண்களுக்கு மாதவிடாய் சமயத்தில் ஏற்படும் இரத்த இழப்பை ஈடு செய்யும். வயிற்று வலியைப் போக்க கருப்பட்டி சாப்பிடலாம். சீரகத்தை வறுத்து, சுக்கு மற்றும் கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டால் நன்கு பசி எடுக்கும். கருப்பட்டியில் சுண்ணாம்பைக் கலந்து சாப்பிட்டால் உடல் சுத்தம் அடையும். கருப்பட்டி இரத்தத்தை சுத்திகரித்து உடலுக்கு சுறுசுறுப்பை கொடுக்கும்.

மேனி பளபளப்பு பெறும். கரும்பு சர்க்கரைக்குப் பதில் கருப்பட்டியைப் பயன்படுத்தினால் பற்களும், எலும்புகளும் உறுதியாகும். குழந்தைகள் முதல் பெரியவர் வரை இதைச் சாப்பிடலாம். நமக்குத் தேவையான கல்சியம் இதில் கிடைக்கிறது. சுக்கு கருப்பட்டி பெண்களின் கர்ப்பப் பைக்கு மிகவும் ஏற்றது.

சுக்கு, மிளகு கலந்து கருப்பட்டியை குழந்தை பெற்ற பெண்கள் சாப்பிட்டால் பால் நன்றாகச் சுரக்கும். அந்தத் தாய்ப்பாலைக் குடிக்கும் குழந்தைகளுக்கு நல்ல ஊட்டச்சத்துக்கள் கிடைக்கப் பெறும். ஓமத்தை கருப்பட்டியுடன் சேர்த்துச் சாப்பிட்டால் வாயுத் தொல்லை நீங்கும். குப்பைமேனிக் கீரையுடன் கருப்பட்டியைச் சேர்த்து வதக்கிச் சாப்பிட்டால் வறட்டு இருமல், நாள்பட்ட சளித் தொல்லை நீங்கும்.

கோப்பியில் சீனிக்குப் பதிலாக கருப்பட்டி போட்டுக் குடித்தால் உடலில் சர்க்கரையின் அளவு கட்டுப்பாடாக இருக்கும். இதில் சுண்ணாம்புச் சத்தும், நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகமாக இருக்கிறது. சர்க்கரை நோயாளிகள் கைக்குத்தல் அரிசி சாதத்துடன் கருப்பட்டியைக் கலந்து சாப்பிட்டு வந்தால் நலன் பயக்கும்.

புளிக்கரைசல் நீரில் பனை வெல்லத்தை கலந்து வெயில் காலங்களில் அருந்தினால் உடல் சூடு தணியும், களைப்பு நீங்கும், தாகம் தணியும்.

# முளைகட்டிய பயிர்கள்!



## செலவே இல்லாமல் சில நல்ல பயன்கள்!

செலவே இல்லாமல், பல நன்மைகள் கிடைக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், முளை கட்டிய பயிர்களை சாப்பிடுங்கள்.

- ✶ முளை கட்டிய பயிரில், ஊட்டச் சத்து அதிகமாக இருக்கிறது. குறிப்பாக, பி 12, இரும்புச் சத்து, மக்னீசியம் மற்றும் துத்தநாகம் அதிகம் கிடைக்கிறது
- ✶ அதிக புரதச்சத்து இருப்பதால், வளரும் குழந்தைகளுக்கு நல்ல ஊட்டச்சத்து கிடைக்கும்
- ✶ நார்ச்சத்து அதிக அளவில் உள்ளதால், செரிமானம் எளிதாக இருக்கும்
- ✶ புற்றுநோய் செல்களை அழித்து, சீரான இரத்த ஓட்டத்துக்கு உதவுகிறது
- ✶ தானிய ஒவ்வாமையை குறைக்கிறது
- ✶ செரிமானத்தைத் தூண்டக் கூடிய சத்து கிடைக்கிறது
- ✶ உடல் எடையை குறைக்க உதவுகிறது
- ✶ நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

### முளை கட்டிய பயிரை சாப்பிடும் முறை:

- ✶ பச்சையாக சாப்பிடுவது நல்லது
- ✶ வேக வைத்தோ, எண்ணெயில் பொரித்து சாப்பிடக் கூடாது
- ✶ முளை கட்டிய பச்சை பயறை, நீர் சேர்த்து அரைத்து, வெல்லம், தேன், தேய்காய் துருவல், உலர் திராட்சை சேர்த்து, காலை டிபனாக சாப்பிடலாம்
- ✶ சர்க்கரை நோயாளிகள், தினமும் ஒரு கப் சாப்பிட்டு வர, இரத்தத்தில் சர்க்கரையின் அளவு கட்டுப்படும்
- ✶ வயிற்றுப் புண், பெண்களின் கர்ப்பப்பை நோய்கள், வெள்ளைப் படுதல் மற்றும் அல்சரை குணப்படுத்தும்.

# அனைத்து நோய்களுக்கும் தீர்வாகும் தாம்பூலம்!



நம் முன்னோர் கடைப்பிடித்து வந்த சம்பிரதாயங்களில், வாழ்க்கையை நெறிபடுத்தும் தத்துவம் மட்டுமல்லாது, உடலை வளப்படுத்தும் நல்ல விஷயங்களும் அடங்கியுள்ளன. தாம்பூலம் தரிப்பதில் கூட, இப்படி ஒரு நல்ல விஷயம் அடங்கியுள்ளது.

பொதுவாக, வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றை சரியான விகிதத்தில் கலந்து சுவைக்கும் போது, அந்த சுவை உடலையும், மூளையையும் சுறுசுறுப்படையச் செய்வதுடன், இதயத்தையும் வலுப்படுத்துகிறது.

உடம்பில் உள்ள வாதம், பித்தம், கபம் போன்றவை சரியான விகிதத்தில் இல்லாமல் கூடவோ, குறையவோ செய்யும் போது நோய் ஏற்படும் என்கிறது சித்த வைத்தியமும், ஆயுர்வேதமும்!

இம்மூன்றையும், சமமான நிலையில் வைக்க உதவுகிறது தாம்பூலம். மேலும் இந்த மூன்றும் சரியான அளவில் இருந்தால், நோய் எதிர்ப்பு சக்தி ஏற்படும்.

பாக்கில் இருந்து கிடைக்கும் துவர்ப்பு, பித்தத்தை கட்டுப்படுத்துகிறது் சுண்ணாம்பில் உள்ள காரம், வாதத்தை போக்குகிறது் வெற்றிலையில் உள்ள உரைப்பு, கபத்தை நீக்கும்.

இது மட்டுமல்லாது, தாம்பூலத்தோடு சேர்க்கும் ஏலம், கிராம்பு, ஜாதி பத்திரி போன்றவை, வாயில் உள்ள கிருமிகளை கொன்று, ஜீரண சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. இதனால் தான், விருந்துகளில் வெற்றிலைக்கு முக்கிய பங்கு கொடுக்கப்படுகிறது.

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்போடு, புகையிலையும் சேரும்போது, இது, தீய பழக்கமாக மாறி விடுகிறது. நம் முன்னோரின் தாம்பூலத்தில் புகையிலை கிடையாது. வயதானோருக்கு ஏற்படக் கூடிய மிக முக்கியமான பிரச்சினை எலும்பு முறிவு. சிறிதளவு முறிவு ஏற்பட்டாலும், முதுமையின் காரணமாக, பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தி விடுகிறது.

பல நேரங்களில், சாதாரண எலும்பு முறிவே, மரணத்தை பரிசாக தந்து விடுகிறது. ஆனால், 20 ஆண்டுகளுக்கு முன், முதியோருக்கு அவ்வளவு எளிதில் எலும்பு முறிவு ஏற்பட்டதில்லை. அதற்கு காரணம், அவர்களிடமிருந்த தாம்பூலம் தரிக்கும் பழக்கத்தால் தான். ஒரு குறிப்பிட்ட அளவு சுண்ணாம்பு சத்து உடம்புக்கு நேராக கிடைக்கும்போது, எலும்புகள் வலுப்படுகின்றன. தாம்பூலம் தரிப்பதில் சில வரைமுறைகளும் உண்டு. காலை சிற்றுண்டிக்கு பின் போடும் தாம்பூலத்தில், பாக்கு அதிகமாக இருக்க வேண்டும். காரணம், மதிய நேரம், வெப்பம் அதிகமாகும்போது, உடம்பில் பித்தம் ஏறாமல் பாதுகாக்கும்.

அதேபோல, மதிய உணவுக்குப் பின், சுண்ணாம்பு சத்து அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும். அது, உணவில் உள்ள வாதத்தை, அதாவது, வாயுவை கட்டுப்படுத்தும். இரவில், வெற்றிலையை அதிகமாக எடுத்துக் கொண்டால், நெஞ்சில் கபம் தங்காது, இம்முறையில் தான் தாம்பூலம் தரிக்க வேண்டும். இதை மீறும்போது தான் சிக்கல் ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரையாடலும், கூட்டுறவும் மிக அவசியமான தேவைகள்

கிறிஸ்தவம், இந்து, புத்தம், சமணம், சீக்கியம் ஆகிய மதங்களைச் சார்ந்த பிரதிநிதிகள், இணைந்து வந்து, உரோம் நகரில் மேற்கொண்ட ஒரு முயற்சியை தான் பாராட்டுவதாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன்னைச் சந்திக்க வந்திருந்த பல்சமயத் தலைவர்களிடம் கூறினார்.

"தர்மமும் வார்த்தையும் - சிக்கல் நிறைந்த காலத்தில் கூட்டுறவும், உரையாடலும்" என்ற தலைப்பில், உரோம் நகரில் நடைபெற்ற ஒரு பன்னாட்டு கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதிநிதிகளை, வைகாசி 16, புதன் காலை, சாந்தா மார்த்தா இல்லத்தில் சந்தித்தத் திருத்தந்தை அவர்கள், இக்கருத்தரங்கு நடைபெற முயற்சிகள் மேற்கொண்ட அனைவரையும் பாராட்டினார்.

எதிர்பாராத வழிகளிலும், எதிர்பாராத அளவிலும், உலகெங்கும் மோதல்களும், இறுக்கமான சூழல்களும் உருவாகியுள்ள இன்றைய காலக்கட்டத்தில், உரையாடலும், கூட்டுறவும் மிக அவசியமான தேவைகளாக உள்ளன என்று திருத்தந்தை இக்குழுவினரிடம் எடுத்துரைத்தார்.



சிறு சிறு காரணங்களுக்காகவும், காரணங்கள் ஏதுமின்றியும் வன்முறைகள் நிகழும் நம் உலகில், மதத்தலைவர்கள், சந்திப்புக் கலாச்சாரத்தையும், உரையாடலையும் வளர்க்க பாடுபடவேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த பன்னாட்டுக் குழுவிடம் கேட்டுக்கொண்டார்.



## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

"குடும்பம், வருங்காலத்தின் நம்பிக்கை. கடும் இன்னல்களை எதிர்கொள்ளும் குடும்பங்களுக்கு, நம் ஆண்டவர் உதவுமாறு சிறப்பாகச் செபிப்போம்"

"பிறரன்புப் பணிகள் இன்றி, அன்பு கிடையாது. சகோதரர், சகோதரிகளுக்கு ஆற்றும் பணி, அன்புகொண்ட உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கிறது"


"பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் (மத்.7,12) என்ற பொன் விதியை ஒருபோதும் மறவாதீர்கள்"

"நமது தனிமையையும், நாம் தனித்து விடப்படுவதையும் தகர்க்கும்வண்ணம் கடவுள் நம்மை அன்பு செய்கிறார்"

"கிறிஸ்தவ வாழ்வு, இயேசுவில் வேரூன்றியிருக்க வேண்டும் மற்றும் பிறருக்காக வாழ வேண்டும்"

"இறையன்பும், பிறரன்பும் நம் வாழ்வின் இரு மூலைக்கற்களாக அமைய வேண்டும்"

# The barque of Paul நூல் பற்றி திருத்தந்தை பிரான்சிஸ்



அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களின் கடிதங்களை வாசித்தபோது, அத்திருத்தந்தை, கிறிஸ்துவுக்கும், திருஅவைக்கும் தாழ்ச்சி நிறைந்த அன்பின் சான்றாக விளங்கியது, தெளிவாகத் தெரிந்தது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

ஜொவான்னி பத்திஸ்தா மொந்தினி (Giovanni Battista Montini) என்ற இயற்பெயரைக் கொண்ட திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள் எழுதியுள்ள கடிதங்கள் பற்றி, அருள்பணி லெயோனார்தோ சப்பியன்சா அவர்கள் எழுதியுள்ள, "The barque of Paul" என்ற நூல் பற்றி தன் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இக்கடிதங்களை தான் வியந்து வாசித்ததாகவும், எதிர்ப்புகள் மற்றும் தீவிர மாற்றங்கள் இடம்பெற்ற சமுதாயத்தில், திருஅவை மற்றும் உலகின் தேவைகளில் மட்டுமே திருத்தந்தை கவனம் செலுத்தியுள்ளார் எனவும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

தன்னைத் தாக்கியிருந்த கடின நோய், தனது பாப்பிறைப் பணியைச் சரிவரச் செய்வதற்குத் தடையாய் இருப்பதை உணர்ந்த திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள், ஆழ்ந்து, சிந்தித்து, மனச்சான்றுபடி, புனித திருஅவையின் அதிமிக நன்மைக்காக, தனது திட்டவட்டமான விருப்பத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார் எனவும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

மேலும், திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களின் மிலான் பேராயர் பணி, குறிப்பாக, அவரின் 15 ஆண்டுகால பாப்பிறைப் பணி பற்றிய, புதியதும், பழையதுமாகிய பல எழுத்துப் பிரதிகளை, அருள்பணி சப்பியன்சா அவர்கள் வெளியிட்டுள்ளார்.

1965ம் ஆண்டு மே 2ம் தேதி, அப்போதைய திருப்பீடச் செயலர் மற்றும் கர்தினால்கள் அவைத் தலைவருக்கென திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், நம் நோய் அல்லது ஏனையத் தடை, பாப்பிறைப் பணியைப் போதுமான அளவு திறம்பட ஆற்ற இயலாமல் ஆக்குகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள், இதனை எழுதியபோது, அவர் பாப்பிறைப் பணியில் ஈராண்டை நிறைவு செய்திருக்கவில்லை.

# Centesimus Annus கருத்தரங்கில் முதுபெரும்தந்தை பர்த்தலமேயோ



கிறிஸ்தவக் கோட்பாடுகள் மட்டுமே, சுற்றுச்சூழல், தொழில்நுட்பம் மற்றும் அரசியல் சார்ந்த தீமைகளைக் குணமாக்க முடியும் என்று, கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும்தந்தை முதலாம் பர்த்தலமேயோ அவர்கள் உரையாற்றினார்.

"Centesimus Annus – Pro Pontifice" என்ற பாப்பிறை அமைப்பு நடத்திய பன்னாட்டு கருத்தரங்கில், மே 26, காலையில் உரையாற்றிய, முதுபெரும்தந்தை பர்த்தலமேயோ அவர்கள், "பொதுவான நன்மைக்கு, ஒரு பொதுவான கிறிஸ்தவத் திட்டம்" என்ற தலைப்பில் தன் கருத்துக்களை எடுத்துரைத்தார்.

"புதிய அரசியல் மற்றும் டிஜிட்டல் உலகில் வாழ்வுமுறை" என்ற தலைப்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் உரையாற்றிய, முதுபெரும்தந்தை பர்த்தலமேயோ அவர்கள், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சமுதாயம் மற்றும் அரசியல் ஆகிய தலைப்புகளில் விரிவாக தன் எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டார்.

இப்பன்னாட்டு கருத்தரங்கில் உரையாற்ற தன்னை அழைத்ததற்கு முதலில் நன்றி தெரிவித்த முதுபெரும்தந்தை அவர்கள், நாம் கடும் பிரச்சனையை எதிர்கொண்டு வருகிறோம் மற்றும் சமூகத்தில் அது ஏற்படுத்தும் விளைவு, உலக அளவில் தெரிகின்றது என்று கூறினார்.

மனநிறைவை அளிக்காத தேவைகளை அதிகம் உருவாக்குவதன் வழியாக, மனித சமுதாயத்தின் ஆன்மீகப் பாரம்பரியம் அழிந்துகொண்டு வருகிறது என்றும், சமூக நீதி, திருமண முறிவு, வன்முறை, குற்றங்கள், தனிமை, சமயவாதம், மோதல்கள் போன்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தொழில்நுட்பம் திறனற்றது என்பதை நிரூபித்துள்ளது என்றும் உரைத்தார் முதுபெரும்தந்தை.

சுதந்திரம், நீதி மற்றும் அமைதிக்கான நம் அர்ப்பணத்தை, விசுவாசம் விரிவாக்குகின்றது என்றுரைத்த முதுபெரும்தந்தை, ஒருமைப்பாட்டுணர்வை நடைமுறைப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பை இக்காலத்தின் நிலைமை அளிக்கின்றது எனத் தெரிவித்தார்.

நம் வருங்காலம் என்பது, எதை வைத்திருக்கின்றோம் என்பதில் அல்ல, மாறாக, எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதிலும், தன்னலக் கோட்பாட்டியலில் அல்ல, மாறாக பகிர்வதிலும் அமைந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார், முதுபெரும்தந்தை முதலாம் பர்த்தலமேயோ.

# தாய்லாந்து புத்தமதத் துறவிகளைச் சந்தித்த திருத்தந்தை




புத்தர்களும், கிறிஸ்தவர்களும் ஒருவர் ஒருவருடைய ஆன்மீக பாரம்பரியத்தை உளமார மதிப்பதில் வளரவேண்டும் என்பதே தன் விருப்பம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன்னை சந்திக்க வந்திருந்த புத்தமதப் துறவிகளிடம் கூறினார்.

தாய்லாந்து நாட்டிலிருந்து வருகை தந்திருந்த புத்தமதத் துறவிகளை, வைகாசி 16 புதன் காலை, அருளாளர் ஆறாம் பவுல் அரங்கத்தின் ஓர் அறையில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புதியதொரு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள புத்த மதத்தின் புனித நூல், தனக்கு வழங்கப்பட்டதற்கு நன்றி கூறினார்.

திருத்தந்தை, அருளாளர் ஆறாம் பால் அவர்களும், புத்தமத தலைவர், Somdej Phra Wanaratana அவர்களும் சந்தித்த காட்சி, பல்சமய உரையாடல் திருப்பீட அவை அலுவலகத்தின் வாசலில் மாட்டப்பட்டிருப்பதை, திருத்தந்தை சிறப்பாகக் குறிப்பிட்டுப் பேசினார்.

புத்தமதத்தினரும், கிறிஸ்தவர்களும் இணைந்து, நீதி, அமைதி, மனித மாண்பைக் காப்பது ஆகிய உயரிய விழுமியங்களுக்கு சாட்சிகளாகத் திகழவேண்டும் என்பதும் தன் மனமார்ந்த விருப்பம் என்பதை, திருத்தந்தை புத்தமதப் துறவிகளிடம் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வேண்டாம் பொருளாசை!

இது நுகர்வுக் கலாச்சாரத்தின் காலம்! கண்ணில் தெரிகின்ற பொருட்கள் - தேவையோ, தேவை இல்லையோ - அனைத்தையும் வாங்கிவிட வேண்டும் என்னும் மனநிலை பரவலாக உள்ள நிலை.

பொருட்களின்மீது ஆசையால், பணம் சம்பாதிக்க வேண்டும், மனைவியும் கட்டாயம் வேலை செய்ய வேண்டும், செய்யும் தொழில் தவிர கூடுதலாக ஒரு வருமானம் இருந்தால் நல்லது - இத்தகைய சிந்தனைகள் எல்லாரிடமும் காணக்கிடக்கின்றன. ஆனால், பணத்தாசையும், நுகர்வு வெறியும் பயனற்றவை மட்டுமல்ல, தீமையும் தருவன என்பதே விவிலியம் காட்டும் பாடம்.

## நன்மையா, தீமையா?

செல்வத்துக்கு சில வலிமைகள் இருப்பதுபோல மேலோட்டமாகத் தோன்றும். ஆனால், கூர்ந்து நோக்கின் அவை பலமல்ல, பலவீனமே என்பது புரிந்து போகும். இதோ அவற்றில் சில:

### 1. செல்வம் இறைவனின் ஆசி

உண்மைதான். விண்ணக, மண்ணக ஆசிகள், கொடைகள் அனைத்தும் கடவுளிடமிருந்தே வருகின்றன (காண்: எபே 1:3, 1அர. 3:13). இருப்பினும் செல்வம் தன்னலத்தோடு எப்போது பயன்படுத்தப் படுகிறதோ, அப்போது அது சாபமாக மாறிவிடுகிறது. "செல்வர்களே, ஐயோ உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்து விட்டீர்கள்" (லூக்கா 6:24) என்றார் இயேசு.

### 2. செல்வம் பாதுகாப்பு தரும்

இதுவும் ஒரு பொதுவான எண்ணம். ஆனால் எவ்வளவு பாதுகாப்பு. எத்தகைய பாதுகாப்பு?

தானியங்களையும், பொருள்களையும் போதுமான அளவு சேர்த்து வைத்த மனிதன், தான் பாதுகாப்பாக இருப்பதாக எண்ணிக் கொள்கிறான். ஆனால், கடவுள், "அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னை விட்டுப் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" (லூக். 12:16-21) என்கிறார்.

### 3. செல்வம் நண்பர்களைத் தரும்

உண்மை தான். ஆனால் எத்தகைய நண்பர்கள் என்பதில் கவனம் தேவை. "நேர்மையற்ற செல்வத்தைக் கொண்டு உங்களுக்கு நண்பர்களைத் தேடிக்கொள்ளுங்கள். அது தீரும்பொழுது அவர்கள் உங்களை நிலையான உறைவிடங்களில் ஏற்றுக்கொள்வார்கள்" (லூக். 16:9) என்றார் இயேசு.

"ஏழைகளுக்குத் தாராளமாய்க் கொடு. இதனால் இறை ஆசி முழுமையாக உனக்குக் கிடைக்கும்" (சீஞா.7:32). நீ போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்" (மாற். 10:21) என்பதே நண்பர்களை உருவாக்கும் வழி (லூக். 14:12-14).

## செல்வத்தின் தீமைகள்

### 1. செல்வம் பயனற்றது

தம்மைத்தாமே மீட்டுக்கொள்ள செல்வரால் இயலாது (திபா. 49:6-8, 13). சாகும்போது அவர்கள் எதையும் எடுத்துப் போவதில்லை. அவர்கள் செல்வமும் அவர்கள் பின் செல்வதில்லை.

### 2. செல்வம் இறுமாப்பு உருவாக்கும்

செல்வர் இறைவனைவிட தங்கள் பணத்தையே அதிகம் நம்புகின்றனர். "ஆண்டவரிடமிருந்து விலகிச் செல்வதே மனிதருடைய இறுமாப்பின் தொடக்கம். அவர்களின் உள்ளம் தங்களைப் படைத்தவரை விட்டு அகன்று போகின்றது" (சீ.ஞா. 10:12).

### 3. உள்ளத்தைத் திசை திருப்பும்

செல்வம் உடையோர் இறைவார்த்தையின்படி வாழ்வது கடினம். இறைவனின் மதிப்பீடுகளைவிட பொருள்களுக்கும் மனிதர்களுக்குமே அவர்கள் அதிக மதிப்பளிக்கின்றனர்.

விதைப்பவர் உவமையில் முட்செடிகளுக்குள் விழுந்த விதைகள் கவலை, செல்வம், வாழ்வில் வரும் இன்பங்கள் இவற்றால் நெருக்கப்பட்டு முதிர்ச்சி அடையாதவர்களைக் குறிக்கின்றன (லூக். 8:14). "செல்வம் பெருகும்போது உள்ளத்தை அதற்குப் பறிகொடுக்காதீர்" (தி.பா. 62:10) என்று எச்சரிக்கிறது இறைவார்த்தை.

### 4. பாவத்திற்கு இட்டுச் செல்லும்

ஒருவரிடம் உள்ள அதிக செல்வம் அவரைப் பாவத்துக்கு இட்டுச் செல்கிறது. பண ஆசை உள்ளவருக்கு எவ்வளவு பணம் இருந்தாலும் ஆவல் தீராது (சஉ.5:10). அந்த ஆவல் அவரைப் பாவத்துக்கு இட்டுச் செல்கிறது. "பொன்னை விரும்புவோர் நீதியைக் கடைப்பிடியார்" (சீ.ஞா. 31:15). "பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர்" (1திமொ. 6:10).

### 5. துன்பத்துக்கு இட்டுச் செல்லும்

"செல்வத்தின் மீதுள்ள விழிப்பு உடலை நலியச் செய்கிறது, அதைப் பற்றிய கவலை உறக்கத்தைத் துரத்தியடிக்கின்றது" (சீ.ஞா. 31:1). "செல்வரது செல்வப் பெருக்கே அவரை தூங்க விடாது" (சஉ. 5:12).

இவ்வுலக வாழ்வில் நலன்களை மட்டுமே அனுபவித்த செல்வர், மறுவாழ்வில் மிகுந்த வேதனைப்படுவர் என்று செல்வரும், இலாசரும் உவமையில் இயேசு (லூக் 16:19-25) தெளிவுபடப் போதித்தார்.

## செல்வம் பற்றிய சரியான மனநிலை

### 1.செல்வம் உங்களுடையதல்ல

"எங்கள் ஆற்றலும், எங்கள் கைகளின் வலிமையுமே இந்தச் செல்வங்களை எங்களுக்கு ஈட்டித் தந்தன என்று உங்கள் உள்ளங்களில் எண்ணாதபடி கவனமாயிருங்கள்" (இச. 8:17).

### 2. செல்வத்தைக் கேட்க வேண்டாம்

ஞானத்தைக் கேட்ட சாலமோனுக்கு அவர் கேட்காத செல்வத்தையும் புகழையும் இறைவன் வழங்கினார் (1அர. 3:13). எனவே, "அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக்கொடுக்கப்படும்" (மத்.6:33).

### 3. சமமான மனநிலை கொள்ளுங்கள்

"வறுமையிலும் வாழத் தெரியும், வளமையிலும் வாழத் தெரியும், வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ, குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன்" (பிலி. 4:12) என்னும் பவுலடியாரின் மனநிலை நம்மிலும் உருவாகவேண்டும்.

### 4. கொடுங்கள்

பிறருக்குப் பகிர்ந்து கொடுப்பதை இயேசு பலமுறை வலியுறுத்தினார் (மத். 19:21, லூக். 6:30, 35, 38, மத்10:, லூக்.21:3-4).

தொடக்கத் திருச்சபையினரும் தங்களிடம் இருந்தவை அனைத்தையும் பகிர்ந்து பொதுவுடைமை ஆக்கினர் (தி.ப. 2:44-45, 4:32-37).

"தம் நிலைக்கேற்றவாறு எவ்வளவு கொடுத்தாலும் அது இறைவனுக்கு ஏற்புடையதாகும்" (2கொரி. 8:12). "முக மலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்" (2கொரி. 9:7).

எனவே இருப்பவர்கள் பிறருக்குக் கொடுத்து இறையாசியைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள்.

# போகிறபோது!

பணியாற்றுகிற இடத்தில் நல்லுறவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பார்கள்.

ஒருவரை உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம்! ஆனால் அவரை உங்கள் பகைவராக மாற்றியே தீர வேண்டும் என்கிற கட்டாயம் எதுவுமில்லை!

நம்மோடு பணியாற்றுகிற பலர் மிகவும் நன்றாகப் பழகுவார்கள்! பணிவாகவும் கனிவாகவும் இருப்பார்கள்.

ஆனால் வேறு ஒரு நல்ல வாய்ப்பு வரும்போது-தான் தங்கள் முழு வீரத்தையும் வேகத்தையும் காட்டுவார்கள்!

யாரையும் பகைத்துக்கொள்ளத் தயங்க-மாட்டார்கள்! தங்களை அதுவரை கட்டிகாத்துக் காப்பாற்றிய நிறுவனத்தையே தூக்கி எறிந்து பேசுவார்கள்!

இன்று வேலைவாய்ப்புக்களும் பெருகி வருகிறது! கணனித் துறையில் நல்ல ஆட்களைத்தேடும் நிலை! எனவே போகிற போக்கில் ஏறிவந்த ஏணியை எட்டி உதைக்கிற பழக்கமும் வளர்கிறது.

ஒரு நிறுவனத்தில் இப்படிப்பட்ட நண்பர் ஒருவர் இருந்தார். போகும்போது தன் மேலதிகாரியை விரும்பம்போல் வசைபாடிவிட்டுப் போனார்.

புதிய நிறுவனத்துக்குப் போனார். சில வாரங்களுக்குப் பிறகு தனது மேலதிகாரியைப் பார்க்கப் போனார்.

தன்னிடம் வசை வாங்கிய அதே அதிகாரி மேலும் உயர்ந்த பதவியில் அங்கே அமர்ந்திருந்தார்.

நண்பர் மீண்டும் வேலை தேடினார். சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டுப் போனார்.

மூன்றாம் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்து ஒரு வாரம் கூட ஆகவில்லை! புதிய நிர்வாகம் அவரை வெளியேறச் சொன்னது! முந்திய நிறுவனம் அவருக்கு நற்சான்று வழங்கவில்லை என்று தெரிய வந்தது. காரணம் புரிந்தது!

உலகம் உருடை. எங்கேயும் யாரையும் எந்த நிலையிலும் நாம் மீண்டும் சந்திக்க வேண்டி வரலாம்!

அதை அந்த நண்பர் புரிந்து கொண்டாரா என்பது நமக்குத் தெரியாது.

நமக்குப் புரிந்தால் சரி!



**தேவையில்லாமல் ஒருவரை பகைத்துக் கொள்வது சரிதானா?**

**யாருடைய உதவி எப்போது தேவைப்படும் என்று நம்மால் முன்கூட்டிச் சொல்லிவிட முடியுமா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோர் தினம் (ஆனி 01)



**“நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் தம் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்” (யோவா 10:7-11).**

# வழிநடத்துதல்!

பயணம் செய்வோருக்குத் துணை செய்கிறது வழிகாட்டும் பலகை. செல்ல வேண்டிய இடத்தின் திசையும், அதன் தூரமும், பயணம் செய்வோர் அறிந்துகொள்ள முடிகிறது. சில நேரங்களில் தவறுதலாக வேறிடம் செல்வோரும் உண்டு. இன்றைய நாட்களில் பயணம் செய்வோருக்கு எளிதாக பாதை காட்டும் செயலிகள் வந்துவிட்டன. செல்பேசி இருந்தாலே போதும்! குடும்பங்களில் இருக்கும் அங்கத்தினருக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கின்றது. வீட்டில் இருக்கும் பெரியவர்கள் தான் பிள்ளைகளை, இளையோரை வழிநடத்த வேண்டும்.

“இயேசுவே வழி, அவரே நம் வாழ்வு” என்பதை நற்செய்தி எடுத்துக்காட்டுகின்றது. “இயேசுவே நல்ல ஆயர், அவரே நம்மை வழிநடத்துகிறார்” என்பதை யோவான் நற்செய்தியில் காண்கின்றோம். இல்லத் தலைவர், தலைவி எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பதற்கு இயேசு கூறும் இந்த உவமை சான்றாக அமைந்துள்ளது.

“உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஆடுகளுக்கு வாயில் நானே! எனக்கு முன் வந்தவர் அனைவரும் திருடரும், கொள்ளையருமே. அவர்களுக்கு ஆடுகள் செவிசாய்க்கவில்லை. நானே வாயில்! என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர். வெளியே வருவர். மேய்ச்சல் நிலத்தைக் கண்டுகொள்வர்.... நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் தம் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்” (யோவா 10:7-11).

குடும்பத்தில் உள்ள தந்தையும் - தாயும் குழந்தைகளுக்கு நல்ல ஆயராகத் திகழ்கின்றார்கள். அவர்கள் இல்லத்தின் வாயில்கள். இவர்கள் வழியாகவே பிள்ளைகள் உள்ளே போகின்றார்கள், வெளியே வருகிறார்கள், வாழ்வைப் பெறுகின்றார்கள்.

தங்களைச் சார்ந்து வாழும் பிள்ளைகள் வாழ்வைப் பெறும் பொருட்டு பெற்றோர் இருக்கின்றனர். தியாகத்தாலும், அன்பாலும், உழைப்பாலும் குடும்பத்தை உயர்த்த வேண்டிய கடமை பெற்றோர்களுக்கு உண்டு. நல்ல ஆயர் தம் ஆடுகளுக்காகத் தம் உயிரையே கொடுப்பதுபோல, பெற்றோரும் தங்கள் பிள்ளைகளுக்காகத் தங்கள் உயிரையே அளிக்கின்றனர். சுயநலத்தோடு பெற்றோர் வாழும்போது, பிள்ளைகள் நல்வாழ்வைப் பெறமுடியாது.

“கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டு விட்டு ஓடிப்போவார்” (யோவா 10:12). சில பெற்றோர் பிள்ளைகளை கருவிலேயே அழிக்கின்றனர். இன்னும் சிலர் குழந்தை பிறந்தவுடன் அதை கொல்கின்றனர். சிலர் குழந்தைகளை துரத்தி விடுகின்றனர். இன்னும் சிலர் குழந்தைகளை விற்கவும் செய்கின்றனர். கூலிக்குப் பணிபுரியும் வாழ்க்கை குடும்பத்தில் இருக்க முடியாது. நமது தற்கால கலாச்சாரங்களில் வாடகைக்கு மனிதர்கள் கிடைக்கிறார்கள். குடும்ப உறவுகளை விலைபேசினால், அங்கே அன்புக்கும், நேயத்திற்கும் இடம் இருக்கப் போவதில்லை. பணத்தையும், பொருளையும் முன்வைத்து உறவுகளைப் பின்தள்ளுவோர் கூலிக்கு ஆடுகளை மேய்ப்பவர் போன்று இன்னல் வரும் வேளையில் விட்டு விட்டு ஓடிப்போவார்கள். குடும்பங்களில் சிக்கல் வளர்ந்து விவாகரத்து வரை செல்வதற்கு பண ஆசை, பொருள் ஆசை மிக மிக முக்கியமான காரணமாக அமைகின்றது. நீதிமன்றங்களில் இருக்கும் வழக்குகளில் பெரும்பாலானவை குடும்ப வழக்குகள்தான். குடும்ப வழக்குகளில் அதிகமாக இருக்கும் பிரச்சினை சொத்து சம்பந்தப்பட்டதுதான்.

கூலிக்கு ஆடுகளை மேய்ப்பவரைப் போன்று கடமைகளைச் செய்வதற்கு பேரம் பேசுவதும், கடன்காரரைப் போன்று கடினமாக நடந்துகொள்வதும் உறவுகளை உடையச் செய்கினிறன. கூலிக்கு மேய்ப்பவருக்கு ஆடுகளைப் பற்றிக் கவலை இல்லை. குடும்பத்தைப் பற்றி கவலைப்படாத ஒருவர் நல்ல தந்தையாக இருக்க முடியாது. குடும்பத்தைப் பற்றி கவலைப்படாத ஒருவர் நல்ல தாயாக இருக்க முடியாது. பிள்ளைகளும், பெற்றோரிடத்தில் அன்பு கொண்டிருப்பது இயல்பாக இருக்க வேண்டிய பண்பு. பெற்றோருக்கு ஒரு வேதனை என்றால் சிறு பிள்ளைகள் சேர்ந்து அழுகின்றனர்.

குடும்பத்தில் இருக்கும் அங்கத்தினர்கள் ஒருவர் ஒருவரை அறிந்திருக்க வேண்டும். பிள்ளைகளின் தேவைகளைப் பெற்றோர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். “நல்ல ஆயர் தம் ஆடுகளை அறிந்திருக்கிறார். நல்ல ஆயன் நானே! தந்தை என்னை அறிந்திருக்கிறார். நானும் தந்தையை அறிந்திருக்கின்றேன். அதுபோல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன். என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக என் உயிரைக் கொடுக்கிறேன்” (யோவா 10:14-15).

தகவல் தொழில்நுட்பம் வெகுவாக நம்மை வளைத்துக் கொண்டது. செல்பேசிகளில் நமது நேரங்கள் கடந்து போகின்றன. முகநூல், டுவிட்டர், வாட்ஸ்-அப் போன்ற சமூக வலைத்தளங்கள் தொடுதிரை உலகினை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. மாயையான உறவுகளில் மகிழ்ச்சியைத் தேட முனைந்துள்ளோம். நேரிடைாக சந்திக்காமல் இணையத் தளங்களில் நமது உறவுகளை, உணர்வுகளை, எண்ணங்களை, வாக்குவாதங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம். தேவையில்லாத பல உரையாடல்கள், கருத்துப் பரிமாற்றங்கள் நம் உண்மையான உலகிலிருந்து நம்மை பிரித்து விடுகின்றன. இங்கே ஒருவர் ஒருவரின் தேவைகளை அறிவதற்கும், ஒருவர் ஒருவரின் உணர்வுகளைப் பகிர்வதற்கும் நேரமும் இல்லை, அதற்காக வாய்ப்பும் இல்லை என்று கூறும் அளவுக்கு நம் வாழ்க்கை முறை மாறிவிட்டது.

குடும்பங்கள் சிறக்க வேண்டுமெனில் குடும்பத்தில் உள்ள அங்கத்தினர்கள் யாவரும் கணிசமான நேரத்தை குடும்பத்தினருடன் செலவழிக்க வேண்டும். உணவு நேரம், செப நேரம், உரையாடி உறவாடும் நேரம் என்று குடும்பத்திற்கான நேரத்தை திட்டமிட்டு ஒதுக்கி, பயன்பெற முற்பட வேண்டும்.

ஆடுகளை ஆயர் அறிகிறார். ஆடுகளும் ஆயரை அறிந்து கொண்டிருக்கின்றன. பெற்றோரும் பிள்ளைகளை அறிந்து வைத்திருக்க வேண்டும். பிள்ளைகளும் பெற்றோர்களின் எண்ணங்களை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் பெற்றோருடன் பேசுவதற்கு நேரம் இல்லாதபோது, அவர்கள் பெற்றோரிடம் அன்பு வளர்க்க இயலாது. தந்தை உள்ளத்துடன், தாய் உள்ளத்துடன் பெற்றோர் பிள்ளைகளைக் கண்காணிப்பது அவசியம். பிள்ளைகளை சிறந்த பாடசாலைகளுக்கு அனுப்பினால் மட்டும் போதாது. பிள்ளைகளுக்குத் தேவையான பொருட்களை அளித்தால் மட்டும் போதாது. பெற்றோர் பிள்ளைகளுடன் தங்க வேண்டும், உரையாட வேண்டும், விளையாட வேண்டும். பெற்றோர் தங்களின் சிறு சிறு வேலைகளில் பிள்ளைகளின் ஈடுபாட்டையும் உறுதிப்படுத்த வேண்டும்.

பிள்ளைகளுக்கு சோர்வு ஏற்படும்போது உற்சாகத்தை, தோல்வி வருகின்றபோது நம்பிக்கையை, வெற்றி கிடைக்கின்றபோது தாழ்ச்சியை, உடல் சோர்வு ஏற்படும்போது ஆதரவை, சவால்கள் வரும்போது எதிர்நோக்கை - பெற்றோர் கற்றுத்தர வேண்டும். பிள்ளைகளைப் பெற்றோர் அறிந்தால்தான் அவர்களின் தேவைகளில் உதவிபுரிய முடியும். பெற்றோர் தருகின்ற உற்சாகத்திற்கும், ஆதரவுக்கும் உலகில் ஈடு இணை வேறு எதுவும் இருக்க முடியாது.

வளரிளம் பருவம் அடையும் பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும் இடையே சில மோதல்கள் உருவாக வாய்ப்பு இருக்கின்றது. சிறு குழந்தைகளாக இருக்கும்போது, பெற்றோர்தான் அவர்களுக்கு உலகம். அவர்கள் வளர்ந்து வாலிபப் பருவம் அடையும்போது உலகின் பரந்த நிலையை, உலகின் சவால்களை அறிகிறார்கள். பெற்றோரின் குறைகளும், அவர்களின் பலவீனங்களும் பிள்ளைகளுக்கு தெரிகின்றன. பிள்ளைகளின் தேவைகளை எல்லாம் பெற்றோர் நிறைவேற்றாதபோது கருத்து வேறுபாடுகள் வருகின்றன. சில நேரங்களில் வாக்குவாதங்கள், மனக்கசப்புக்கள் ஏற்படுகின்றன. பெற்றோர் - பிள்ளைகள் உறவு மென்மையானது.

இயேசு உயிர்த்த பின்பு தம் சீடர் பேதுருவிடம், “யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?” என்று மூன்று முறை கேட்டார். அதற்கு பேதுரு. “ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!” என்றார். மூன்று முறையும் இயேசு பேதுருவைப் பார்த்து “என் ஆடுகளை மேய், என் ஆடுகளைப் பேணி வளர்” என்கிறார்.

இளம் பருவம் அடைகின்ற பிள்ளைகளைப் பேணி வளர்ப்பது அவசியம். கருத்துடன் அவர்களை வழிநடத்துவது முக்கியம். அவர்களின் உலகம் வேறு, பெற்றோரின் உலகம் வேறு. பெற்றோர் பிள்ளைகளுக்கு அன்புடன் கூறினால், அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். பெற்றோர் பிள்ளைகளை அடித்துதான் திருத்த வேண்டும் என்றல்ல. அன்பாலேயும் திருத்தமுடியும். நல்ல ஆயராக பெற்றோர் திகழும்போது பிள்ளைகள் சிறந்த தலைவர்களாக உருவாகின்றார்கள்.

# தூய கன்னி மரியாளின் மாசற்ற திரு இருதய விழா



**இந்த பக்தி முயற்சிக்குக் காரணமானவை லூக்கா நற்செய்தியிலுள்ள ‘உமது உள்ளத்தையும், ஒரு வாள் ஊடுருவிப் பாயும்’ என்ற சிமியோனின் இறைவாக்கும் (லூக் 2:35) ‘அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம், தனது உள்ளத்தில் பதித்து காத்திருந்தாள்’ என்ற (லூக் 2:51) இறைச் சொற்றொடருமாகும். 12-13 நூற்றாண்டுகளில் இந்த முயற்சி தொடங்கப்பட்டது. புனித ஜீன் ஊதாஸ் 1648ல் மரியன்னையின் திரு இருதயத்திற்கான விழாவைக் கொண்டாடியவர். 21-7-1885ல் தான் இவ்விழா திருச்சபையில் கொண்டாடப்படலாம் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று சிறப்புமிக்க வஹாக்கோட்டை

# புனித அந்தோனியார் தேசிய திருத்தலம்

## வருடாந்த திருவிழா – 2018



**மாலை ஆராதனை**
**ஜூன் – 16**
**மாலை 7.00 மணிக்கு**

கண்டி மறைமாவட்ட ஆயர் **மேதகு கலாநிதி வியானி பர்னாந்து** ஆண்டகையின் தலைமையில்

## திருவிழா சிறப்புத் திருப்பலி

**ஜூன் – 17, காலை 8.30 மணிக்கு**

ஏனையத் திருப்பலிகள் : –

காலை 5.00 சிங்களம், காலை 6.30 தமிழ்,
நண்பகல் 12.00 சிங்களம், மாலை 5.00 சிங்களம்.

## புனித அந்தோனியார் பிறப்பு திருவிழா
## ஆவணி – 18 மற்றும் 19




## யாத்திரிகளின் விசேட கவனத்திற்கு

- வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, திருத்தலத்தின் மதிப்பினை பாதுகாக்கும் வண்ணம் நடந்து கொள்ளவும்.
- இப்புனித பூமி அமைந்துள்ள இடத்திற்குள் மதுபானம், இசைக்கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், மற்றும் செல்லப்பிராணிகள் ஆகியவற்றை கொண்டுவருவதை தவிர்க்கவும்.
- திருத்தலத்தின் உள்ளேயும், வெளியேயும் சாதாரண உடை அணியவும், உங்களது கூடாரங்களில் இருக்கும்போதும் ஒழுக்கமான உடைகளை அணிவது அத்தியாவசியமாகும்.
- தேவையற்ற விதமாக தங்க நகைகள், பணம், மற்றும் பெறுமதியான பொருட்களை கொண்டு வருவதை தவிர்க்கவும்.
- திருத்தலத்தல பூமியில் உள்ள வீடுகளை பெற்றுக்கொள்பவர்கள் அவற்றை துப்பரவாகவும் சேதம் விளைவிக்காத வண்ணமும் பாவிப்பது அவசியம் என்பதை கருத்திற் கொள்ளவும்.

அருட்பணி
டொம் சன்சன வசார (பு.ஆ.ச)
திருத்தல பரிபாலகர்
புனித அந்தோனியார்
தேசிய திருத்தலம், வஹாக்கோட்டை
0775 – 515616 066–2289210

(Q18N1524)


அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபய மாவத்தை கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com / www.colomboarchdiocesancatholicpress.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீபய மாவத்தை, கொழும்பு – 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்